

ஒப்பற்ற தலைவர்

# தந்தை செல்வா

தொகுப்பாசிரியர்கள்:

வெ. செ. குணரத்தினம் - ஐ. தி. சம்பந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. JOTHILINGAM
B A (Hons) Po-Sc M A Po-Sc
Dip in-Int-Af (BCIS) Dip-in-Edu(N I E)
ATTORNEY AT LAW
108/2 Walls Lane Colombo -15
Tel -011-4619140

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பற்ற தலைவர்
# தந்தை செல்வா

தொகுப்பாசிரியர்கள்:
**வெ.செ.குணரத்தினம்**
**ஐ.தி.சம்பந்தன்**

சுடரொளி வெளியீட்டுக் கழகம்

**15 Rutland Road**
**London E7 8PQ**
**United Kingdom**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்விபரம்

நூலின் தலைப்பு:ஒப்பற்ற தலைவர்: தந்தை செல்வா
தொகுப்பாசிரியர்: வெ.செ.குணரட்ணம், ஐ.தி.சம்பந்தன்
வகுப்பு: வாழ்க்கை வரலாறு
பதிப்பு: முதற் பதிப்பு, ஆவணி 2004 .
நூலின் அளவு: 14x21 சமீ (Demy)
பக்கங்கள்: 148 பக்கம், 15 புகைப்படங்கள்
அச்சு எழுத்து அளவு: 11 புள்ளி
வெளியீடு:
சுடரொளி வெளியீட்டுக் கழகம், ஐக்கிய இராச்சியம்
தட்டச்சும் நூல் வடிவமைப்பும்:
என்.செல்வராஜா, ஐக்கிய இராச்சியம்
அச்சுப்பதிப்பு: ஜே ஆர் அச்சகம்

## Bibliographical Information

Title:
**Oppatra Thalaivar: Thanthai Chelva**
Compilers:
**V.S. Gunaratnam,** I.T.Sampanthan
Class:
**Biography**
Edition:
**1st Edition, April 2003**
Publishers:
**Chudaroli Publication Society, U.K.**
Size:
**14x21cm (Demy)**
Pages:
148 **pages, 15 photographs**
Font size:
**11 pt.**
Type setting and Design:
**N.Selvarajah, U.K.**
Printers:
J.R. Print, London
Price:
£5 - US$10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஈழத்தமிழருடைய வரலாறு சரியாக எழுதப்பட வில்லை. அதனால் குழப்பநிலை ஏற்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். ''வந்தேறு குடிகள்'' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தென் ஆபிரிக்காவில் கூறியதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழர் வரலாறு பற்றிக் காலத்துக்குக் காலம் தமிழ் ஆய்வாளர்கள் எழுதி வைத்த சான்றுகளும் வரலாறுகளும் இன்று எமக்குப் பயன்படக்கூடிய சான்றுகளாக விளங்கு கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் பல திருப்பங்கள் ஏற்பட்டன. இந்தத் திருப்பங்களை உருவாக்கிய அரசியல் தலைவர்களின் வரலாறு முறையாக எழுதப்படவில்லை. ஒரு அரசியல் தலைவனின் வரலாறு, அவர் சார்ந்த இனத்தின் வரலாறாக அமைகின்றது. தென் ஆபிரிக்க விடுதலைக்கு பன்னெடுங் காலமாக பல தியாகங்கள் செய்த நெல்சன் மண்டெலாவின் வரலாறு, தென் ஆபிரிக்க சுதந்திரத்தின் வரலாறாக அமைகின்றது. ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒப்பற்ற பெருந்தலைவராக அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தலைவராக விளங்கியவர் மூதறிஞர் தந்தை செல்வா (எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கியூ.சீ.) அவர்களாவார்.

தந்தை செல்வா உருவாக்கிய இலங்கைத் தமிழரசுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி, தமிழர் விடுதலை முன்னணி, ஆகிய கட்சிகளுடனும் தலைவர்களுடனும் அடிமட்டத் தொண்டனாக செயற் பட்டவர் திரு.எஸ்.வி.குணரத்தினம் அவர்கள். ஆரம்ப காலத்திலிருந்து தந்தை செல்வா, கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம் ஆகியோருடன் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அவர் தமது அனுபவக் கண்ணோட்டத்தில் எழுதிய ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா என்ற நூலை சுடரொளி வெளியீட்டுக் கழகம் வெளியிடுவதில் பெருமையடைகின்றது.

நானும் தந்தை செல்வாவுடன் நீண்டகால அரசியல் ஈடுபாடு கொண்டவன் என்ற முறையில் இணைந்து இந்நூலை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

ஈழத்தமிழர் வரலாறு, ஈழத்தமிழ் அரசியல் தலைவர் வரலாறு ஆகியவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட வேண்டும் என்ற அடிப்படைக் குறிக்கோளுடன் செயற்படும் சுடரொளி வெளியீட்டுக் கழகம் தொடர்ந்தும் இப்பணியைச் செய்ய தமிழ்ப் பெருங்குடி மக்களின் பேராதரவை வேண்டி நிற்கின்றது.

அன்புடன்

**ஐ.தி.சம்பந்தன்**

**15 Rutland Avenue**
**London E7 8PQ**

01.04.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பதிப்புரை
பொருளடக்கம்
அணிந்துரை
முன்னுரை
வாழ்த்துரை

ஒப்பற்ற தலைவர்: தந்தை செல்வா 11
-வெ.செ.குணரத்தினம்

தந்தை செல்வா நாமம் வாழ்க (கவிதை) 69
-ஈழமைந்தன

சமஷ்டிக்கோரிக்கை முதல் தனிநாட்டுக்
கோரிக்கை வரை 70
-ஆர்.பாரதி

தந்தை செல்வாவின் அரசியற் சிந்தனை 77
-சந்திரசேகரம் பரமலிங்கம்

தந்தை செல்வா (கவிதை) 79
-கவிஞர் செ.நாகேந்திரன்

தீர்க்கதரிசனம் மிகுந்த தலைவர் 81
-மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

ஈழத்தமிழர் போராட்டமும் தந்தை செல்வாவும் 86
-ஐ.தி.சம்பந்தன்

இலங்கைப்பாராளுமன்றத்தில் தந்தை செல்வா:

இந்திய பாக்கிஸ்தானிய குடியிருப்போர்
பிரசா உரிமைச்சட்டம் 90

தேசியக்கொடி 100

ஈழத்துக்காந்தி: தந்தை செல்வா 108
-கரிகாலன்

மூதறிஞர் தந்தை செல்வா 113
சுதந்திர தமிழீழத்தை மீள நிறுவுவதே ஒரே தீர்வு 124
திருகோணமலையில் தந்தை செல்வா ஆற்றிய பேருரை 128
தந்தை செல்வா விட்டுச் சென்ற உயில் 143




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா' என்ற இச்சிறிய நூலின் தலைப்பு, அமரர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் எழுதிய, 'எனது நண்பர்கள்' என்ற நூலில் இடம்பெற்ற கட்டுரையின் தலைப்பாகும் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். தமிழீழத் தேசிய இனத்தை, இன – மொழி – நாடு என்ற அடையாளங்களை நிலைநிறுத்தி முதன் முதல் அரசியல் வடிவமைத்தவர் ஆகையால் அனைத்துத் தமிழ்பேசும் மக்களாலும் தந்தை செல்வா என அன்புடன் அழைக்கப்பட்ட தலைவர் ஆவார்.

தந்தை செல்வா தன்னை ஒருபோதும் தலைவராகக் கருதாது, ஓர் தொண்டனாகவே எண்ணிச் செயற்பட்டவர். 1950 –1960களில் தந்தை செல்வாவின் வாயிலிருந்து பிறந்த ஒவ்வொரு கருத்தும் செயலாக்கம் பெறும் – பெற்றதென்பதை அன்று வாழ்ந்தவர்கள் அறிவர். இது அன்றைய அரசியல் தலைமைகளும் செய்தி ஊடகங்களும் அறிந்ததொன்றாகும்.

அறப்போராட்டம், சத்தியாக் கிரகம், சட்ட மறுப்பு, கறுப்புக்கொடி காட்டல், ஊர்வலங்கள், தமிழரசு. தாயக மண், போன்ற சொற்பதங்கள் அன்று முதன்முதலில் ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றில் முழங்கக் கேட்டவையாகும் என்பதை எம்மைப்போல் பலரும் அறிவர். பொத்துவில் முதல் பருத்தித்துறை வரையிலும், மன்னாரில் இருந்து மட்டக்களப்பு வரையிலும், யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிப் பெரு நிலம் வரையிலும் தந்தை செல்வாவின் தலைமையை ஏற்று மக்கள் திரண்டெழக் கண்ட சிங்கள அரசுகள், கூட்டாட்சி பிரிவினைக்கு வழி வகுக்கும் – தமிழரசுக் கட்சி, வகுப்பவாதக்கட்சி என்றும், இடதுசாரிகள் – புத்திசீவிகள் – புரட்சிவாதிகள் எனத் தம்பட்டம் அடித்தவர்கள் உட்பட எல்லோரும் இன்று இடம் தெரியாது மறைந்து போயினர். இத்தனை கொடுமை களுக்குப் பின்னர் இன்றும் தீர்வுகள் எனப் பேசப் படுகின்ற போதெல்லாம் அன்று தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாவின் நேர்மை – நியாயம் – கூட்டுணர்வு நிறைந்த கோரிக் கைகள் பற்றி இன்றும், இனி வரும் காலங்களிலும் எண்ணிப் பார்க்காத யாரும் இருக்க முடியாது!

இதன் காரணமாகவே ' வாழு – வாழவிடு' என்று கூறி ஒப்பந்தங்கள் செய்து ஈற்றில் தனிநாடு என்ற கோரிக்கையைப் பாராளுமன்றத்தில் பிரகடனம் செய்தார். இவற்றின் மூலம் ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒப்பற்ற தலைவர் ' தந்தை செல்வா ' என அறிஞரும் மக்களும் அடையாளம் கண்டனர். இஸ்லாமியர், மலைநாட்டவர், மட்டக்களப்பார், யாழ்ப்பாணத் தார் எனப்பிரிந்து வாழ்ந்த மக்களை ஓரின மக்கள் என்ற தேசிய வடிவத்தின் கீழ் இணைத்து அவர்களின் உரிமை களுக்காகக் குரல் கொடுத்தார். அந்த ஒப்பற்ற தலைவனின் கருத்துகளுக்கு செவி சாய்க்காது அன்புவழிப் போராட் டங்களை இரும்புக்கரங்கள் கொண்டு அடக்கியதன் விளைவு தான் பின்னர் ஆயுதப் போராட்டமாகியதென்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே தான் ' ஒப்பற்ற தலைவர்' என்ற அடைமொழி வெறும் ஒப்புக்கன்று . அதில் உண்மை வரலாறு தொடர்வதாகி இன்றைய ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு உரமூட்டுவதாகும்.

இந்த உயர்ந்த உன்னத மனிதனின் வரலாறு சிறப்பாக இதுவரை ஆய்வு செய்யாது ஆவணப் படுத்தாது இருப்பது எதிர்கால அரசியற்போக்கை மழுங்கச் செய்வதாகும். எனவே தான் ' ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா' என்ற தலைப்புடன் சிறு குறிப்புக்கள் தாங்கி வரும் இந் நூல் எதிர்கால ஆய்வுகளுக்கும் வரலாற்றுப் பதிவுகளுக்கும் எமது மக்களின் விடுதலைக் கோரிக்கை அடங்கிய உரிமைப் போராட்டத்தை எடுத்துக் காட்டி நியாயப்படுத்துவதற்கும் திறவுகோலாக அமையும்.

இதனை உருவாக்கச் சிறந்த பணியாற்றிய அன்பர்கள் ஐ.தி. சம்பந்தர், பொன். பாலசுந்தரம், யாழ் இரத்தினம், என். செல்வராஜா ஆகியோருக்கு நன்றிகள் உரித்தாகுக.

வெ.செ.குணரட்ணம்

ஜெர்மனி
20 – 09 – 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இலங்கை ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாளிலிருந்து தமிழர்களது அரசியல் வாழ்வில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகியது. குடியுரிமை, மொழியுரிமை, தமிழர் தாயகம், பிரதேச அபிவிருத்தி, வேலை வாய்ப்பு போன்ற அடிப்படை உரிமைகளை பெரும்பான்மை இனம், பாராளுமன்ற அதிகாரத்தின் மூலம் பறித்தெடுக்க ஆரம்பித்த வேளையில், தந்தை செல்வா தமிழினத்தை அரண் அமைத்துக் காக்க முற்பட்டார். சமஷ்டி அரசியல் சட்ட தத்துவத்தை மைய மாகக் கொண்டு அரசியல் கட்சியை அங்குரார்ப்பணம் செய்து குறுகிய காலத்திலேயே – இலங்கைத் தமிழ் மக்களது ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்றுத் தன் வாழ்நாள் வரை தமிழர் தலைவராகத் திகழ்ந்தார்.

தந்தை செல்வாவின் வாழ்வு தமிழர் வாழ்வுடன் – அரசியல் வரலாற்றுடன் சங்கமமாகி விட்டது. அரசியல் எதிரிகளும் நேசித்த, கௌரவித்த பெருமைக்குரிய தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வையும், அவர் ஆற்றிய பணிகளையும், வாழ்ந்து காட்டிய முறையையும் தமிழ் உலகுக்குக் கொண்டுவர முனைந்த தொகுப்பாசிரியர்கள் திரு வெ.செ.குணரத்தினம் அவர்களும், திரு ஐ.தி.சம்பந்தன் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இந் நூலை வரவேற்பது தமிழர் கடமையாகின்றது.

**சந்திரசேகரம் பரமலிங்கம்**
சட்டத்தரணி (இலங்கை)
சொலிசிஸ்டர் (இங்கிலாந்து)

இலண்டன்
23.8.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வாழ்வையே வரலாறாக்கிய தமிழர்களுள் தந்தை செல்வநாயகம் ஒருவர். 1947 முதல் 1977 வரை முப்பதாண்டுகள் அவர் ஆற்றிய பணி ஈழத்தமிழரின் தன்மான உணர்வின் வெளிப்பாடாக அமைந்தது.

தமிழர் தனி இனமாக, தனி நாடுடையவர்களாக வாழ வேண்டும் என்ற கருத்தை இடையீடின்றி முப்பது ஆண்டுகள் கூறிவந்தவர் தந்தை செல்வநாயகம்.

முதலில் இவர் கூறிய கருத்துக்களை நகைப்புக்கிடமான கருத்துக்கள் என ஒதுக்கிய பலர் முப்பதாண்டுகளின் பின் அவையே ஏற்ற கருத்துக்கள் என ஏற்றுப் பாராட்டி அவருடன் இணைந்து அரசியல் நடத்த முன்வந்தனர்.

தமிழருக்குத் தனிநாடு வேண்டும் என்ற கருத்தைக் கூறுவது அரிது. அதையே அரசியலாக்கி, இறுதி வரையும் ஈடாட்டமின்றிக் கைக்கொண்டு, எழுகின்ற கருத்தை தலைமுறை தலைமுறையாகக் கையளித்து, அதை நீங்கள் வெற்றிகரமாக எடுத்துச் செல்லலாம் எனக் கூறி அத்தலைமுறையை வாழ்த்துவதும் வழிநடத்துவதும் வில்லங்கமான காரியம். இத்தகைய வில்லங்கமான காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர் தந்தை செல்வநாயகம்.

இத்தகைய பெரியவர் பற்றிய செய்திகளை ஒரே நூலில் எழுதி முடிக்க முடியாது. நாற்பது லட்சம் மக்களுக்குத் தொடர்ச்சியாகத் தலைவராக வாழ்ந்தவரின் முப்பதாண்டு காலத்தில் எத்தனையோ நிகழ்வுகள் நடந்திருக்கும். அத்தனை நிகழ்வுகளும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள். அவை முழுவதும் தொகுக்கப் பற்பல நூல்கள் தேவை. அவற்றுள் ஒன்றே இந்நூல்.

ஒரு மல்லிகைச் செடியை ஒருவர் எங்கு வளர்த்தாலும் நறுமணமுள்ள பூக்களையேதரும். அது போன்றே தந்தை செல்வநாயகம் அவர்களைப் பற்றிய எந்த நூலும் படிப்பதற்கு ஆர்வமுள்ள செய்திகளைக் கொண்டதாகவே இருக்கும்.


இந் நூல் அத்தகைய செவ்விய நூல். கூறிய செய்திகள் அனைத்தையும் ஆதாரத்துடன் கூறும் நூல். இந்நூலாக்கத்தில் ஈடுபட்ட அனைவருக்கும், சிறப்பாக நூலின் தொகுப்பாளர்களான என் இனிய நண்பர் ஐ.தி.சம்பந்தனுக்கும் வெ.செ.குணரத்தினம் அவர்களுக்கும் நூலின் உருவாக்கத்தில் முன்நின்று உழைத்த நூலகவியலாளர் திரு என். செல்வராஜா அவர்களுக்கும் என் உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு
யாழ்ப்பாணம்
வைகாசி தி.பி.௨033 (கி.பி.௨00௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா



சா.ஜே.வே.செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பற்ற தலைவர்: தந்தை செல்வா

-வெ.செ.குணரத்தினம்-

ஈழத்தமிழரின் நவீன வரலாறு பதியப்படும் போது தந்தை செல்வாவின் அரசியல் ஈடுபாடு கொண்ட 1947 முதல் 1977 வரையான முப்பதாண்டு காலம் ஒரு சகாப்தம் என நிச்சயம் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். யாழ்ப்பாண மத்தியதரக் குடும்பமொன்றில் பிறந்தவர் திரு. செல்வநாயகம்.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள், சிறந்த அறிஞரும் நாட்டுப்பற்றாளருமாவார். அவர் கிறிஸ்தவராக மாறி, மீண்டும் சைவசமயத்திற்குத் திரும்பியவர். Jaffna Past and Present என்ற தலைப்பின் கீழ் யாழ்ப்பாண வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட அவரது பேச்சு 1907இல் கட்டுரையாக வெளிவந்தது. 1910இல் பாவலர் அவர்கள் தெல்லிப்பழையில் நிறுவிய பாடசாலையில் செல்வா தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். பாவலர் நிறுவிய பாடசாலை பின்னர் மஹாஜனக் கல்லூரியாக மாறியது.

பாவலர் தமது உரையில், ''முன்னைய தமிழ்த் தலைவர்கள், விவேகத்துடன் கடமையாற்றத் தவறினர்'' எனச் சுட்டிக்காட்டியிருந்தார். அவரின் மாணவர்களுள் ஒருவராகத் திகழ்ந்து அவரின் எண்ணத்திற்கு இலக்கணமாக - தலைசிறந்த ஈழத் தமிழ்த் தலைவராக - தந்தையாக- தீர்க்கதரிசியாக- அரசியல் அறிஞராக- தமிழ் பேசும்- தமிழ்த் தேசிய இனத்தின் உணர்வாற்றலாக விளங்கியவர் தான், சா.ஜே ஜ.வே. செல்வநாயகம் என்ற ஒப்பற்ற தலைவர்- ஈழத் தமிழினத்தின் தலைசிறந்த அரசியல்அறிஞர். அவர் தமது ஆரம்பக் கல்வியை தெல்லிப் பழை மஹாஜனக் கல்லூரியிலும் விஞ்ஞானக் கல்வியை சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் கற்று இளங்கலை (பி.எஸ்சி) பட்டம் பெற்று, கொழும்பு சென் தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்றார். பின்னர், சட்டப்படிப்பை மேற்கொண்டு குடியியல் வழக்கறிஞராகிப் புகழ்பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பிரவேசம்

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல், சோல்பரி அரசியல் யாப்புக்கமைய, சுதந்திரத்திற்கு முன்னாக, 1947இல் (ஆகஸ்ட் 23 - செப்டெம்பர் 20) நடைபெற்றபோது, சிறந்த வழக்கறிஞராகிய திரு. செல்வநாயகத்தை, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம், தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற வைத்தார்.

இத்தேர்தலில் வெற்றியீட்டிய கட்சிகள் பெற்ற ஆசனங்கள் கீழ்க்கண்டவாறு அமைந்தன.
தமிழ் காங்கிரஸ் 7,
இலங்கை இந்திய காங்கிரஸ் 6,
லங்கா சமசமாஜக் கட்சி 10,
கம்யூனிஸ்ட் கட்சி 3,
லெனின் சார்பு 5,
ஐக்கியதேசியகட்சி 42,
தொழில்கட்சி 1,
சுயேட்சை 21,
நியமனம் 6.
மொத்த அங்கத்தவர் தொகை 101 ஆக விளங்கியது.

1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் நாள், இலங்கை சுதந்திரம் பெற்று, முதற் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் திருவாளர்கள் சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம் ஆகியோர் முறையே வர்த்தகம், தபால் மந்திரிகளாயினர். இம்மந்திரி சபையில் அங்கம் வகித்தவர்களில் ஒருவர் நாட்டின் கவர்னர் ஜெனரலாகவும் மூவர் பிரதமர்களாகவும் பின்னாளில் விளங்கினார்கள். திருவாளர் ஒலிவர் குணத்திலக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, டட்லி சேனநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அமைச்சர்களாக விளங்கினார்கள். இவர்களுடன் தந்தை செல்வநாயகம் நடத்திய அரசியல் போராட்டங்கள் பின்னர் நாடறிந்தவை.

## முரண்பாட்டின் வெளிப்பாடு

பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா ஜெயவர்த்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றோர் தமிழ் விரோதத்தையும், இனவாதத்தையும், பேரினவாதமாக, சிங்கள மக்களிடம் விதையூன்றி வளர்த்து, தமிழ்மக்களின் அரசியல் வழிகாட்டியாக விளங்கிய தந்தை செல்வநாயகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களை ஒட்டு மொத்தமாக செயற்படுத்தாது - செயலிழக்க வைத்து, நீட்டிய நேசக்கரத்தை வெட்டி வீழ்த்திய போதும் முப்பது ஆண்டுகளாக, "***நாட்டின் ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டுமாயின் கூட்டாட்சி ஒன்றே வழி. இன்றேல், நாளைய விளைவுக்கு நீங்கள் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். இன்று பேசுவதாயின் எம்முடன் பேசித் தீர்வு காணுங்கள் ஏனெனில் நாளை உங்களுடன் பேச யாரும் முன்வரமாட்டார்கள்***" என்று தீர்க்கமான- தீர்வுக்குரிய- தீர்க்கதரிசன மொழிகளைக் கூறிய தந்தை சொல் என்றும் மந்திரமாகும்!

21.08.1948 இல் பிரஜாவுரிமைச் சட்ட மசோதா மக்கள் மன்றத்தில் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா அரசினால் கொண்டு வரப்பட்ட போது, அதனை எதிர்த்து வர்த்தக அமைச்சர் சி. சுந்தரலிங்கம் பதவி விலகினார். அரசாங்கம் இம்மசோதாவுடன் இந்திய-பாக்கிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் சம்பந்தமான மூன்றாம் இலக்க மசோதாவையும் சமர்ப்பித்தது. இது சம்பந்தமான விவாதத்தில் தமிழ் காங்கிரஸ் சார்பில் உரையாற்றிய தந்தை செல்வா, வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் மசோதாவை எதிர்த்ததுடன், தமிழ்க் காங்கிரஸுடன் முரண்பட்டவர்களாய் வெளியேறினர். ஆயினும், தமிழ் காங்கிரஸ் தலைவர் சோல்பரி அரசியல் திட்டத்தை எதிர்த்து மிக நீண்ட உரையாற்றி சட்டசபையில் வாதிட்டவர். தமிழ் மக்களில், பத்து இலட்சம் மலைநாட்டவரின் குடியுரிமை-வாக்குரிமைகளைப் பறித்து, நாடற்றவர்கள் என நாமம் சூட்டிய அரசில் மந்திரியாகியது மிகப் பெரிய துரோகமாகக் கருதப்பட்டது!

## தந்தையின் தீர்க்கதரிசனம்

தந்தை செல்வா, அன்று, பாராளுமன்றத்தில் மசோதாவை எதிர்த்து உரையாற்றியபோது "***இன்று இந்தியத் தமிழர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. நாளை அது ஈழத் தமிழர்களுக்கு***" என்று அவர் அன்று கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகள் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் "சிங்களம் மட்டும்" என்ற சட்டஉருவில் ஈழத்தமிழர்கள் உட்பட அனைத்துத் தமிழ்பேசும் மக்களுக்கும் உரிய அதி உன்னத அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை மறுப்பாக மாறியது!

## பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்

ஒரு மனிதன் எதனையும் நீக்கி வாழலாம் வாழ முடியும் ஆனால், பெற்றெடுத்த தாயையும் அந்த அன்புத்தாயின் உதரத்தை விட்டு வீழ்ந்த நேரம் முதல் இணைந்துகொண்டதும் பிரிக்க முடியாததுமான நாட்டுப்பற்று-மண்பற்று என்ற ஊட்டம் இன்றி, எந்த ஒரு மனிதனாலும் உயிருள்ள-உணர்வுள்ள மனிதனாக வாழமுடியாத ஒன்றாகும். அதனாற்றான் மகாகவி பாரதியார் "***பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே***'' என்று பாடியுள்ளார்! உலகில் எதை எதையோவெல்லாம் கொடுமையானது எனக் கூறுகிறார்கள்-அட்டவணை இட்டுக் காட்டுகிறார்கள். ஆயினும், சொந்த மண்ணைப் பிரிந்து- பிறந்த அந்தச் சின்னக் கிராமத்தை மறந்து, சிறகடித்துப் பாடித் திரிந்து இன்புற்ற ஊர்களின் ஊட்டத்தை, ஒழுங்கைகள், மரங்கள், பற்றைக்காடுகள், பனைமரங்கள், தென்னைகள், இயற்கையின் இனிமைகளை எல்லாம் துறந்து, எங்கோ யாருக்கோ உரிய மண்ணில் நடைப்பிணங்களாக, உலாவருகின்ற எந்த வயதினராயினும், அகதியாக வாழும் எந்த ஒரு மனிதனைக் கேட்டாலும் அவன் அதை மறுக்க மாட்டான். இது ஈழத்தமிழனுக்கும் ஏற்புடையதாகும்.

## தாயகக்கோட்பாடு

ஈழத்தில் வாழுகின்ற தமிழர்களை வந்தேறு குடிகள் என ஆட்சியாளர் கூறிவருவதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் இவர்களின் இந்தப் போக்கு அறியாமையால் வந்ததன்று. இது திட்டமிட்டு நடத்தப்படுகின்ற ஒட்டு மொத்தமான இன ஒழிப்பு நட வடிக்கையின் ஓர் அங்கமாகும். வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் (இன்றைய எல்லைகள்) ஈழத் தமிழப் பேசும் இனத்தின் தாயகம்-பூர்வீகம் ஆகும். இதனை மிக நீண்ட காலமாகத் திட்டமிட்ட அரச நிலப்பறிப்பு மூலம் இழந்தவை போக, இருப்பவை தானும் எமக்குரியதாக்கிட வேண்டியதோர் தாயகக் கோட்பாடு, தந்தை செல்வா அவர்களால் உலகிற்கே பிரகடனப்படுத்தப்பட்டதொன்றாகும்.

"ஒரு நாட்டின், ஒன்றுக்கு மேற்பட்ட பூர்வீகக் குடியினர், தத்தமது பிரதேசத்தில் சுயநிர்ணய சுயாட்சி பெற உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவர்கள். இலங்கையின் மூத்த பூர்வகுடிகளாகிய தமிழர்கள் தமது பிரதேசத்தில் தமது தாயகத்தை நிலைநாட்டி, சுதந்திரமான மக்களாக வாழ்ந்தவர்கள். அவர்கள் தமது அடிப்படை உரிமையை- தாயகத்தை கூட்டாட்சியின் கீழ் தாமே ஆள்வதற்கு முழு ஆளுமையும் உடையவர்கள். அதன் பொருட்டுத் தான் கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்தோம். ஆனால் இன்று அது எமது குறிக்கோளை (தாயகக் கோட்பாட்டை) நிறைவேற்ற முடியாது எனத் தெரிந்து கொண்டு, ***தனிநாடாகப் பிரிவதைத் தவிர இழந்த உரிமைகளைப் பெற வேறு வழி கிடையாது***. கடந்த கால அனுபவங்கள் எமக்குக் கற்றுத் தந்த பாடங்கள் இதுவாகும். எமது முன்னோர்கள் புத்திசாலிகள். அவர்களுக்குச் சொந்த இராச்சியம் இருந்தது. இலங்கை வரலாற்றில் எமக்கு இடம் உண்டு. நாங்கள் "பிரிவினை"யைக் கோரவில்லை. நாங்கள் இழந்த உரிமையை மீளப் பெறவே இயக்கம் நடத்துகின்றோம்.

எமது கட்சி, தனிநாடு ஒன்றை நிறுவ முனைகிறது. இது இலேசான காரியமன்று. வில்லங்கமானது என்பதை நாமறிவோம். இது ஒரு கடினமான காரியம். நாங்கள், சிங்கள மேலாதிக் கத்திலிருந்து எம்மை விடுவிக்காது விட்டால் அழிவைத்தான் எதிர்நோக்க வேண்டும். இது உண்மை. ஆகையால் நாம் பிரிந்து வாழவே முயற்சிக்கிறோம். எனவே, கூட்டாட்சிக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம். எமது நடவடிக்கை சாத்வீகமானது."
( ஹன்சாட் 19.11.1976)

இவ்வாறு தமது பாராளுமன்றப் பிரகடனத்தில் அறிவித்து ஈழத்தமிழினத்தாயகக் கோட்பாட்டை 1977 பொதுத் தேர்தலில், ஈழத்தமிழினம் முடிந்த - மாற்றமுடியாத முடிவாக ஏற்றுக் கொண்டது. இதை உலகம் அறிந்திருந்தும், இன்றைய தமிழினத்தின் சார்பாக, நடைபெறுகின்ற விடுதலைப் போராட் டத்தை இன்னும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

## பூர்வீகக் குடியினர்

''மேலை நாட்டவர் வருகையால், இந்திய உபகண்டம், இலங்கை மற்றும் ஆசிய நாடுகளில் வழங்கிய பாரம்பரிய கலை, பண்பாடு, நிறைந்த வாழ்க்கை, தேசியச் செல்வங்கள் என்பன யாவும் சிதைக்கப்பட்டும் மறக்கப்பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்கப்பட்டவை பேரிழப்பாகும்" என கலாயோகி ஆனந்த குமாரசுவாமி தமது கருத்தை வெளியிட்டதைப்போல, ஆங்கிலேயர் வருகையால் ஈழத்தமிழர்களின் தாயகம் சுதந்திரம் இழந்து இணைக்கப்பட்டது தெரிந்த ஒன்றாகும்.

இலங்கைத்தீவின் ஆதிக்குடிகள் யார் என்பதும், இங்கு முதன்முதல் வாழ்ந்தவர்கள் யார் என்பதும், பலவாறாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தாலும், புத்தமதம் இங்கு அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னர் ஆண்ட மன்னன் மூத்தசிவன், அவன் வழித்தோன்றல் தேவநம்பியதீசன் (இது தமிழ்ப் பெயர்) என்பதை **தேவநம்பியதிஸ்ஸ** என மாற்றிய சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் வரலாற்றைத் திரித்தும் மறைத்தும் புகுத்தியும் வந்திருப்பதை அறியலாம்.

கி.பி.4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவம்சத்தில் மகா சேனன் ஆட்சி செய்த காலம் (கி.பி.304) வரை குறிப்புள்ளது. இதனை அடுத்து ஒரு நூற் றாண்டுக்குப் பின்னர் தொகுக்கப்பட்ட மகாவம்சத்தில் கதை வடிவில் 100 தொகுதிகள் கி.பி.1815 வரையும் காணப்படுவதாகும். இவை எழுதப்பட்ட மொழி (புத்த சாஸ்திரங்களின்) பாளி மொழி என்பது குறிப்பிடத் தக்கது. இதிலிருந்து தெரிவது யாதெனில், சிங்கள மொழி அன்று வளர்ச்சி குன்றிய மொழியாக இருந்தது என்பதே. சிங்களம் புத்தபிக்குகளால் வடமொழி, பாளி, தமிழ் ஆகிய பலமொழிச் சொற்களின் கூட்டு மொழியாக - ஒரு பிற்கால மொழியாக, புத்தமதத்தை நிலை நாட்டவும், தனித்துவமான ஓர் இனத்தை வடிவமைக்கவும் வேண்டி உருவாக்கப்பட்டதாகும். அதுமட்டுமின்றி, அம்மொழியில் இருப்பவை புத்த மதத் தத்துவ நூல்களும் பிற மொழி இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளும் பிற்கால இலக்கியங்களுமேயாகும். இவ்வாறு புத்த பிக்குகளின் அயராத உழைப்பின் விளைவாக எழுந்ததே சிங்கள மொழியாகும். ஆனால் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கண வளங்களும் பழமையும் எத்தன்மைத்ததோ அத்தன்மைத்ததும், நீண்ட வரலாறும் உடையவர்கள் தமிழர்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியதில்லை.

சிங்களச் சொல்லாக்கம் பற்றி, வரலாற்று அறிஞர் எஸ். ஜே. குணசேகரம் குறிப்பிடுகையில், தமிழ்மொழிச்சொற்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வாங்கப்பட்டதை எடுத்து விளக்கியுள்ளார்.

இரண்டாவதாக, புத்த சமயம் பரப்பப்படுவதற்கு முன்னர் இத்தீவில் இருந்த மதம் சிவமதம் - சைவம் என்பதற்கு, புத்த மதத்தைத் தழுவிக்கொண்ட தேவநம்பியதீசனின் தந்தை மூத்தசிவன் பெயர் சான்றாகும். ஏனைய மதங்கள் பரவுவதற்கு முன்னர் சிவனின் இருப்பிடமாக **''சிவன் ஒளிபாதம்''** என்றழைக்கப்பட்ட மலை, கைலாயம் - எனப்படும் இமயமலை போன்ற கர்ணபரம்பரை வழக்கமாகக் கருதப்பட வேண்டியது. பழம்பெரும் சிவத்தலங்களாக அமையப்பெற்று காலி, மன்னார், சிலாபம், திருக்கோணமலை ஆகிய இடங்களில் இருந்து வந்ததையும், அனுராதபுரத்தில் இருந்த சிவன் கோவில் இருந்த இடத்தில் பின்னர் விகாரை கட்டப்பட்டதாகவும் கூறப்படும், இவை தவிர்ந்த புறச்சான்றுகள், இத்தீவில் பழமைக்குடிகள் தமிழர் என்பதும், சிங்களவர் பற்றிய சிலரின் கூற்றைப்போல (சுவாமி ஞானப்பிரகாசர்) தமிழர்களில் இருந்து பிரிந்து சென்று மதம் மாறியவர்களும் பிற தேசங்களில் இருந்து வந்து குடியேறிய புத்த மதத்தவர்களின் கூட்டும் **சிங்களர்** என அடையாளம் பெற்றனர் என்பதும் கருதத்தக்கது.

ஒரு நாட்டின் வரலாற்றில் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மக்களின் குடியேற்றம், யுத்தம் என்பவற்றாலும் திட்டமிட்ட செயல்களாலும் பூர்வீக மக்களாக வாழ்ந்தவர்கள் சிறுபான்மையாகவும் வந்தேறுகுடிகள் பெரும்பான்மையாகவும் மாறி, வரலாற்றை மாற்றியமை எங்குமே காண முடியும். உதாரணமாக, சிங்கப்பூரில் சீனர்களும், அவுஸ்திரேலியா, நியுசிலாந்து நாடுகளில் வெள்ளையர்களும், தென்-வட அமெரிக்காவில் ஐரோப்பிய கறுப்பினமக்களும் குடியேறியும், குடியேற்றப்பட்டும், பூர்வீக இனத்தவர் சிறுபான்மையினராகி விட்டதைக் காணலாம். இலங்கைத்தீவில் நடந்ததும் இது போன்றதே என எண்ண முடிகின்றது.

## சிங்களப்பெயர்கள்

1958 இனக்கலவரத்தையொட்டி இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம், கே.எம்.பி.ராஜரத்தினாவின் முன்னோர்கள் தமிழ் இனத்தவர்கள் என்பதை கோனார்(கே) முதியான் (சே) இராசரத்தின(ம்) என விளக்கி, இது போன்ற பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணங்களை எடுத்துக் காட்டி உரையாற்றினார். ஷேக்ஸ் பியரின் நாடகத்தில் வரும் இரு பெரும் குடும்பங்கள் போன்று இலங்கை அரசியலில் சேனநாயக்கா, பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தனா பரம்பரையினர் மாறி மாறி அதிகாரத்தில் இருந்து தமிழருக்கு எதிராக இயங்கி வருவது தெரிந்ததே. ஆயினும் இவ்விரு குடும்பங்களின் முன்னோர் தமிழர்கள் என்பதும் வரலாறு.

பண்டாரநாயக்கா குடும்பம், நீலப்பெருமாள் என்ற தமிழரின் வழித்தோன்றல்கள் என்றும், ஜெயவர்த்தனா குடும்பம், தம்பி முதலியார் என்ற தமிழரின் வழித்தோன்றல்கள் என்றும் வரலாற்று ஆசிரியர் கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் (Saturday Review 9.8.1986) ஆங்கிலக் கட்டுரையில் விபரித் திருப்பதிலிருந்து அறியலாம். இவர்கள் பறங்கியருடன் தொடர்பு கொண்டு பின்னர் தமது பெயர்களையும் மாற்றி, வெள்ளைக்கார எசமானர்களுக்கு விசுவாசம் காட்டியதால் பெருநிலப்பரப்பைப் பெற்று தம்மை உயர்த்திக் கொண்டார்கள். தமக்குப் பெற்றோர் வைத்த தமிழ்ப் பெயர்களை உருமாற்றி அல்லது விடுத்து, மனைவி அல்லது கணவனின் சிங்களப் பெயர்களை மட்டும் தக்கவைத்துக் கொண்டதால் அப் பெயர்கள் நிலைத்து, குடும்பப் பெயர்களாக மாறிவிட்டன. இவர்கள் இவ்வாறாயின், சாதாரண பொதுமக்களின் சிங்களப் பெயர்கள் பற்றிக் கூற வேண்டியதில்லை. புள்ளே, பாலா, இரத்தின, நாயக்க, போன்ற தென்னாட்டு சமண பௌத்த பெயர்களைக் கூட்டியும் குறைத்தும் மேலைநாட்டவர்களின்-குறிப்பாக, போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயரின் பெயர்களையும் தத்தம் மதசார்புக்கு ஏற்ப பாவிக்கவும் தொடங்கினர்.

கி.பி. 5ஆம் 6ஆம்நூற்றாண்டுகளில், வைதீக மதங்கள் தலை தூக்கிய வேளை, பௌத்த, சமணத் துறவிகளுடன் மக்களும், வட இந்தியாவிலிருந்து வெளியேறி இலங்கைக்குள் குடிபுகுந்திருக்க வாய்ப்பிருந்தது. இதனை, 16ஆம் நூற்றாண் டில், இஸ்லாமியர் மதுரை மீதும், ஏனைய பகுதிகளின் மீதும் படையெடுத்த வேளை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற இடங்களில் இருந்து வந்து, யாழ்ப்பாணத்தில் குடிபுகுந்த சம்பவங்களுடன் ஒப்பீடு செய்யலாம். புத்தபிக்குகள், தந்திர மாகத் தாம் சார்ந்த மக்களின் வரலாற்றை, நிலை நிறுத்தி உறுதிப்படுத்தியது போல, தமிழ் மக்களால் நிலைநாட்ட முடியாது போய்விட்டது! யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர்கள், தமது வரலாற்றையோ, மக்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளையோ, கல்வெட்டாகவோ அல்லது வேறெந்த வடிவங்களிலோ எதிர்காலம் அறிய வழி செய்யாது விட்டார்கள். இதன் காரணமாக, துட்டகைமுனு, எல்லாளன், யுத்தத்துக்குப் பின், இலங்கை வரலாற்றில், தமிழர்கள் பற்றிய வரலாற்றை, மஹாவம்சம் கூறத்தவறி விட்டது அல்லது மறைத்து விட்டது. இதனை அடுத்து இராஜராஜசோழன் படையெடுத்து வெற்றி பெற்றதிலிருந்து தான் தமிழர் பற்றிய குறிப்புக்கள் தெரிய வருகின்றன. ஏனையவை சிறு குறிப்புக்களாகவும், ஊகங்களாகவும் உள்ளனவேயன்றி ஒட்டுமொத்த வரலாறாகத் தொகுத்தளிக்கப்படவில்லை. வெற்றுப் புராணங்களாகவும் தத்தமது விருப்பப்படியும் பாடியவை வரலாறாவதுமில்லை - ஏற்றுக்கொள்ளப் படுவதுமில்லை.

மேலை நாட்டவர்கள் வருகைக்குப் பின்னரும் கூட, வரலாற்றுக் குறிப்புக்களாகக் கிடைப்பவை, வெளிநாட்டவர்களால் எழுதப்பட்டனவே அன்றி, எம்மவரால் எழுதிக் காக்க முடியவில்லை. இனி வருங்காலத்திற்றானும், முடிந்தவரை, தகுந்த சான்றுகள் காட்டி, நடந்தவைகள் அனைத்தும், அடுத்து வரும் தலைமுறையினரின் அறிவூட்டலுக்கு விருந்தாகப் படைத்தல் மிகமிகத் தேவையானது. அது இனம், மொழி, நாடு என்ற மூன்றுக்கும் அருங்காப்பாக விளங்குவதாம்.

பராக்கிரமபாகு, புவனேகபாகு, சப்புமால்குமார போன்றவர்களின் சந்ததியினர் மலையாளப் பகுதியில் இருந்து வந்து வாழ்ந்தவர்கள் என்பர். அழகேஸ்வரா, அழகக்கோன், வீரவாகு-வீரபாகு, போன்ற பெயர்கள் தமிழ் உச்சரிப்புடையன மட்டுமன்றி, பராக்கிரமபாகு பரம்பரையினர் தமிழகத்துடன் தொடர்புடையவர்கள். புகழ்பெற்ற இராமேஸ்வரம் ஆலயத் திருப்பணி இவர்களால் மேற்கொள்ளப்பட்ட செய்தி, கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன், சிதம்பரம் ஆலயத்திற்கு வழங்கிய நன்கொடை திருப்பணிகள் - பாடல் மூலம் அறியக் கிடக்கின்றது. இத்தகைய வரலாற்றுக் குளறுபடிகளின் மத்தியில், ஈழத்தமிழர் அரசியலில் ஓர் விடிவெள்ளியாகக் கிளம்பியவர் தந்தை செல்வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வாவின் வழிகாட்டல்

தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருவாளர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்(காங்கேசன்துறை), கு.வன்னியசிங்கம் (கோப்பாய்) ஆகிய இரு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், வழக்குரைஞர் நவரத் தினம் மற்றும் தமிழபிமானிகள் பலரும் தாய்க்கட்சியில் இருந்து வெளியேறி, தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு உண்மையாகவும் விசுவாசத்தோடும் உழைக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இலங்கையின் தலைசிறந்த குடியியல் வழக்கறிஞராக விளங்கியவர் தம்மை முழுமையாகத் தமிழினத்துக்குத் தந்தார். 1947இல் பாராளுமன்ற உறுப்பினராகிய நாள் முதல், 26.04.1977இல் இவ்வுலக வாழ்வை நீக்கும் வரை, தமிழ்பேசும் மக்களுக்காகத் தன்வாழ்வை ஈகம் செய்தவர் தந்தை செல்வா எனலாம்.

கி.ஆ.பெ.விசுவநாதம் "எனது நண்பர்கள்" என்ற நூலில், "***அவரது எண்ணமெல்லாம் ஒன்றே ஒன்று. அது நாடு செழித்து, மொழி வளர்ந்து, மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே. இந்த ஒரே நோக்கத்திற்காக அவர் பல்லாண்டுகள் இராப்பகலாக உழைத்து வருகிறார்***" என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

அவர் தொடர்ந்து சுட்டுகையில், "***அவரது அரிய தொண்டுகளைப் பார்த்தும் கேட்டும் அறிந்து வந்திருக்கின்றேன். அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு சொற்றொடரிலேயே கூறவேண்டுமாயின், 'அவர் ஒரு ஒப்பற்ற தலைவர்' எனக் குறிப்பிடலாம்***" எனக் கூறியுள்ளார். முத்தமிழ்க் காவலர் தமது குறிப்பில், கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம் பற்றிக் குறிப்பிடுகையில், "***திரு வன்னியசிங்கம் இல்லாவிடில் தமிழரசுக் கட்சி 1949ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ம் நாள் தோன்றியிருக்க முடியாது. இந்த அளவு வளர்ந்திருக்கவும் முடியாது, என்று கூறுவது நானல்ல, அது 'தலைவர் செல்வநாயகம்' அவர்களது வாய்மொழி*** " என்று எழுதியுள்ளார்.

தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம், இரும்பு மனிதர் இ.எம்.வி. நாகநாதன் ஆகியோரின் அரும்பணிகளை வரலாற்றில் தமிழினம் மறக்கவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயநிர்ணயமுடைய பிரதேசம்

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சி) என்பது, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கிய தமிழர் தாயகம் - அங்கு இடம் பெறும் குடியேற்றங்கள் யாவற்றிலும் அப்பகுதி மக்களுக்கே முதலுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது அதன் முதலாவது கோட்பாடு. குடியுரிமை-வாழ்வுரிமை இழந்த மலைநாட்டுத் தமிழர்கள் அனைவருக்கும் அவற்றை வழங்குதல், சட்ட நிரூபண சபையில் கொண்டு வந்த மொழி பற்றிய தீர்மானத்திற்கு அமைய, தமிழுக்கும் சிங்களத்திற்கும் சமஉரிமை என்பன பிரதான கொள்கைகளாக விளங்கின! தமிழ் அரசு, சுயநிர்ணயமுடைய பிரதேசத்தைக் கொண்டதும், கூட் டாட்சியின் கீழ் தமிழ்மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதென்பதும் விளக்கமாகும்.

இதனை முன்னெடுத்து நிலைநாட்ட வேண்டி ஆரம்பவிழா 13.2.1949, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஸ்ரீலஸ்ரீ துரைச்சாமிக் குருக்களால் ஆசி வழங்கித் தொடங்கப்பட்டதே தமிழரசுக் கட்சி. அத்தொடக்கக் கூட்டத்தில், திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், இளைஞர்கள் சார்பில் அ.அமிர்தலிங்கம் (சட்டக்கல்லூரி மாணவர்), டாக்டர்



**தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியுடன் தந்தை செல்வா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.மு.வி. நாகநாதன் ஆகியோர் உரையாற்றினர். (ஆதாரம் - பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், ***யாழ்ப்பாண இராச்சியம்***, பக்.XLVI. )

''சங்கிலி மன்னன் ஆட்சி 1619ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட போது இறக்கப்பட்ட நந்திக்கொடி, 3.9.1949 இல், 330 ஆண்டுகளின் பின் மீண்டும் நல்லூர் சங்கிலித் தோப்பில் உயர்த்தப்பட்டது. அங்கிருந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள் அணி வகுத்து நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வீதிக்குச் சென்றனர்.'' (ஆதாரம்- மேற்படி நூல்). அன்று, அதன் கூட்டத்தைத் தடுக்கும் பொருட்டு, பறைகொட்டிக் கலகம் செய்ததும் நினைவில் உண்டு. யாழ்ப்பாணத் தொகுதியில் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில், ஆனைப் பந்தி என்னும் இடத்திற்கு அருகாமையில் உள்ளதாகையால் காங்கிரஸ் ஆதரவாளர்களால் குழப்பம் ஏற்பட்டதென்பர். ஆனைப்பந்தியில் காங்கிரஸ் தலைமைக் காரியாலயம் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

## மொழிச்சிக்கல் தோற்றம்

1944ஆம் ஆண்டு, சட்டசபையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களம் என்றவாறு ஓர் பிரேரணை கொண்டு வந்தார்.

"Sinhalese should be made the medium of instruction in all schools, that Sinhalese should be made compulsory subject in all public examinations, that legislature be introduced to permit the business of the state council to be conducted in Sinhalese also!"

இதனை திருக்கோணமலை, மட்டக்களப்பு, வடக்கு பிரதிநிதிகள் எதிர்த்து ''சிங்களம் மட்டும்'' என்பதை மாற்றி, ''சிங்களமும் தமிழும்'' என ஒரு திருத்தத்துடன், ஏற்றுக்கொண்டனர்.

1947இல் பாராளுமன்றம் சென்ற தந்தை செல்வா தமிழ்மொழி ஒதுக்கப்படும் நிலை பற்றி எச்சரித்தார். அதே போன்று, **கணிதமூளை** என வர்ணிக்கப்பட்ட (சுயேட்சை) உறுப்பினர்களாகிய திரு. சி. சுந்தரலிங்கம் (வவுனியா), திரு. சி. சிற்றம்பலம் இருவரும் அரசில் அங்கத்துவம் வகித்த போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாற்றிய தந்தை செல்வா, ''எந்த விலை கொடுத்தாயினும் மந்திரிப் பதவி பெறுவதல்ல'' என்று உரத்துக் கூறினார்.
(ஹன்சார்ட் 12-10-1947-பந்தி 705)

## முதல் முழக்கம்

பாராளுமன்றத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் பிரேரணை மீது, தமிழ் காங்கிரஸ் உறுப்பினராக இருந்து கொண்டு தந்தை செல்வா முதல் முழக்கம் செய்த போது, " **பிரிந்து செல்வதே தமிழர்க்கு உள்ள ஒரே வழி**" என்பதை வெளிப்படையாகவே பாராளுமன்றத்தில், ''***இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்கப்படும் போது அந்தச் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுவதற்கு நியாயமில்லை. இலங்கையின் ஏனைய பாகங்களிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை தமிழ் மக்களுக்கு வேண்டும்.***" (28.11.1947) என விளக்கினார். ( இது சுதந்திரம் அடைவதற்கு இரண்டு மாதங்கள் வரை இருக்கையில் ஆற்றிய உரையாகும்!)



**1972இல் பாரத நாட்டு முஸ்லீம்களின் தலைவர் காயிதே மில்லத் அவர்களை தந்தை செல்வா சந்தித்த உரையாடுகின்றார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவ்வாறு பாராளுமன்றத்தில், நிலைமையை நன்கு புரிந்துகொண்டு, எதிர்காலத்தை எண்ணிப் போலும் தனது உரையில் குறிப்பிட்டார். தமது 49வது அகவை முதல், 1947இல் இருந்து இவ்வுலக வாழ்வை நீக்கும் வரை (26.4.1977), பாராளு மன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் அவரது கனமான -நிதானமான - உண்மையான கருத்துரைகள், அவர் தலைமையில் நடந்தேறிய நடவடிக்கைகள்- சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம், மாநாடு, நடைப்பயணம், எனப் பல்வேறு செயலாக்கங்கள் இடம் பெற்றன. பட்டிதொட்டி முதல், கிராமங்கள், ஊர்கள், பட்டினங்கள் வரை, வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் எங்கும் அவர் சென்று மக்களுக்கு விளக்கம் அளித்து, உணர்வூட்டி, இன, மொழி வழியில் மக்களை இஸ்லாமியர், கிறிஸ்தவர், இந்து எனப் பேதங்கள் இன்றி ஓர் அணியில் பேரியக்கமாக மாற்றினார்!

கடந்த காலங்களில், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் பேசும்மக்கள், குறுகிய வட்டங்களுக்குள் முடங்கிக் கிடந்தனர் அல்லது முடக்கப்பட்டிருந்தனர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி, மன்னார் எனப் பிரிந்து வாழ்ந்தனர்- பிரித்தாளப் பட்டனர்! இவற்றையெல்லாம் தகர்த்து- ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையையும், பலத்தையும் வடிவமாக்கி உலகிற்கு அறிவித்த முதல் மனிதர் என்பதால், அனைவரும் பாசத்தோடு "**ஈழத் தமிழரின் தந்தை**" என மதித்து, "**தந்தை செல்வா**" என அழைத்தனர்.

எடுத்துக்கொண்ட கோட்பாடுகள், கொள்கைகள்- மறுக்கப்பட்ட நீதி, உரிமை, என்பவற்றிற்காகவும்- அநீதிகளை அம்பலப்படுத்துவதற்காகவும், காந்தீய வழியில், மன ஒடுக்கத்துடன், தமது தலைமையில் நடாத்தி வெற்றி கண்டவர் என்பதால் எல்லோரும் "ஈழத்துக் காந்தி" என அழைத்தனர்.

## தந்தை செல்வாவும் கோப்பாய்க் கோமானும்

முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டவர் காலமாகி விடவே அவருக்குப் பதிலாக திரு வன்னியசிங்கம் போட்டியிட நிறுத்தப்பட்டார். நியாயவாதியாகவும் சிறந்த தமிழ்ப் புலமையுடையவராகவும் சிறந்த பண்பாளராகவும் விளங்கியவர் வன்னியசிங்கம். தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டு, முதன் முதல் நடைபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ஆம் வருடப் பொதுத் தேர்தலில் வடக்கிலிருந்து தனித்து வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றவர். அப்போது, திருக்கோண மலையலிருந்து திரு. என். ஆர். இராசவரோதயம் தெரிவானார்.

முத்தமிழ்க் காவலர், திரு. வன்னியசிங்கம் பற்றிக் குறிப்பிடுகையில், "அவரது இவ்வுலக வாழ்வு 49 ஆண்டுகளே. அதிலும் அவரது குடும்ப வாழ்வு 16 ஆண்டுகளே. அதிலும் அவரது அரசியல் வாழ்வு 12 ஆண்டுகள் மட்டுமே. அன்பர் திரு வன்னியசிங்கம் அவர்கள் உயர்ந்த அறிவாளி, சிறந்த எழுத்தாளர், நல்ல பேச்சாளர், அரிய கருத்தாளர், கடின உழைப் பாளி, சிறிய முதலாளி, பெரிய கொடையாளி என வாழ்ந்து வந்தவர்'' என்று குறிப்பிட்டிருப்பவை அத்தனை பண்புகளையும் கட்டுரையாளர் அவரிடத்தில் பாசத்துடன் பழகிக் கண்ட உண்மை என்று கூறலாம்.
தமிழ் மண் மீதும் தமிழ் மொழி மீதும் தமிழ் இனத்தின் மீதும் பற்றுக் கொண்ட ஒருவரை அன்று கூற முடியுமாயின் தந்தை செல்வாவுக்கு அடுத்ததாக வன்னியரைத் தான் கூற வேண்டும். "பழைய மொடல் ஹில்மன் கார்'' , வெள்ளை வேட்டியும் நீண்ட சட்டையும், உச்சி வகுந்து சீவிய முடி, புன்சிரித்த முகம், தமிழ் மொழிக்கு உரிமை கோரி அன்று கோல்பேஸ் திடலில் சத்தியாக்கிரகத்தில் - சிங்களக் காடையர்களின் தாக்குதல் களைத் தாங்கியதால் நோய்வாய்ப்பட்டுப்போன பொலிந்த-வாட்டசாட்டமான உருவம், பாராளுமன்றத்திலும் சரி, அதற்கு வெளியேயும் சரி, ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றொழுக்கைப் போன்ற தர்க்கவாதப் பேச்சு, நகைச்சுவையும் நியாயமும் கலந்த தமிழ்ப்புலமை எனக் கண்டுணர்ந்த மக்கள், அவரைக் "கோப்பாய்க் கோமான்" என்று அன்று அன்புடன் அழைத்தனர். கொள்கை விளக்கம், அரசியல் அறிவுறுத்தல், பொய்மை இகழ்தல், உண்மை விளக்கம், கேள்விக்குப் பதில், இவை எல்லாம் வன்னியரின் தனித்துவத்தை என்றும் நினைவு படுத்துவனவற்றுள் குறிப்பிடத்தக்கன.

பாராளுமன்றத்தில், பண்டாரநாயக்கா, பிலிப் குண வர்த்தனா, என்.எம்.பெரேரா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம், தஹநாயக்கா போன்ற முதிர்ந்த அரசியல் வாதிகளுடன் சொற்போர் விளக்கம்- தர்க்கம் இட்டு, கூட்டாட்சி, மொழியுரிமை, குடியுரிமை, குடியேற்றம், ஆகிய தமிழ் பேசும் மக்களின் தலையாய விடயங்களில் விட்டுக் கொடுக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிட்டும், எதிர்ப்புக் காட்டியும், முழுமையாகப் பாடுபட்டவர். திரு. வன்னியசிங்கத்தின் அயராத உழைப்பும் குறிக்கோளும் மக்களிடையே தமிழீழக் கோரிக்கைக்கு வலுவூட்டியதெனலாம். இதனை தந்தை செல்வாவே கூறியுள்ளார்.

தந்தை செல்வாவின் "வலது கரம்" போன்று இணைந்து தலைவர் வன்னியசிங்கம் செயற்பட்டு வந்த 12 ஆண்டுகளும் ஈழத் தமிழரின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பமாக அமைந்து விட்டது. மகாவலித்திட்டம் முன்னெடுப்புக்கு முன்னதாகவே, டி.எஸ். , டட்லி, பண்டா ஆகியோரின் வழிகாட்டலில் தமிழரின் பாரம்பரிய- வளமான மண்பறிப்பு, அரசின் குடியேற்றத் திட்டம் என்ற பெயரால் அபகரிக்கப் பட்டது. இதற்கு அன்றைய அரசுகள், "தமிழர் குடியேற மறுப்பதால் பிற மாகாணத்தவர்களைக் குடியேற்ற வேண்டியுள்ளது" என்று சாட்டுக் கூறியது. அப்போது தலைவர் வன்னியசிங்கம், தந்தை செல்வா போன்றோரின் தீவிர முயற்சியால் மட்டுமே 1958 கல வரத்தைத் தொடர்ந்து கிளிநொச்சி, வவுனியா, வவு னிக்குளம், செட்டிக்குளம், வன்னி போன்ற இடங்களுக்கு குடாநாட்டில் இருந்து கணிசமான தொகையினர் சென்று குடியேறினர்.

இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பாராளுமன்றத் தொகுதி நிலப்பரப்புக்கள் சிங்களக் குடியேற்றங்களால் விழுங்கப்படாது தப்பியுள்ளதென்றால், அதற்கு தமிழரசுக் கட்சியும் தந்தை செல்வா- தலைவர் வன்னியசிங்கமும், தன்மானத் தமிழ்த் தொண்டர்களுமே காரணமாகும். "மொழிப் பிரச்சினையைக் காட்டிலும் மண்பறிப்பு ஓர் இனத்தின் உயிர்நாடி" என்று வலியுறுத்தி வாதிடுவார் வன்னியசிங்கம்.

தமிழ்மொழி, இலக்கண இலக்கியம், ஆங்கிலம், சைவசமயத் தத்துவங்கள், என மிகவும் ஆழ்ந்து கற்றுத் தேறியவர் வன்னியசிங்கம். யாழ்ப்பாண சமூக அமைப்பு முறை பற்றி மிகவும் தெரிந்தவர். எனவே தான், தாம் முன்னின்று, கிறிஸ்தவரான திரு செல்வநாயகத்தை பெரும்பான்மை இந்து மக்களைக் கொண்ட மக்களின் உரிமைகளைப் பெற அமைக்கப் பட்ட கட்சிக்குத் தலைமை ஏற்க வேண்டிக் கேட்டார். நால்வர் தேவாரங்கள், திருக்குறள் போன்ற பாடல்களில் இருந்து உதாரணங்கள் தாமே இசைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் செய்வதில் வன்னியருக்கு அவரே நிகர்.

1950களில், பாரதி படிப்பகம் திறப்பு விழாவில், கோப்பாய்- இருபாலைக் கிராமத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், நகைச்சுவையுடன், முன்பு தாம் இது போன்றதோர் திறப்பு விழாவில் கலந்து கொண்ட வேளை, தேவாரம் பாடுமாறு அங்குள்ள ஒருவரை விழா அமைப்பாளர்கள் அழைத்தனர். அவரும் வந்து "மண்ணாவது திண்ணம்" என்ற தேவாரத்தைப் பாடினார். அவர் பாடியவாறே ஒரு வருடத்துக்குள் அதற்கு மூடுவிழா நடந்துவிட்டது எனக் குறிப்பிட்டார். அதனைக் கேட்ட மக்கள் கைகொட்டி, சிரித்து ஆரவாரித்த சம்பவம் இன்றும் நினைவில் உள்ளது.

## தீண்டாமை எதிர்ப்பு

திரு. வன்னியசிங்கம், விடுதலை விரும்புகின்ற ஓர் இனம் தனக்குள் ஒரு சிலரின் உரிமைகளை மறுப்பதும், சமநீதி தர மறுப்பதும் ஒழிக்கப்படல் வேண்டும் என உரத்துக் குரல்கொடுத்து, சமபோசனம், சமநீதி தந்து, தீண்டாமை தமிழரின் சாபக்கேடு எனச் சாடியவர். அது மட்டுமன்றி, 1956இல் யாருமே எண்ணிப் பார்க்காத நேரத்தில், பல உயர்சாதிப் பெரியார்களின் கோபத்திற்கு ஆளாகியபோதும், அஞ்சாது பாராளுமன்றத்தில் தன்னந்தனியாக (தனியார் பிரேரணையாக) தீண்டாமைத் தடைச்சட்ட மசோதாவைக் கொண்டு வந்தவர் என்றால், அவரின் குறள்நெறி பாய்ச்சிய உள்ளப்பாங்கு இன்றும் என்றும் எண்ணி வியக்க வைக்கும் ஒன்றாகும்.

1958 கலவரத்தை அடுத்து சத்தியாக்கிரகப் போராட்டம், சட்ட மறுப்பு நடவடிக்கைகளால் தந்தை செல்வா உட்பட அனைத்துத் தமிழரசுக் கட்சி உறுப்பினரும் பனாகொடயில் சிறைவைக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட பின்னர், கலவரத்தின் கொடுமைகள், கொடூரங்கள், தாக்கங்கள் பற்றி தந்தை செல்வா புள்ளிவிபரங்களுடன் பேசியதை அனைவரும் அன்று அறிவர். திரு வன்னியசிங்கம், 1959ம் ஆண்டு இடைக்காட்டில் (கோப்பாய் தொகுதி) நடை பெற்ற திருக்குறள் மாநாட்டில் ஆற்றிய ஆராய்ச்சியுரை வாயிலாக, அரசியலில் மட்டுமன்றி, சமூக அறிவியலிலும் அவரது ஆழத்தை உணர முடிந்தது. தமிழக அறிஞர்களே அவரது அறிவாற்றலைப் புகழ்ந்து பாராட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வாவுடன் இணைந்து தமிழர் நல்வாழ்வுக்காக அவர்செய்த சேவைகள் வரலாற்றில் என்றும் மறக்க முடியாதவை. அன்று யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை, அனைவருக்கும் வழிபாட்டுக்காகத் திறந்து விட்டதில் யாழ்ப்பாண அரச அதிபர் ஸ்ரீகாந்தா போன்றோருடன் இணைந்து சமூக நீதியை நிலைநாட்டி மகிழ்ந்தார்.

ஈற்றில், 24 மணித்தியாலங்களில் சிங்களத்தை ஆட்சி மொழி ஆக்குவேன் என வாக்குறுதி அளித்து, வாக்குகளைப் பெற்று, அரசமைத்து, தமிழரசுக் கட்சியின் கீழ் மக்கள் திரண்டெழுந்தது கண்டு திகைப்படைந்து, "பண்டா-செல்வா" என்றதோர் உடன்பாட்டைக் கைச்சாத்திட்டுப் பின்னர், புத்தபிக்குகளின் நெருக்குதலினால் அவ்வுடன்பாட்டைக் கைவிட்டு தமிழர்களை ஏமாற்றியதாக எண்ணிக்கொண்ட பண்டாரநாயக்கா, கடைசியாக பாராளுமன்றத்தில், 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17ம் திகதி மாரடைப்பினால் மறைந்த கோப்பாய்க் கோமானுக்கு இரங்கலுரை செலுத்திய சில நாட்களில் புத்தரக்கித்த என்ற பெரியபிக்குவின் எடுபிடியாகவிருந்த சோமராம தேரோவினால் சுடப்பட்டு இறந்தது 26.09.1959இல்!

சரியாக இருபத்தியெட்டு ஆண்டுகளின் பின்னர் வந்த 26.09.87ம் நாள் இன்றும் விடுதலை வரலாற்றில் ஈழத்தமிழருக்கு மிகப் புனிதமான நாளாகும். தியாக தீபம் - திலீபன், உலக வரலாற்றில் முதன்முதல் உயிர் பிரியும் வரை உண்ணாநோன்பு இருந்து உயிர் தமிழுக்கும் உடல் ஆய்வுக்கும் ஈந்து தமிழர் உள்ளங்களில் குடியேறிய தினம். வன்னியர் மறைந்தாலும், வரலாற்றின் தொடராக விடுதலை வேள்வி, அவர்கள் எண்ணி வாழ்ந்து மறைந்தாலும், என்றோ ஒரு நாள் மலரும் தமிழீழத்தில் அவரின் ஆத்மாவின் ராகங்கள் இசையாக ஒலிக்கும்.

## தாயக மீட்பு

இழந்த பொருளை இடம் தெரிந்து, மீட்பவன் வீரம் செறிந்தவன். அவன் பொருளின் உடமைக் குரியவன்! பொருளைத் திருடியவன் அல்லவா கள்வன். அவனிடம் இருந்து பொருளை மீட்பதைப் போன்றதே பொன்னை விட மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயக மண்ணை மீட்பதுமாகும்

தமிழீழத்தை, எங்கள் பொன்னிலும் மேலான பொருளான பொக்கிஷத்தைப் பறித்தெடுத்த போர்த்துக்கேயக் கள்வர் கூட்டம், 100 ஆண்டுகள் போராடித்தான் அதைப்பறிக்க முடிந்தது. அதனை மீட்டுத் தமதாக்கினர், அடுத்து ஆங்கிலேயர்-தத்தெடுத்து- ஒட்டி வைத்து, விட்டுக் கொடுத்து விலகிச் சென்றனர். "எமது தாயக மண் எமக்கு- உங்கள் தாயகம் உங்களது'' என்ற எங்கள் தலைவர்கள், தன்மானம் கொண்டவர்கள் வழியில்- மண்ணின் மைந்தர்கள்- வீரமறவர்கள் போரில் நின்று, பறிபோன சொத்தை மீட்பது எவ்வாறு தவறாகும்? ஏ, உலகமே கூறு!

## விந்தை மனிதர் தந்தை செல்வா

மொழியுரிமையும் நிலவுரிமையும் இழந்து போயின், ஈழத்தமிழினம் அடிமைப்பட்ட இனமாகவே வாழ நேரிடும் என்றும், அவற்றை எப்பாடு பட்டும் பெற வேண்டும்- பெற்றே தீர வேண்டும் என்பது தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம் ஆகியோ ரின் முடிந்த முடிவாகக் காணலாம். அதற்காக, ஈழத்தமிழின மக்களை ஒரு கொடியின் கீழ் இணைத்து பேரியக்கமாக மாற்றிய விந்தை மனிதர் தந்தை செல்வா என்பது மிகப் பொருந்தும்.

1958ம் ஆண்டு கலவரத்திற்குப் பின்னர், வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களை, தாயகப்பகுதிகளில் நிரந்தர வாழ்விடத்தை வைத்துக் கொள்ளும் முகமாக, பெருநிலப் பகுதிகளில் குடியேறுமாறும், தமிழ்மக்களையும் முதலீடு செய்து தொழில் வளங்களை வளரச் செய்யுமாறும் செல்வந்தர், வர்த்தகர் என அனைவருக்கும் அறிவுறுத்தியது தந்தை செல்வாவின் தலைமையில் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி. ஆனால் தீவிர கட்சித் தொண்டர்கள், விவசாயிகள் போன்றோர் மட்டுமே குடியேற்றத் திட்டங்களில் அக்கறை காட்டினர்.

## கிழக்கு பறிபோனது!

1827இல் எடுக்கப்பட்ட நாடு தழுவிய முதல் குடிசன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டின் பின், 1881, 1891, 1901, 1911, 1921, 1946, 1952, 1963, 1971, 1981 வரை குடிசன மதிப்பீடு எடுக்கப்பட்டது. அதற்குப்பின், தொடரும் விடுதலைப் போராட்டத்தினால் மக்கள் இடம் பெயர்ந்தும் நிலைமைகள் அழிந்தும் அகதிகளாகவும் வெளிநாடுகளை நாடிப் புலம்பெயர்ந்து சென்றும் நிலை குலைந்து விட்டதனால், அரசாங்க குடிசனமதிப்பு நடாத்த முடியாத தொன்றாகிப்போனது.

கிழக்கு மாகாணமானது, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்குகிறது. கிழக்கு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பு, நீர் நிலைகள், நீங்கலாக 9622 சதுரமைல்களாகும். இதில் மட்டக்களப்பு 2464 சதுரமைல்கள், அம்பாறை 4539 சதுர மைல்கள், திருமலை 2618 சதுர மைல்களையும் கொண்டவை.

முதலாவது கணக்கெடுப்பில் திருமலை மாவட்டத்தில் சிங்களவர்களின் சனத்தொகை 250 ஆகக் கணக்கிடப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 69வீதம் தமிழர்களும் 31வீதம் முஸ்லீம்களும் வாழ்ந்தனர். திருக்கோணமலை மாவட்டத்தில் 82வீதம் தமிழ் மக்களும் 16வீதம் முஸ்லீம்களும் 2வீதம் சிங்களவரும் வாழ்ந்தனர். கடைசியாக நடாத்தப்பட்ட 1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி, திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்கள் எண்ணிக்கை 93.510 ஆகவும் முஸ்லீம்கள் 74.403 ஆகவும், சிங்களவர் 86.341 ஆகவும் கணக்கெடுக்கப்பட்டனர்.



**மலையகத்தலைவர் சௌம்யமூர்த்தி தொண்டமானுடன் மூதறிஞர் தந்தை செல்வா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையின் முழுச் சனத்தொகையில் தமிழர்கள் 36.4 வீதமாகவும் முஸ்லீம்கள் 28 வீதமாகவும், சிங்களவர் 33.6 வீதமாகவும் இருப்பதைக்காணலாம்.

கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகை 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 976.475 ஆகும். இதில் தமிழர்கள் 41.9 வீதம், முஸ்லீம் 32.2 வீதம், சிங்களவர் 24.9 வீதம் ஆகும்.

இம்மாற்றம், அம்பாறை, திருகோணமலை ஆகிய தமிழர்களின் தாயகமண்ணில் சிங்களக் குடியேற்றங்கள்-அரசினால் திட்டமிட்டு நடாத்தப் பட்டதன் விளைவால் பறிபோய் விட்டதைக் காட்டுவதாகும். இருபதாண்டுகளாக மக்கள் இடப்பெயர்வுகள், இன ஒழிப்பு, பிறப்பு விகிதம் குறைவு, நில ஆக்கிரமிப்பு, எனப் பலவகைக் காரணங்களினால் தமிழரின் பாரம்பரிய தாயகம் மேலும் குறுகிவிட்டதைக் காணலாம். இதன் காரணமாகவே- நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதென்றால், வடக்கு-கிழக்கு இணைவதை, பெரும்பான்மை இனத்தவர்களின் தலைமைகள் எதிர்த்து வந்ததைக் காணலாம். தமிழ்ப் பிரதேசத்தின் இழந்த ஒரு அங்குல நிலம் தானும் மீட்கப்பட வேண்டியதாகும் என்பது உண்மையானது.

## அழிவு முரண்பாடுகள்

இன விடுதலை, உரிமைகள் என வரிந்து கட்டிக் கொண்டு வருபவர்கள், தலைவர்களாய் இருந்தாலும், கட்சித் தொண்டர்களாய் இருந்தாலும், கருத்து முரண்பாடுகளை பேசித் தீர்வு காண்பதே சிறந்த பண்பாகும். ஆயினும் கடந்த காலங்களில் அரசியல் லாபம் கருதி, தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாகட்டும் என்றவாறு, அழிவு முரண்பாடுகளினால் உரிமைப் போராட்டங்களும் நியாயபூர்வமான கோரிக்கைகளும் நலிந்து போனதுண்டு.

## பல்கலைக்கழகக் கோரிக்கை

முழுமையான தமிழ்ப் பல்கலைக்கழகத்தை, திருக்கோணமலையில் அமைக்குமாறு தந்தை செல்வா தலைமையில், தமிழரசுக் கட்சி கோரிய போது, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் இந்துப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரியதும், தந்தை செல்வா கூட்டாட்சிக் கோரிக்கை கோரிய போது ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒற்றையாட்சியை ஆதரித்ததும், பண்டா-செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி - செல்வா ஒப்பந்தத்தையும் அமுல் நடத்தவிடாது தடுப்பதில் சிங்களவர்கள் மட்டுமல்ல தமிழ்த் தலைவர்கள் சிலரும் ஈடுபட்டனர். இவை ஒட்டு மொத்த மக்கள் நலன்களுக்குப் பாதகமான செயல்கள் எனத் தெரிந்துகொண்டும், அதில் ஈடுபட்டது அழிவு முரண்பாட்டின் வெளிப்பாடாகக் கொள்ள வேண்டும். இது போன்ற சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டி யார் குத்தினாலும் சரி, தமிழ் மக்களுக்கு அரிசி கிடைத்தால் போதும் என்று தந்தை செல்வா விளக்கம் செய்ததும் அறிந்ததே.

மக்களை வழி நடாத்தும் தலைவர்களுக்கிடையில் இடம் பெற்ற ''கனவான் ஒப்பந்தங்கள்'' (Gentlemens' Agreements) நிறைவேற்றப் படுவதற்குப் பதிலாக மீறப்பட்டதையே வரலாறு குறிக்கின்ற படியால், வருங்காலத்தில் இடம்பெறும் இது போன்ற ஒப்பந்தங்களும் மீறப்பட மாட்டாதென்பதற்கு உத்தரவாதம் இல்லை.

எனவே தான், இழக்கப்பட்டது மொழியுரிமை என்றாலும், நிலவுரிமை என்றாலும் மற்றெந்தவொரு அடிப்படை உரிமை என்றாலும் போராடிப் பறித்தெடுக்க வேண்டியதென்பது



**1972இல் தந்தை செல்வா தமிழக அரசியல் தலைவர் ம.பொ.சிவஞானகிராமணியாரை சந்திக்கின்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் ஒரே ஒரு பாரிய கடமையாகும் என்பதை உணர்த்தி, தந்தை செல்வா, "தமிழர்கள் போராடி அழிந்தாலும் அழிவார் களேயன்றி சிங்களவருக்கு அடிமையாக வாழ மாட்டார்கள்" என்று கூறிச் சென்ற மந்திர வார்த்தைக்கு ஏற்ப, இன்றைய போர்க்கோலம்- என்பது இழந்த உரிமைமீட்பாகக் கருத வேண்டியதொன்றாகும்.

## மறக்க முடியாதவர்கள்

1505 முதல் 1948 வரை ஆண்ட மேலை நாட்டு எசமானர்கள் பின்னர் சிறிது சிறிதாக அதிகாரங்களைத் தமதாக்கி, தமிழர்களை இரண்டாந்தர மக்களாக்கி, அடிமைப்படுத்தத் தொடங்கி, அரை நூற்றாண்டு கண்ட இன்று வரை, வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற தந்தை செல்வா, வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற தலைவர் பிரபாகரனும் ஈழத்தமிழர்கள் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாதவர்கள்.

யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைந்த பின்னர், தோன்றிய பலர், காலத்துக்குக் காலம் தம்மை அடையாளம் காட்டிய போதும், அவர்கள் பின்னர் காணாமலே போய்விட்டார்கள். இத்தகையவர்களுள், பொன்னம்பலம் சகோதரர்கள் சட்ட சபையிலும் வாலிபர் காங்கிரஸ், தமிழர் மகாசபை, பாராளுமன்றம், விடுதலை இயக்கங்கள், என அடையாளம் காட்டிய பலருள் தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் ஆகிய இருவரைத் தவிர மற்றையவர்கள், தங்களிடமிருந்த ஏதோ ஒரு குறையால் முகம் இழந்து போனவர்கள் எனக் கூறலாம்.

தந்தை செல்வா பற்றி அவருடன் நன்கு தெரிந்து உறவாடி உணர்ந்து பழகியும் கொள்கைப் பிடிப்பால் அவருடன் செயற்பட்டவருமாகிய பேராசிரியர் நேசையா குறிப்பிட்டவாறு-

(Mr. Chelvanayagam was undoubtedly the great Tamil leader. Ponnambalam Arunachalam had thought in terms of the Ceylon's self government within the Empire and of the culture of the Ceylonese. Ananda Coomaraswamy wrote about the rightful place of the mother tongue in 1906 when even Ananda College did not teach Sinhalese. Arunachalam too wrote in a similar vein. No doubt, Chelvanayagam was nowhere near Arunachalam, as a scholar. Arunachalam later in his career



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

thought in terms of some communal representation for the Tamils. But it was Chelva who first thought in terms of Autonomy; National consciousness and the territorial integrity of the Tamil Nation.)

"திரு செல்வநாயகம் ஓர் மாபெரும் தலைவர் என்பதில் சந்தேகம் இல்லை. பொன். அருணாச்சலம் பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் பண்பாட்டினையொட்டிய சுயாட்சி பற்றி எண்ணியவர். ஆனந்தா குமாரசாமி, தாய்மொழியின் தேவை பற்றி, ஆனந்தாக் கல்லூரியில் சிங்களம் கற்றுத் தர நினைப்பதற்கு முன் 1906இல் குறிப்பிட்டிருந்தார். அருணாச் சலமும் அவ்வாறு எண்ணினார். கல்வித்தகைமையில் செல்வ நாயகம் அருணாச்சலத்துடன் ஒப்புநிற்க முடியாத தென்பது சந்தேகத்துக்கிடம் இல்லாத தொன்று. பிற் காலத்தில் தமது கருத்தில் தமிழர்களுக்கு இனவாரியான பிரதிநிதித்துவம் பற்றியும் சிந்தித்தார். ஆனால் செல்வா தான் முதன் முதல் தமிழர்களுக்கு சுயாட்சி, தேசிய இன உணர்வு, தமிழ்ப் பிரதேசம் எனச் சிந்தித்தவராவார்."

(Saturday Review 9.11.1985)

என்று குறிப்பிட்டு, காந்தியக் கொள்கையாளரான பேராசிரியர் தமது கருத்தில், ''காலம் காலமாகத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் தான், இளைஞர்களை மாற்றியது'' என்றும் ''உலகத் தமிழாராய்ச்சி (1974-யாழ்ப்பாணம்) படுகொலைகள் இளைஞர்களுக்கு வேகத்தைத் தந்தது" என்றும், "காந்தி மகான் ஓரிடத்தில் ஒடுக்கு முறையை சாத்வீகத்தால் மாற்றமுடியாவிட்டால் வன்செயல் கொண்டு தானும் எதிர்க்க வேண்டும்" (Gandhi himself had said that you must stand up to oppression violently if you cannot possibly stand up non-violently) எனக் குறிப்பிட்டிருக்கிறார்" என்பதைச் சுட்டிக் காட்டினார்.

இன்றைய வரலாறு நாளை பதியப்படுகையில், நேற்றைய வரலாற்றுடன் ஒப்பு நோக்குகையில் சங்கிலித் தொடர் போன்று உண்மைகள் உணரப்படும்.

1972ம் ஆண்டு மே 22 இல் சிங்கள பௌத்த குடியரசு நடைமுறைக்கு வந்ததும், தமிழரின் இழந்த இறைமை மீண்டும் மக்களிடம் சென்றடைந்ததென்று செல்வா கூறி, தமிழ் மக்கள் விடுதலை பெற்ற இனமாகவே வாழ விரும்புகிறார்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கு சவால்விட்டு, அக்டோபர் 2 (காந்தி பிறந்த நாள்) காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். பின்னர் 06.02.1975இல் நடந்தேறிய தேர்தலில் அரசு வேட்பாளரைத் தோற்கடித்து தமிழீழத்துக்கான மக்கள் ஆணையைப்பெற்று 04.02.1976 இல் பாராளுமன்றத்தில் "விடுதலை பெற்ற இறைமையுடைய மத சார்பற்ற சமதர்ம நாடாகத் தமிழ் ஈழம் அமையும்" என உலகத்துக்குப் பிரகடனம் செய்தார்.

விந்தை மனிதராக- விரதம் கொண்ட மனத்தினராக, விடுதலை பெற்றதோர் மக்களின் மாண்பு மிக்க தந்தையாக விளங்கி, தாயகத்திற்கு வடிவமைத்துத் தந்தார். அந்தத் தாயக இறைமையை நிலைநாட்ட வேண்டி இன்றைய தலைவராக வேலுப்பிள்ளை பிரபாகரன் முன்னெடுத்துச் செல்லுகின்ற விடு தலைப்போர் ஓர் வரலாற்றுத் திருப்பமாக விளங்குகின்றது. ஓர் இனத்தின் நிலையான இருப்பை நிலைநாட்டத் தொடரும் விடுதலைப்போரில் ஈடுபட்ட அனைத்து மக்களும் மறக்கப்பட முடியாத மாண்புடையவர்களாவர்.

எந்த ஒரு நாட்டின்- மக்களின் விடுதலை வரலாற்றிலும், காலங்கள் வேறுபட்டாலும், அதனை வென்றெடுக்கும் பாதைகள் புதிது புதிதாகத் தோன்றினாலும், தலைமைகள் காலத்துக்குக் காலம் பிறந்து வந்தாலும் அம்மக்களின் அதி உன்னத விடுதலை லட்சியம் மட்டும் ஒன்றாகவே தொடர்ந்து ஒரு நாள் அந்த ஒப்பற்ற விடுதலை முகிழ்க்கும்.

## அறவழிப்போராட்டம்

ஈழத்தமிழினம், தனது நீண்ட வரலாற்றில் பல்வேறு சமூகக் குறைபாடுகளினாலும், சரியான வழிகாட்டல் இன்றியும் அடிமைப்பட்டு தனது தனித்துவங்களை இழந்து நானூறு வருடங்களுக்குப் பின்னர், அதாவது ஐரோப்பியர் (1619-1947) ஆட்சிக்குப் பின், சிங்களவர் வசம் அதிகாரம் கைமாறியபோது தான் விழித்துக்கொண்டது. அன்றைய தலைமைகள், பேச்சுவார்த்தைகள், தொகுதிப்பங்கீடுகள், பதவிகள் எனக் கண்டார்களேயன்றி மக்கள் சமுதாயத்தின் ஒட்டு மொத்த வடிவத்தைக் கட்டமைக்க அன்று அவர்கள் முயலவில்லை, அல்லது அதனை ஆற்ற முன்வரவில்லை. தமிழர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பார்கள்- மனு, மடல்கள், தூதுகள், விவாதங்கள் என்பவற்றுடன் அடங்கி விடுவார்கள் என்றே ஆட்சியாளர்கள் எண்ணி வந்தார்கள் போலும்!

ஆனால்... ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் ஓர் திருப்பம் ஏற்பட்டது. அது தான் தமிழர் தம் தாய் மொழியாம் தமிழுக்கும்- அடுத்தது, வாழ்விடத்துக்கும் ஆபத்து என்பது புரிந்துகொள்ளச் செய்த ஒருவர் தமிழ் மக்களின் தலைவரானார். அவர் தான் திரு. செல்வநாயகம் என்றும் தந்தை செல்வா என்றும் பாசத்துடன் பேசப்பட்ட சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்.

தமிழர் தாயகத்தில் வாழ்ந்த சகல தமிழ் பேசும் மக்களையும், பேதங்களறுத்து, ஓர் மகத்தான சக்தியாக மாற்றினார். அதன் பேறாக, ஈழத்தமிழினம் - ஓர் தேசிய இனம் என்ற வடிவமைப்பிற்குரிய மொழி, பிரதேசம், சுயாட்சி, இறைமை கொண்ட கூட்டாட்சிக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

தமிழினத்தின் சரிபாதியாகவிருந்த மலையக மக்கள் வாக்குரிமை- குடியுரிமை பறிக்கப் பட்ட பின்னர், ஒட்டு மொத்த தமிழினத்தின் மொழியுரிமைக்குப் பாதகமாக எழுந்தது "சிங்களம் மட்டும்" என்ற வேட்டு!

## காலிபேஸ் திடலில் சத்தியாக்கிரகம்

"சிங்களம் மட்டும்" சட்ட மசோதா மீது விவாதம் தொடங்கிய 1956 ஜூன் 5ம் திகதி, வடக்கு- கிழக்கு, மலைநாடு, கொழும்பு எனத் தெரிந்தெடுத்து, அறிவுரை தரப்பட்டு, அகத்தூய்மையும் மனோவலிமையும் சேர முன்வந்த 200க்கு மேற்பட்ட அறப்போர்த் தொண்டர்கள் அதிகாலை கொழும்பு காலிபேஸ் திடலில், தலைவர்கள் செல்வநாயகம், வன்னிய சிங்கம், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், இராசவரோதயம், அமிர்தலிங்கம், வி.ஏ.கந்தையா, ஏகாம்பரம் போன்ற தலைவர்கள் சேர தமிழன்னையின் துயர்தீர வேண்டும் என்ற நல்லுள்ளங் களுடன் தவம் புரிந்தனர். ஏற்கெனவே எடுத்துக்கூறியவாறு, சத்தியாக்கிரகிகள் மீது எத்தகைய கடுமைகள் புரிந்து, கோபமூட்டினாலும் சத்தியாக்கிரகிகள் வன்செயல்களில் ஈடு படாது, தமிழ்மொழி மீது உள்ள பற்றையும், தமிழ் மக்களின் நியாயபூர்வத்தையும் எடுத்துக் காட்டி, உலகிற்கு அறிவிப்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமாகும் என விளக்கப் பட்டிருந்தது.

பாராளுமன்றத்தில் விவாதம் தொடங்கிய வேளை, சிங்களக் காடையர்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு, நிராயுத பாணிகளாகிய சத்தியாக்கிரகிகள் பலமாகத் தாக்கப்பட்டனர். அவர்களுள், தலைவர் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், வி.ஏ.கந்தையா, மூதூர் முதல்வர் ஏகாம்பரம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் மிகப் பலமாகத் தாக்கப்பட்டனர். தந்தை செல்வாவின் புதல்வர்களில் ஒருவர் (மனோகரன், வசீகரன், சந்திரஹாசன்) காடையர்களால் தாக்கப் பட்டு பேரையாற்றுக்குள் தூக்கி வீசப்பட்டார். அப்போதும் தந்தை செல்வா அமைதியாக, உணர்ச்சி வசப்படாது, விரதம் காத்தார்! தந்தை செல்வா மீது ஒருவன் தாக்க முனைந்த வேளை, இரும்பு மனிதன் நாகநாதன் தாம் கற்ற வித்தையைக் காட்டி அவரை நெருங்காமல் பாதுகாத்தார். அன்று தமிழர் வரலாற்றில் நடந்தேறிய புதிய போராட்டமாக எங்கும் செய்தி பறந்தது! இந்தியா, தமிழகம், உட்பட பல நாடுகளிலிருந்தும் பலத்த கண்டனங்கள் வெளிவந் தன. பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டி வன்செயலைக் கண்டித்தன. மண்டையில் காயத்துடன் பாராளுமன்றம் சென்ற இளந் தலைவர் அமிர்தலிங்கம், பண்டாரநாயக்காவையும் அரசின் செயல்களையும் கண்டித்து உரையாற்றினார். அன்று, தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள், சத்தியாக்கிரகிகளைச் சந்தித்து



**பண்டா-செல்வா ஒப்பந்த நகலுடன் தந்தை செல்வா.உடன் நகர்பவர் திரு வி.ஏ.கந்தையா எம்.பி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு தெரிவித்தனர். அவர்களில், தவத்திரு தனிநாயகம் அடிகளார், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம், திரு சி. சுந்தரலிங்கம், திரு எஸ். தொண்டமான், ஜனாப் ஏ.அஸ ஸ், சேர் கந்தையா வைத்தியநாதன், டாக்டர். பீட்டர் பிள்ளை ஆகியோர் அடங்குவர்.

அன்றைய விவாதத்தில். உரையாற்றிய கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, ஒரு மொழி எனின் இருநாடுகள்: இரு மொழிகள் என்றால் ஒரு நாடு என சூசகமாகக் கூறிய கருத்து வரலாறு ஆகும்.

ஆயினும், 1972 இல் அரசியல் யாப்பைத் தயாரிக்கும் அமைச்சராக விளங்கிய போது, அவரும் ஏனைய இடது சாரித் தலைமைகளும் கூட அதனை மறந்ததும், ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகிய பின்னர், டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா, தமது செயல்களுக்காக வருத்தப் பட்டார் எனவும் கருத முடிகின்றது.

1972, யாப்புத் தயாரிப்புக்குழுவில் இருந்து தந்தை செல்வா விலகிக் கொண்டதற்கு, அவர் வைத்த திருத்தங்கள், சோல்பரி அரசியல் திட்டத் திலிருந்த 29 சீ விதி சிறுபான்மை இனத்தவரின் பாதுகாப்புக்காகச் சேர்க்கப்பட்டதை நீக்கியதும் காரணமாகும். தமிழ்மக்களின் சுயாதிபத்தியத்தை ஈற்றில் அது கட்டுப்படுத்தாது என்றதால் யாப்புத் தயாரிப்புக் குழுவிலிருந்து விலகிக் கொண்டார்.

## செல்வாவின் ஆறு அம்சக் கோரிக்கைகள்

செல்வா-பண்டா ஒப்பந்தம், செல்வா-டட்லி ஒப்பந்தம் இரண்டும், செய்து கொண்டவாறு செயற்படாமல் செய்தவர்கள் சிங்களத் தலைவர்களாவர். அதற்குப் பின்னர், அரசுகள் மாறி மாறி ஆட்சிகளைக் கைப்பற்றிய போது, ஜெயவர்த்தன முதல் சந்திரிகா வரை அளித்த வாக்குறுதிகள் அத்தனையும் காற்றில் பறந்து போயின. எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தார் என்ற பழ மொழிக்கேற்ப, ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனா, தமிழ் மக்களைக் கலந்து ஆலோசிக்காது தமது விருப்பத்துக்கேற்றவாறு கைச்சாத்திட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் (1987), பிசுபிசுத்துப் போனது உலகறிந்த செய்தியாகும். இவை அனைத்தும் ஏமாற்று வித்தைகள் என்பது சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும், அன்று 1972 இல் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வா ஈற்றில் உறுதியாகவும் உண்மையாகவும் முன்வைத்த ஆறு அம்சக் கோரிக்கைகளைத் தானும் வருங்காலத்தில் நிறைவேற்ற முன்வருவார்களா என்பது சந்தேகமே!

தந்தை செல்வா முன்வைத்த அந்த ஆறு அம்சக் கோரிக்கைகள்- தமிழர் சார்பில் முன்வைக்கப்பட்ட குறைந்த பட்சமான கோரிக்கைகளாகும்:

1. தமிழுக்கும் சிங்களத்திற்கும் சமஅந்தஸ்து அரசியல் யாப்பில் தரப்படல் வேண்டும்.
2. நாடற்றவர்கள், நெடுங்காலம் வாழ்ந்தவர்கள் எனப்படும் அனைவருக்கும் சட்டப்படி குடியுரிமை தரப்படுதல் வேண்டும்.
3. மதசார்பற்று, சகல மதங்களுக்கும் சமஉரிமை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
4. சகல இன மக்களுக்கும் அவரவர் பண்பாடுகள் அடிப்படையில் அடிப்படை உரிமைகள், சமவாய்ப்பு, சுதந்திரம், அரசியல் சட்டமூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
5. தீண்டாமை- சாதி வேறுபாடுகள் ஒழிப்பு.
6. அதிகாரப் பரவலாக்கல் மூலம் மத்திய அரசின் அதிகாரங்கள் மக்கள் அதிகாரங்களாக மாற்றுதல்.

எனக்கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு, மறுக்கப்பட்ட பின்னர், புதிய யாப்பு நடைமுறைப் படுத்தப்பட்ட மே 22ம் நாள் துக்க தினமாகக் கொண்டாடப்பட்டதும் தந்தை செல்வா கூட்டாட்சிக் கோரிக்கையைக் கைவிட்டு தனித் தமிழீழமே ஒரே முடிவு- மாற்ற முடியாத முடிவு- எனப் பிரகடனப் படுத்தி உரையாற்றியதும் உலகம் அறிந்த உண்மைகள்.

அந்த உயர்ந்த லட்சியத்தை, 1977இல் நடந்த கடைசிப் பொதுத் தேர்தல் மூலம் மக்கள் அங்கீகரித்து ஆணை வழங்கியதும் அதனை அடைவதற்கு இன்று ஆயுதப் போராட்ட வழியே சரியானதும் முறையானதும் எனக் கண்டு விடுதலைப்போரில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், தலைவர் பிரபாகரன் தலைமையில் நடாத்தி வருவதும் இன்று உலகம் அறிந்த விடயமாகும். ஈழத் தமிழர் வரலாற்றில் தந்தை செல்வாவின் அரசியல் ஈடுபாடுகளின் பின் தொடரும் இன்றைய விடுதலைப்போராட்டமும் வரலாற்றுத் தொடரின் தேவையாகும்.

## 1952 முதல் 1972 வரை

1952 முதல் 1972இல் சிங்கள பௌத்த குடியரசுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் யாப்பு தமிழ்மக்களின் ஒப்புதல் இன்றி நிறைவேற்றப் படும் வரை. தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ்மக்களின் பல்வேறு உரிமைப்போராட்டங்கள் 50களிலும் 60களின் நடுப் பகுதி வரை மிகவும் உறுதியோடும் கொள்கைத் தெளிவோடும் ஒற்றுமையோடும் முன்னெடுக்கப்பட்டனவென்று கூறலாம்.

குடியேற்றம், மொழியுரிமை, குடியுரிமை உட்பட சகல அடிப்படை உரிமைகளின் தேவைகளும் முன்வைக்கப்பட்டன.

அக்காலகட்டத்தில் 'முற்போக்கு' என்ற சாயம் பூசப்பட்டு தமிழர்களின் முன்னேற்றத்துக்குப் பாதகமான தேசியமயங்கள், தேச உடைமைகள்-மக்கள் உடைமைகள்-என்பன சிங்களமயம் என்பதன் மறுபக்கமாகவே விளங்கின. இதனாற் போலும், தமிழரசுக்கட்சி முதலாளித்துவ சார்பு கொண்டதென்று கூறப்பட்டு வந்தது. அவற்றின் உண்மையான குறியும், தமிழரசுக் கட்சியின் அன்றைய தலைவர் தந்தை செல்வாவின் அரசியல் நிலையும் எத்தகைய தென்பதை அன்று குறைபட்டுக் கொண்ட புத்தி சீவிகள் சிலரின் இன்றைய கருத்து வெளிப்பாடுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அன்று, தந்தை செல்வா, சுவர் இருந்தால் தானே அழகான சித்திரத்தை வரைய முடியும். சுவரை மழையில் நனைந்து கரைந்து இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகவிட்டு, பின்னர் சித்திரம் பற்றி எப்படிப் பேசமுடியும். அதனாற்றான் தமிழர்களுக்கு எதிராக இருக்கும் எந்த ஒரு திட்டம் என்றாலும் மற்றவர்களுக்கு அது பிற்போக்கோ முற் போக்கோ- நாம் எதிர்க்க வேண்டும். என்று இல. 25, 2ம் குறுக்குத்தெருவில், 35 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு உரையாடலின் போது கூறக் கட்டுரையாளர் கேட்டதுண்டு.

சிங்கள ஸ்ரீ எழுத்துப் போராட்டம் தொடங்கிய வேளை புதிய வண்டிகளை அரசாங்கம் மீளப் பெறப்போகின்றதென்ற எதிர்க்கருத்துப் பரவிய போதும், நடந்து சென்றாலும் சிங்கள ஸ்ரீ என்ற சிங்கள ஆதிக்கத்தை ஏற்க முடியாது என்பதை அரசுக்கு நாம் உணர்த்தவே இப் போராட்டம்(1957-1958) நடந்தேறியது என்றார். அதன் விளைவாகத் தொண்டர்கள், தமிழரசுக் கட்சி பா.உ. செனட்டர் எனப் பலரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோஷலிசத் தமிழீழம்

தமிழர்கள் இறைமையுடன் வாழக்கூடிய சுயாட்சி-சமஷ்டி என்ற கூட்டாட்சி பெற்ற பின்னர், தமிழீழத்தில் ஆட்சி, விடுதலை பெற்ற சுதந்திர சமதர்ம மதசார்பற்றதாக இருக்கும்! என்ற தந்தை செல்வாவின் கொள்கை பெரும்பான்மை வாக்குகளுடன் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சி மாநாட்டில் நிறவேற்றப்பட்டது.

## சிங்கள அரசுகளுக்கு சிம்மசொப்பனம்

அன்று 50களிலும் 60களிலும் பாராளுமன்றத்தில் பேச்சு வன்மையும் திறமையும் அனுபவமும் கொண்டவர்கள் இருந்தார்கள். பிரதமராகவிருந்த பண்டாரநாயக்கா ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த பேச்சாளர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவராக விளங்கியவர். ஆசியாவின் சிறந்த, உலகின் தலை சிறந்த ஆங்கில பேச்சாளர்களுள் ஒருவராக அன்று மதிக்கப்பட்ட ஸ்ரீநிவாச ஐயங்கார், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தில் உரையாற்றும் போது, அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் பண்டாரநாயக்கா! தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆங்கிலம் பேசக் கேட்டு மயங்காதார் இல்லை என்பர். அது போல், பீட்டர் கெனமன், லெஸ்லி குணவர்த்தனா, குசுமா குணவர்த்தனா, டாக்டர். என். எம். பெரேரா, டபிள்யு. தஹநாயக்கா, எட்மண்ட் சமரக்கொடி, செனெட்டர் டாக்டர் இ.எம். வி. நாகநாதன், சி. சுந்தரலிங்கம், அ. அமிர்தலிங்கம், செனெட்டர் நடேசன், டாக்டர் விக்கிரமசிங்க, பேர்னார்ட் சொய்சா, டாக்டர். கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, என கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள், சட்டவறிஞர்கள், பேராசிரியர்கள், பலருக்கு மத்தியில் இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமானவரும், அன்புக்குப் பாத்திரமாகியவரும், சாந்தம், மென்மை, அமைதி, மிகுந்த மெலிந்த ஓர் உருவமும் அங்கு நடப்பவற்றை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும். ஆம், அந்த உருவத்துக்குரியவர்- தீர்க்கதரிசி, ஈழத்துக் காந்தி தந்தை செல்வாவே! கட்சியின் தலைவர்களாக, வன்னியசிங்கம், இராசவரோதயம், இராசமாணிக்கம், டாக்டர் இ.எம்.வி.நாகநாதன் இருந்த காலத்திலும், அனைவராலும் தமிழரசுக் கட்சித் தலைவர் என பத்திரிகைகள், அறிஞர்கள், கட்சித் தலைமைகள் எல்லோராலும் குறிப்பிடப்பட்டு வந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வா என்பது அன்று நிலவிய ஒன்றாகும்.

தந்தை செல்வா, எழுந்து பேசத் தொடங்குகிறார் என்றால் அங்கு அனைவரும் அவரது பேச்சை செவிமடுப்பார்கள் என்று கூறுவர். மெலிந்த குரலில் மிகத் தெளிவாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் மனம் திறந்து உண்மை ததும்ப யாரையும் புண்படுத்தாது தமிழ்ப் பண்போடு எதிராளிகளும் பாராட்டும் விதத்திலும் பேசுவார் தந்தை செல்வா. அவரது காலத்தில் அனைவரும் மிக அவதானத்தோடு செவி மடுக்கும் பேச்சாளர்களில் அவரும் ஒருவர். அத்துடன், அவரது பேச்சென்றால் பத்திரிகையில் அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பர். டைம்ஸ் நிறுவனத்தில், ஆர். எல். மைக்கேல் ஆசிரியராக ***மோர்னிங் டைம்ஸ்*** (Morning Times) பதிப்பில் கடமையாற்றிய போது, தந்தை செல்வநாயகம் பற்றிய அவரது செய்திகள், குறிப்புகள், ஆசிரியர் தலையங்கம் என்பன, ஈற்றில் அவரை அப்பத்திரிகையில் இருந்தே விலகும்படி செய்ததென்பர்.

தந்தை செல்வா செயல்கள் பற்றிச் சொல்வார். நிகழ்ந்தவற்றை மறைக்காது அஞ்சாது எடுத்துக் காட்டுவார். அன்று அவரது சொற்கள் வெறும் பேச்சுக்கள் மட்டுமன்று. செல்வாவின் பேச்சுக்கள் செயலாக்கத்தின் மறுவடிவம் பெறும்-பெற்றே தீரும் என்பதை அரசும், பிறரும், மக்களும் அன்று அறிவர். அதனால் அவரது பாராளுமன்ற உரை, சொற்பொழிவு, அறிக்கை, வேண்டுகோள், பேச்சு எல்லாமே செயல்வடிவம் பெற்றதென்பதை நேரில் கண்டும் அவற்றைக் கேட்டு, கிளர்ந்தெழுந்த பலருள் ஒருவனாக- இளைஞனாக இருந்த கட்டுரையாளரால் நினைவு மீட்க முடிகின்றது. இவற்றை எல்லாம் விபரிப்பின், நீண்டு விடுவதுடன் ஒன்றிருக்க ஒன்றைக் கூறுவதாகி விடலாம் என்ற அச்சம் உண்டு.

## இலங்கையைக் குலுக்கியது

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறிய 15.06.1956க்குப் பின்னர் எழுந்த எதிர்ப்பலை, இலங்கைத் தீவைத் திகைக்க வைத்தது. தமிழீழமெங்கும் இன எழுச்சியும் மொழியார்வமும் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மொழிப் போராட்டத்தின் முதல் வெளிப்பாடாகச் ஸ்ரீப் போராட்டம் தொடங்கப்பட்டது. அரசுடன் தமிழில் தொடர்பு எனப் பின்னர் விரிவடைந்து வலுப் பெற்றது. இதனால் பண்டா அரசு திகைத்து பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உபயோகம் (Reasonable use of Tamil Language) போன்றவற்றை அடக்கிய பண்டா- செல்வா ஒப்பந்தத்தை அறிவித்து கையெழுத்திட்ட வேளை அதனை ஆதரித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாடு பங்குனி 1958 இல் களனியில் நடந்தது. பின்னர் பௌத்த சிங்கள- தமிழ் (காங்கிரஸ்) கட்சி களின் எதிர்ப்பின் விளைவாக 09.04.1958 இல் ஒப்பந்தம் மீறப்பட்டது.

## வவுனியா மாநாடு- காடும் சுடும்!

1958, வைகாசி 23-25 வரை வவுனியா நகரில் தமிழரசுக் கட்சி மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் நூற்றுக்கணக்கில் வடகிழக்குப் பகுதிகளில் இருந்தும் தொண்டர்கள் சென்றனர். இதில் கட்டுரையாளரும் கலந்து கொண்டார். மட்டக்களப்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருந்து புகைவண்டி மூலம் வந்த தொண்டர்களை பொலநறுவையில் சிங்களக் காடையர்கள் தாக்கி இருவர் கொல்லப்பட்டதையடுத்து, கிழக்கில் சிங்களவர்களும் தாக்கப்பட்டனர். வவுனியா பா.உ.வாக பிரதிநிதித்துவம் வகித்த, திரு. சி. சுந்தரலிங்கம் இம்மாநாட்டில் உரையாற்றுகையில் "அடங்காத் தமிழனின் காடும் சுடும்" என்று கூறிய வீர முழக்கம் இன்றும் நினைவில் உள்ளது. அது போல, இன்று வன்னிக்காட்டில் வீர முழக்கம் கேட்கின்றது. அந்த அடங்காத் தமிழனின் ஆர்ப்பரிப்பின் இலக்கணமாக இன்று அது விளங்குவது வரலாறாகும்.

இதற்குப் பின், நாடெங்கும் வகுப்புவாதம் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டதும், பண்டாரநாயக்கா ஆற்றிய வானொலி உரையில், "கிழக்கில், முன்னாள் நுவரெலியா மேயர் செனிவிரத்தினா உட்பட பலர் கொல்லப்பட்டதாக" அறிவித்ததைத் தொடர்ந்து வைகாசி 27இல் பாணந்துறையில் இந்துக்கோயில் குருக்கள் மீது பெற்றோல் வீசித் தீவைத்துக் கொழுத்தினர். இதனைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் பிறப்பித்து தமிழரசுக்கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன, ஆகியவை தடை செய்யப்பட்டன. வரலாற்றில் முதன்முதலாக சொந்த நாட்டில் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு கப்பல்கள் மூலம் வட-கிழக்கு மாகாணங்களுக்குக் கொண்டு வரப்பட்டனர். அதே கப்பல்களில் தமிழ் மாகாணங்களில் எது விதக் கொடுமைகளுமின்றி பொருள் இழப்பு மட்டும் அடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்கள், 2000 பேர் வரை, தெற்கே சென்றனர். தெற்கில் தமிழர்கள் அடைந்த துயரங்களை- கொடுமைகளை அறிந்த மக்கள், யாழ்ப்பாணத்தில், குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியில் இருந்த மரத்தளபாட நிறுவனங்கள், பிரதான வீதியில் இருந்த தையல் நிறுவனங்கள், பேக்கரிகள் என்பனவற்றை இங்கிருந்த பொருட்கள் எவற்றையும் சூறையாடாது தீமூட்டினர். இவை இன்னும் நினைவில் நிற்பவையாகும். ஆனியில் திரு சி. சுந்தரலிங்கம் ''அடங்காத் தமிழர் முன்னணி'' சார்பில் 'தனித்தமிழ் நாடு' ஒன்றுக்கான கோரிக்கையை மசோதாவாகக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் உரையாற்றியது வரலாற்றுத் திருப்பம் என்றே கூறவேண்டும்.

## மக்கள் பிரதிநிதிகள்


'தனிச் சிங்களச் சட்ட' மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின் நாட்டின் இன ஒற்றுமை, அமைதி, நம்பிக்கை, முன்னேற்றம் யாவுமே எதிர்காலத்தில் தவிடு பொடியாகப் போகின்ற தென்பதை ஒரு சிலர் தெளிவாகப் புரிந்திருக்காமலில்லை. ஆனாலும், தத்தமது போக்கில் வாளா திருந்தவர்களும், கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டவர்களுமே அதிகம். டாக்டர் என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, போன்றவர்கள் மொழிப்பிரச்சினையில் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட நிலையும் அதன் விளைவாக கொடுத்த விலையும் கொஞ்சமன்று. அவர்கள் நடுநிலையாளர் களாலும் சிறுபான்மை மக்களாலும் பாராட்டப்பட்டவர்கள் ஆயினும் தமிழ்ப் பிரதேசங்களில் ஒருவரைத் தானும் பாராளுமன்றத்திற்கு அனுப்பப் பலமுறை முயன்றும் தோல்வியே கண்டனர். திருவாளர்கள். ஆர். ஆர். தர்மரத்தினம், செனட்டர் பொ. நாகலிங்கம், திரு காராளசிங்கம், திரு விஸ்வநாதன், திரு. துரைராஜசிங்கம் போன்றோர் வடக்கில் கட்சித் தலைவர்களாக விளங்கிய போதும் ஒரு தொகுதியில் தானும் வெற்றி பெற முடியாது போனது.

தந்தை செல்வாவின் காலம் வரை, வடக்கில் இருந்து தமிழ் காங்கிரஸ், யு.என்.பி.யில் ஒருசிலரும், கம்யுனிஸ்ட் கட்சியில் திரு. பொன். கந்தையா (பருத்தித்துறை) ஒரே ஒரு முறை தவிர, ஏனையவர்கள் தமிழரசுக்கட்சி உறுப்பினர் களாகவே விளங்கினர். யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் தலைவரை தோற்கடித்த பெருமை திரு அல்பிரட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையப்பாவுக்கே (சுயேட்சை) உண்டு. தமிழரசுக் கட்சி வேட்பாளராக நீண்டகாலம் போட்டியிட்டுத் தோல்வியடைந்த டாக்டர் இ.எம்.வி. நாகநாதன் செனட்டராக நியமிக்கப்பட்டார். பின்னர், (புதிய) நல்லூர் தொகுதியில் வெற்றி பெற்றார். அவரைத் தொடர்ந்து, திரு. எம். சிவசிதம்பரம் நல்லூர் தொகுதியில் உறுப்பினராக விளங்கினார். வடக்கில் தமக்கு ஆதரவு கிட்டவில்லை என்பது இடதுசாரிக் கட்சிகளுக்கு எரிச்ச லூட்டிய ஒன்றாகும். 1955இல் அதாவது தனிச்சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் டாக்டர். என்.எம்.பெரேரா 'தமிழுக்கும் சிங்களத்திற்கும்' சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தீர்க்கதரிசனமான ஒன்றாகும். 19.10.1955இல் பிரேரிக்கப்பட்ட அப்பிரேரணையில் 'சிங்களத்திற்கும் தமிழுக்கும் நாடு பூராவும் சமஉரிமை (Parity of Status) வழங்கப்பட வேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது. 'தனிச்சிங்களம் மட்டும்' என்பது அநீதி. அப்படிக் கோரும் சிங்கள வகுப்பு வாதம், ஜேர்மனியில் எழுந்த நாசிகளின் யூத எதிர்ப்பு வாதம் போன்றது, தமிழர்களைச் சிங்களம் கற்குமாறு சட்டம் போடுவதற்கு முன்னர், அங்கு இராணுவம் அனுப்ப வேண்டி வரும்' என எச்சரித்து ஆற்றிய உரை, வரலாற்றுச் சிறப்பு மிக்கது. நீதிக்கும் நியாயத்திற்கும் பெயர் பெற்று விளங்கியவர்களும், புரட்சிக்கும் சமத்துவத்துக்கும்



**1969இல் நாவலர் தேசிய மாநாடு நடந்த போது தந்தை செல்வாவுக்கு நாவலர்சிலை அன்பளிக்கப்படுகின்றது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியவர்களும், ஆங்கில ஏகாதி பத்தியத்திற்கு எதிராகத் தம்மை அடையாளம் காட்டிய பிலிப் குணவர்த்தனாக்கள், பெரேராக்கள், பீட்டர் கெனமன்கள், தஹாநாயக்காக்கள் ஈற்றில் மந்திரி நாற்காலிகளில் மயங்கித் தமது நீண்ட இலட்சியங் களைக் காற்றில் பறக்க விட்டதெல்லாம், தற்செயலான நிகழ்வுகள் என்று கூற முடியாது!

இடதுசாரி வரிசையினர் இவ்வாறு எனில் ஆளும் கட்சிகளின் பிரம்மாக்கள் பற்றிப் பேசவே வேண்டாம். யூ.என்.பி. அங்கிள் நெவ்யூ பார்ட்டி, (Uncle Nephew Party) என்றவாறு குடும்பச் சொத்தாக்கி, மலிவுச் சரக்காக்கி, இலாபம் பெறுவதற்கு இன வாதத்தைக் கக்குவதே இலேசான வழி என, தந்தை -மகன் வழிவழியாக அடுத்து வந்தவர்களெல்லாம் இனி எம்மிடம் ஐக்கியமும் இல்லை, தேசியமும் இல்லை, கட்சியும் இல்லை என்று களனி மகாநாட்டில் 'சிங்களம் மட்டும்' கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள்.

## 24 மணித்தியாலத்தில் சிங்களம்

24 மணித்தியாலத்தில் சிங்களத்தை அரச மொழி ஆக்குவேன் என்று சபதம் இட்டு ஆட்சியைக் கைப்பற்றியவர் ஈற்றில் வளர்த்த கடா மார்பில் குற்றிய கதையாகிப் போனதும், யூ. என். பி.யும் சுதந்திரக் கட்சியும் சிங்கள வகுப்புவாதி அதிகம் யார் என களத்தில் வலம் வந்தது கண்டு ஒட்டிக் கொண்டிருந்த நடேசன்கள், வைத்தியநாதன்கள், குமாரசுவாமி கள், வடக்குக் கிழக்கில் முகத்தைக் காட்ட முடியாது முக்காடு இட்டதும், தந்தை செல்வா மட்டும் தமிழரின் நம்பிக்கை ஒளியாகத் திகழ்ந்ததும் வழிகாட்டி நின்றதும் ஈழத்தமிழ்த் தேசிய இன வரலாற்றில் ஓர் மைல்கல்லாகும்.

## எதிர்க்கட்சித் தலைவர்

1960 ஜூலையில் நடைபெற்ற தேர்தலில், அதாவது சத்தியாக்கிரக அறவழிப்போராட்டம் இடம் பெறுவதற்கு முன்னதாக, எதிர்க்கட்சிப் பதவியை வகிக்கும் சந்தர்ப்பம் தந்தை செல்வாவுக்குக் கிட்டிய போதும், திரு சி. சுந்தரலிங்கம் அதனை ஏற்குமாறு வலியுறுத்தியும் செல்வா மறுத்து, அப்பதவியைக் கொண்டு தமிழ் மக்களின் எந்த உரிமையையும் பெற்று விட முடியாது என்று கூறி, தமிழரசுக் கட்சியை விடக் குறைந்த ஆசனங்களைப் பெற்ற லங்கா சமசமாஜக் கட்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் டாக்டர் என்.எம். பெரேரா, எதிர்க்கட்சித் தலைவராக உதவினார்.

## மக்கள் போராட்டம் திருமலை யாத்திரை

தமிழருக்கு எதிரான அரச பயங்கரவாதம் திட்டமிட்டு, வழிநடாத்தப்பட்ட வேளையில், தமிழ் மக்களை ஓர் அணியில் திரட்டி, அறவழிப் போராட்டத்திற்குத் தயாராகும்படி அறிவித்தார். இதற்கு கால்கோளாக, திருமலை யாத்திரை, சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டு இரு மாதங்களுக்குள், வடக்கு-கிழக்கு எங்கும் எழுச்சி-விளக்கக் கூட்டங்கள் நடாத்தி, திட்டம் தீட்டப்பட்டது.

மா சேதுங் மக்களைத் திரட்டுவதற்கு'நீண்ட பயணம்' மேற்கொண்டார். அது போல தமிழ் அன்னையின் அடிமை விலங்ககற்ற தந்தை செல்வா ஈழத் தமிழினத்தை அணிவகுத்து நடாத்திக் காட்டினார். திருமலை யாத்திரை, 10.8.1956 தொடங்கி 17.8.1956 பி.ப.4.30 மணிக்கு திருமலையைச் சென்றடைந்து ஒன்று சேர்ந்தது. வடக்கில், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, கோப்பாய், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், முள்ளியவளை, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என ஆயிரக்கணக்கில் தொண்டர்கள், ஆதரவாளர்கள், பார்வையாளர்கள், பத்திரிகை யாளர்கள், சைக்கிள், மோட்டார்கார், லொரி, மாட்டுவண்டில்கள் என அணிவகுத்துப் புறப்பட்டனர். வழியெங்கும் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு, மதவழிபாடு, உரையாடல் போன்றவை நிகழ்த்திய வண்ணமாய் நடந்து தமிழீழத் தலை நகராம்-திருகோண மலையை வந்தடைந்தனர்.

இந்து சமுத்திரக்கரையை அண்டி, தென்றல் தாலாட்டும், குளக்கோட்டு மன்னன் இலச்சினை பொறித்த அழகுமலை தாங்கி, தலை நிமிர்ந்து நின்ற சுவாமிமலையாம்- திருமலைக்கு, வடக்கிலும் கிழக்கிலும் ஏன் மலைநாட்டில் இருந்தும், முல்லை வன்னியும், கடல்சூழ் மன்னார் நிலமும், கொக்குத் தொடுவாய் புல்மோட்டை குச்சவெளி திருக்கோவில் கிண்ணியா மூதூர் மட்டுநகர் நிலங்கள் வாழ் ஈழத் தமிழர்கள் நூறு ஆயிரமாய், இலட்சம் பலவாய் கூடி தமிழ் அன்னையின் அடிமைத்தளை பொடிப்பொடியாக்க, அறைகூவி, ஆவணி 20இல் தீர்மானங்கள் நிறைவேற்றிய அந்த வரலாற்றுத் திருநாள் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள், இத்தீவின் வரலாற்றில் கண்டிராத பொன்னாள் ஆகும். அதனை 20 வயது இளைஞனாகவிருந்த கட்டுரையாசிரியரும் கண்குளிரக் கண்டும் காதாறக் கேட்டும் உள்ளம் மகிழ்ந்து உணர்வு சேர புதுமை கண்டதை இன்றும் நினைவில் மீட்ட நெஞ்சம் இனிக்கின்றது. அன்று பெற்ற எண்ணங்களுடன் முனைப்புக் கொண்டு இன்றும், நாளையும் வரும் எங்கள் தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டுவதும் எழுச்சிபெறத் தூண்டுவதும் தமிழன்னைக்கு யாம் செய்யும் பூசனைகள் அன்றோ.

ஆயிரம் ஆண்டுகள் தாண்டினும் தலைமுறை தலைமுறையாக நாம் உணர்வு காத்து தமிழ் அன்னையை, தமிழ் மண்ணை, தமிழ் மக்களை என மூன்றையும் காப்பது மட்டும் கடமை எனக் கொண்டவர்களை தெய்வங்களாக்கி வணங்குவோம், வாழ்த்துவோம்.

## போர்ப்பரணி

திருமலை யாத்திரையின் நடைப்பயணத்தில் முழங்கிய பாடலை சோமசுந்தரப் புலவரின் புதல்வர் பண்டிதர் இளமுருகன் இயற்றினார்.

அப்பாடல்,

திருமலைக்குச் செல்லுவோம்
சிறுமை யடிமை வெல்லுவோம்

எங்கள் அன்னை எங்கள் அன்னை
எழில் மிகுந்த செந்தமிழ்
பொங்கும் ஈழ நாட்டில் வாழும்
புதிய கோயில் கட்டவே (திருமலைக்கு)

அடிமையில்லை அடிமையில்லை
ஆண்டான் அடிமையில்லையே
மடிமை கொண்டு வாழ்வோமாயின்
மானம் கப்பல் ஏறுமே. (திருமலைக்கு)

எங்கள் பூமி எங்களாட்சி
எவர்க்குமுரிமை இல்லையே
பொங்கு கழனியடவி தோறும்
போயிருந்து வாழ்வமே (திருமலைக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித் தமிழர் ஈழநாட்டில்
அரசிழந்த அகதியோ
சாதியுரிமைச் சங்கநாதம்
தமிழர் காதிலோதுவோம் (திருமலைக்கு)

இப்பாடல் ஒலித்துக் கேட்காத காதுகளே இல்லை என்னுமாறு வீதி தோறும், வீடு தோறும் ஒலித்தது. இது போன்ற எழுச்சிப் பாடல்கள், கருத்துமிக்க உரைகள் மூலம் அறிவார்ந்த ஆலோசனைகள் என அன்று வழங்கப்பட்டன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாநாட்டில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர். அம்மாநாடு மூன்று நாட்களாக நடந்தது. திருவாளர்கள் கந்தையா வைத்தியநாதன், சி. சுந்தரலிங்கம், செல்லச்சாமி, எனப் பலரும் வந்து கலந்துகொண்ட காட்சி மக்களின் மனங்களில் எழுச்சியும் மகிழ்ச்சியும் பொங்கி வழியச் செய்தது. கலந்து கொண்டவர்களுக்கு தங்குமிடம், உணவு, சிறப்பாக வழங்கி உபசரிக்கப்பட்டது. தந்தை செல்வா, தம்மிடம் இருந்த தலைமைப் பொறுப்பை திரு. கு. வன்னியசிங்கத்திடம் வழங்கிய பெருந்தன்மை என்றும் பாராட்டுக்குரிய முன்மாதிரி யாகும். அவரைப் பின்பற்றி, பின்நாட்களிலும் கட்சித்தலைமை திருவாளர்கள் இராசவரோதயம், இராசமாணிக்கம், டாக்டர் இ.எம்.வி. நாகநாதன், சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், போன்றோ ரிடம் சென்றது. இதற்கு வழி காட்டியவர் தந்தை செல்வா என்பதை இங்கு கூற வேண்டியதில்லை.

திருமலை மாநாடு இடம்பெற்ற வேளை, சிறுவனாக இருந்த இன்றைய தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய தலைமையை ஏற்று நடாத்தும் பொறுப்பும் சிறப்பும் உடையவர்.

அன்று அறவழிமுறை, இன்றைய தேவையாக -ஆயுத வழிமுறையாக மாறியிருப்பது காலத்தின் கட்டாயமாகும். தந்தை செல்வா வித்திட்டுச் சென்றதை, வளர்த்து, காத்து, பயன்பெற வைத்து, நாளைய தலைமுறையும் வாழையடி வாழையாக வளரும் தலைமுறையும் நிலைத்து நீடிக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கும் விடுதலைக்கு ஒட்டுமொத்த மக்களின் பலம் துணையாக வேண்டும்- தொடர வேண்டும். அப்போது தான் துயரம் துடைத்து விடிவு காண முடியும். வரலாறு தொடர வேண்டும். வாழ்க்கை சிறப்படைய வேண்டும். இனம், மொழி, மண் மறையாது காக்க வேண்டும்.

தந்தை செல்வா மறைந்தார். புதிய தலைமை கிடைத்தது. சிந்தை கொண்ட எண்ணம் - எடுத்த இலட்சியம் தொடரும். தமிழீழம் மலரும்.

## சத்தியாக்கிரகம்- தர்ம யுத்தம்

இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்கள் நிலை, குறிப்பாக, ஈழத்தமிழர்களின் நிலை பற்றி கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் நடந்தேறிய கோரங்களையும், அதற்கு மேலாக, அரை நூற்றாண்டுக் கால அரசியல், சமூக, பொருளாதார நிலைகளையும் அலசிப் பார்த்தால் ஈழத்தமிழரின் ஒரே பாதுகாப்பின் கவசமாக மாறியிருப்பது தமிழீழ விடு தலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் என்பதை நியாயம் புரிந்த எவரும் மறுக்கவும் மாட்டார்கள்- மறைக்கவும் மாட்டார்கள்.

## அரசு ஆணவம்

1974ம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, தமிழ் மொழி சார்ந்த சிறப்பினை எடுத்து விளக்கும் உலக அறிஞர்களை வரவேற்று தமிழ் மொழிக்காக எடுக்கப்பட்டதொரு மாநாடாகும். தமிழின மக்கள் பூர்வீகமாக- தொன்று தொட்டு வாழ்ந்து வரும் தங்கள் மண்ணில் எடுக்கும் மாநாட்டைத் திசை மாற்றவும், சீர்கெடுக்கவும், சிறீமா அரசு ஏற்படுத்திய தடைகளையும் மாற்றுத் திட்டங்களை வலிந்து புகுத்த முனைந்து மூக்குடைபட்டதையும் அனைவரும் அறிவார்கள்.கடைசியாக, இறுதி நாளன்று, ஆயுதப் படைகளைக் கொண்டு அமைதியாக நடந்து கொண்ட மக்கள் மத்தியில் ஆத்திரமூட்டி, ஒன்பது இனிய உயிர்களைப் பலி வாங்கியது என்பது ஓர் சிறிய சம்பவம் என்று விட்டு விட முடியாது. அன்றைய தினம், அங்கு நின்ற ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மொழி, இனம், நாடு என்ற மூன்று உணர்வுகளுக்கும் விடப்பட்ட ஓர் சவால் என்றே கொள்ள முடியும்- கொள்ள வேண்டும். தந்தை செல்வா, போன்ற அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களுக்குக் கூட அம்மாநாட்டில் முக்கியத்துவம் கொடுக்காது, முழுமையாக அறிவியல், இலக்கியம் ஆராய்ச்சி சார்ந்தவர்களைக் கொண்ட உலகம் தழுவிய விதத்தில் நடைபெற்ற மாநாட்டில், எடுபிடி யாக இருக்கும், அரசின் வால் பிடிக்கும் ஒருவரை அங்கு எப்படி ஏற்க முடியும்? ஆகையால், தனி ஒருவருக்கு- அவர் ஆட்சிக்குக் காவடி தூக்குபவர் என்ற ஒரே காரணத்துக்காக- அவருக்குத் தலை குனிய முடியுமா எனக் கேட்க வேண்டியதே.

அரசு இயந்திரம் என்பது மக்களைக் காக்க வேண்டியது. சட்டம் ஒழுங்கை, நீதியை, நிலை நாட்ட வேண்டியது. ஆனால் நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் கடைசி நாள் நிகழ்வு எதைக் காட்டியது? இந்த நாட்டில், அரசு விரும்பினால் எதையும் செய்ய முடியும். படை கொண்டு அடக்கி ஆளவும், அழிக்கவும் முடியும் என்பதையே காட்டியது.

அரசின்- அதன் படைகளின்- ஆட்சியாளர்களின் அடிவருடிகளின், அதுவரை கால அடாவடித் தனங்களால் சினம் கொண்டு, சிந்தித்துக் கொண்ட இளைஞர்கள் மத்தியில் சிவகுமாரன் போன்ற புலிக்குணம் படைத்த தமிழ் வீரர்கள் - இனி, நம்மை நாம் தான் பாதுகாக்க வேண்டும் - பாதுகாக்க முடியும். அதற்கு நம்மை நாம் ஆயுதபாணிகளாக்குவதைத் தவிர வேறு வழி - மாற்று வழி இல்லை என்று முடிவு செய்தார்கள். அந்த வழியில் வளர்ந்து- செழித்து- பற்றி, மக்கள் கவசமாக - உருவெடுத்து விடுதலை நோக்கி விரைவது இன்றைய காலகட்டம்.

## தர்ம யுத்தம் தோற்றதால்...

அன்று 1960-61இல் காந்திய வழியில்- வெகுசன எழுச்சி வடிவமாக நடைபெற்ற அந்த சாத்வீகப்போராட்டம் கேலிக்கூத்தாக ஒடுக்கப்பட்ட பின்னர், அந்த இடத்தில் இருந்து ஆயுதப்போராட்டம் தொடங்கியது இன்று அனைவரும் அறிந்ததாகும்.

ஆங்கில தத்துவ அறிஞர் பேட்ரண்ட் ரசல்: "தமது உரிமைகளுக்காகவும் குறைபாடுகளைப் போக்கவும் கிளர்ந் தெழுந்து, முடிந்தவரை சட்டத்துக்கு அமைவாகக் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் உரிமையை யாரும் தடுக்க முடியாது. அதை மறுத்து, இரும்புக் கரங்கள் கொண்டு அடக்கப்படும் இடத்தில் இருந்து வெடிப்பது தான் ஆயுதப் போராட்டம்" என்றவாறு, ஈழத்தமிழரின் விடுதலை வரலாற்றையும் கருத முடிகின்றது.

20.02.1961 இல் தொடங்கிய அறவழிப் போராட்டம் 18.04.1961 வரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களிலும், மாசி மாதம் 24ம் திகதி முதல் வவுனியாவில் தமிழ் காங்கிரஸ் பா.உ. சிவசிதம்பரம் தலைமையில் 500 தொண்டர்களுடனும், மன்னாரில் வீ.ஏ.அழகக் கோன் பா.உ. தலைமையிலும் நடந்தது. மட்டக்களப்பில் தந்தை செல்வா மற்றும் தலைவர்கள் தலைமையிலும் நடந்தது. சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் 21.02.1961 இல் வன்முறை பிரயோகித்தனர்.

ஐம்பது, நூறு, ஆயிரம், பத்தாயிரம் எனத் தொண்டர்கள் யாழ்ப்பாணத்திலும் மற்றும் நகரங்களிலும் அறப்போரில் குதித்த வேளை, விவசாயிகள், வர்த்தகர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் எனச் சகல மக்களும் ஆதரவு காட்டி ஊர்வலம் சென்றனர். தமிழ் மக்கள் போராட்டத்தில் குடும்பப் பெண்கள், வயோதிபர்கள் எனவும் இலட்சக் கணக்கில் திரண்டு, 'சிங்களம் மட்டும்' சட்டத்தையும் மற்றும் அநீதிகளையும் கண்டித்தனர்.

சத்தியாக்கிரகம் பற்றிக் கூறுகையில், தந்தை செல்வா, 'தமிழர் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு அரசு தவறி விட்டது. எனவே இனி எமக்கு நேரடி நடவடிக்கையாக வன்செயல், பலாத்காரம் அற்ற தமிழர்களின் கலாச்சாரத்துக்கு ஏற்ப அஹிம்சை எதிர்ப்பு மூலம் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். ஆகையினால், சத்தியாக்கிரகம் காந்தீய வழியில், ஒரு நீதியான நோக்கத்துக்காக பயன்படுத்தப் படுவதாகவும், இதன் மூலம் மக்களின் விருப்பத்தையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்தி, கட்டுப்பாடு, ஒழுக்கமும் சேர இடம்பெறுகின்றது' எனக் கூறினார்.

30.01.1961 முதல் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்ப்பதாகவும் அவர் அறிவித்தார். யாழ்ப்பாணம் கச்சேரி முன்றலில் குழுமியிருந்த சத்தியாக்கிரகிகளின் நலன்களைக் கவனித்துக் கொள்ளும் வகையில், பொதுமக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளர்களும் சூழ்ந்து நின்றனர். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அவர்களுடன் கூட இருந்து கோஷங்களை எழுப்பியும் பக்தி எழுச்சிப் பாடல்களைப் பாடியும் அரச அலுவல்கள் நடை பெறாது தடுத்தனர்.

மதத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள், அறிஞர்கள் எனப் பலரும் வந்து, வாழ்த்தியும் சுகம் விசாரித்தும் சென்றனர். குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகள், இளநீர், பழங்கள், உணவு, என அனைவருக்கும் மக்கள் எடுத்துச் சென்று வழங்கினர். சுழற்சியாக சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்று வந்தமை குறிப்பிடத் தக்கது.

அறுபதுகளில் அமெரிக்காவிலும் கறுப்பு இன மக்களின் உரிமைகளைப் பெற காந்தீய வழியில் சட்டமறுப்பு, நீண்ட ஊர்வலம் என மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் இடம்பெற்று வெற்றி கண்டமையும் இங்கு எண்ணிப்பார்க்கக் கூடியது.

## எஸ். டி. பண்டாரநாயக்கா சொன்னது!

சத்தியாக்கிரகத்தின் போது, அங்கு பார்வையாளராக வருகை தந்த கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர், எஸ்.டி. பண்டாரநாயக்கா, தீவிர சிங்கள வாதியாகவும், சீனச்சார்பு வாதியாகவும், அரசியலில் விளங்கியவர். வடக்கிலும் கிழக்கிலும் கட்சி, மத, இன வேறுபாடின்றி மக்கள் மாபெரும் இயக்கமாக மாறியிருப்பதை நன்கு உணர்ந்து, வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களின் மொழிக் கோரிக்கை நியாயமானதே. அதனை வழங்காது விடின், ஒரே ஒரு மாற்றுத் தீர்வு தான் அதற்கு முடிவாகும். அது கொரியா, வியட்நாம், கொங்கோ போன்று பிரிவினை தான் எனக் கூறினார். அவர் அவ்வாறு கூறி நாற்பது ஆண்டுகளாக நீண்டு, இன்று 2001ஆம் ஆண்டில் அதனை நோக்கித் தான் நாடு போய்க் கொண்டிருக் கின்றதென்பதை இன்னும் சிங்கள அரசியல் தலைவர்கள் சிந்திக்க மறுப்பது வேடிக்கையாகும்!

## சட்ட மறுப்பும் சிறீமாவின் சீற்றமும்

தந்தை செல்வா தலைமையில், வடக்கிலும் கிழக்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அலுவலகங்கள் யாவும் முடமாக்கப்பட்டதுடன் வரலாற்றில் முதன்முதலாகத் தமிழீழ தபால் சேவை தொடங்கப்பட்டதும் தனிநாட்டு நிர்வாகம் ஆரம்பம் என்றும் அதனைத் தொடர்ந்து தடை செய்வது பற்றியும் இராணுவம் அனுப்புவது பற்றியும் சிறீமா வானொலியில் கண்டித்து உரை நிகழ்த்தினார். அதற்கு, தந்தை செல்வா, ''பிரதமர் சிறீமாவையும் அவரது படைபலத்தையும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை. நிராயுத பாணிகளாகிய அமைதிவழிப் போராட்டத்தின் மூலம் நியாயமான தீர்வை நாடுகின்ற எம்மை ஆயுதம் கொண்டு தாக்குவது, நிராயுதபாணியாகி நின்ற அவரது கணவர் எவ்வாறு ஆயுதம் தாங்கிய கொலையாளியிடம் சிக்கினாரோ அது போலத் தான் எமது நிலையும் ஆகும் என்பதை நாம் நன்கு அறிவோம். பிரதமர் சிறீமா, ஓர் சர்வாதிகாரியைப் போல உரையாற்றியது மிக மலிவான ஏகாதிபத்திய அடக்கு முறைக்கு ஒப்பானதாகும்'' என்றார்.

## தலைவர்கள் சிறை சென்றனர்

தந்தை செல்வா உட்பட சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்க்காங்கிரஸைச் சேர்ந்த எம். சிவசிதம்பரம் பா.உ. மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டதுடன், இராணுவம் காலூன்றியது. சத்தியாக் கிரகிகள் கைது செய்யப்பட்டதை எதிர்த்தும் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியும் ஆசியாவின் மிகப் பெரிய தொழிற்சங்கங்களாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை சன நாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய சங்கங் களைச் சேர்ந்த பத்து லட்சம் தமிழ்த் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தது இலங்கை விடுதலை வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயம் ஆகும்.

## செல்வத்தை அழிக்கும் அறம்

சாத்வீகப்போராட்டம் என்ற உயர்ந்த ஆயுதம், எதிரியின் உயிருக்கு உலை வைக்காது உள்ளத்தில் உண்மையை- உணர்வை உறுத்தி உலுக்குவது. அதனை - அதன் அதிர் வினை மறுத்து, மனச்சாட்சியை இழந்தால், அதன் தாக்கம், ஆயுதம் பாய்வதைக் காட்டிலும் இரட்டிப்பாக வருத்திக் கொல்லும் வல்லமை கொண்டது! ஆயுதம் உயிரை எடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்வீகம் உயிரைத் தொட்டு, மனச் சாட்சியைத் தொட்டு நின்று வருத்தும். ஆயுதம், பிறர் தர தாக்குவது. சாத்வீகம் நின்று தன்னைத் தானே அறுக்கும் தெய்வீகம் ஆனது. அதன் விளைவு என்றோ ஒருநாள் ஏற்பட்டே தீரும். ஆயுதம் சில நேரங்களில் குறிதவறும். ஆனால் சாத்வீகம் என்ற அறம்-அதன்வழிப் போராட்டம், ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படையாய் மாறும் என்றவாறு-நாட்டை இன்று அழித்து விட்டதைக் கண்டோம்.

## உண்மைக்கு அழிவில்லை

'தந்தை செல்வா முன்வைத்த நியாயமான கோரிக்கைகள் விட்டுக் கொடுப்புகள் ஊடாக விளைந்த "பண்டா-செல்வா", "டட்லி- செல்வா" ஒப்பந்தங்கள் நீதியாக அமுல் நடாத்தப்படாது தடுத்தவர்கள் அரசுக்கட்டிலில் அமர்ந்தவர்களே' என்று பேராசிரியர் டாக்டர் கார்லோஸ் பொன்சேக்கா, மத்திய மாகாண அமைதிக் குழுவில் பேசும்போது கூறிய கருத்துக்கள், கால் நூற்றாண்டு தாண்டியும் உண்மையை உணர்த்தும் ஒன்று.
(வீரகேசரி, 24.6.1986)

பேராசிரியர், அண்மைக்கால அழிவுகள், குழப்பங்கள், அநீதிகளுக்குரிய காரணங்களாக வரிசைப்படுத்திக் காட்டும் பொழுது,

1. மேற்படி ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தாது தடுத்தது
2. 1956இல் அமைதி வழிச் சத்தியாக்கிரகத்தை காடைத்தனத்தால் குழப்பியது
3. 1961-62 சத்தியாக்கிரகத்தை இராணுவ பலத்தால் அடக்கியது
4. 1974 உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒன்பது தமிழ் உயிர்களைப் பலிவாங்கியது.
5. பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக நியாயமற்ற தரப்படுத்தல் புகுத்தியது.

எனக்குறிப்பிட்டிருந்தார்.

தந்தை செல்வாவின் நியாயமான, நேர்மையான,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான வழி நடாத்தல்களையும் எதிர்ப்புக்களையும் ஆயுத முனையில் அடக்கி ஒழித்துவிட முனைந்த மூடச்செயல்கள் ஈற்றில் ஈன்றெடுத்த முரட்டுப் பிள்ளை தான் - வன்செயல் ஆயுதம் தாங்கி அழிவை ஏற்படுத்தி அமைதி குலைத்த, இராணுவ நடவடிக்கைகளும் அதற்கு எதிராகத் தொடங்கிய ஆயுதப் போராட்டமும் என்பது இன்று தெட்டத் தெளிவாகப் புரிந்து கொண்ட ஒன்றாகும்.

## முன்னைநாள் அரச அதிபர் கூற்று

1904 தொடக்கம் 1911 வரை யாழ்ப்பாணத்தில் ஆங்கில அரசின் அரசாங்க அதிபராகப் பதவி வகித்தவர் லெனார்ட் வூல்ப் என்பவர். இவர் தமது சுயசரிதையில் தமது யாழ்ப்பாண வாழ்க்கை பற்றிச் சுவையாக வரைந்துள்ளார். தமது பதவியிலிருந்து இளைப்பாறி லண்டனில் வாழ்ந்த லெனார்ட் வூல்ப், 1961இல், அரை நூற்றாண்டு கழித்து, வவுனியாவில் சத்தியாக்கிரகம் நடைபெற்றதைக் கண்டு,

"அன்று இரண்டே இரண்டு பொலிஸ் காரர்களுடன் வட மாகாணத்தில் அதிகாரத்தைச் செலுத்த முடிந்தது. அவ்வாறு மிகவும் ஒழுங்கு, உழைப்பு உடைய மக்கள், இன்று அரசுக்கு எதிராக அறப்போரில் திரண்டுள்ளது கண்டு, இவ்வழகிய நாட்டின் இரு பெரும் இன மக்களும் பிரிந்து செல்லத் துணிந்து விட்டார்கள் போல் தெரிகிறது" எனகூறினார்.

இவை 1911க்குப் பின்னர், 1961இல் நாட்டின் குழப்ப நிலை கண்டு மனம்வருந்தியும் தமிழ் மக்கள் குறைபாடுகள் பற்றியும் கண்டு கூறிய கருத்துக்களாகும்.

## வினை அறுவடை

அன்று, தமிழ் மக்களின் தலைவர் தந்தை செல்வா, குறைகளைக் களையவும் , கூடி வாழவும் நேசக்கரங்களை நீட்டிய போது, மறுத்ததன் மறு விளைவு இன்று அனைவரும் அறிந்ததாகும்.

"வினை விதைத்தவன் தினை அறுக்க முடியாது, வினையைத்தான் அறுக்க வேண்டும்". அது போல தமிழ்மக்கள் மீது, காலத்துக்குக் காலம் காடைத்தனங்களையும் கொடுமைகளையும் கொலைகளையும் கட்டவிழ்த்து விட்டவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது, அவை தாமே சென்று தாக்குவது போல, நாட்டில் அமைதி குலைந்து, அழிவு தொடர்கிறது. இதனை இன்றும் உணராது ஆட்சியாளர்கள் மாறி மாறித் தமிழர்களை அழித்தொழிக்க முற்படுவது தெரிகின்றது. இதன் மறு விளைவுக்கு மீண்டும் அவர்களே பொறுப்பாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

சட்டம் ஒழுங்கை மதித்து வாழ்ந்த ஓர் இனத்தை பயந்தாங்கொள்ளிகள் என அரசுகள் எண்ணி அடாவடித் தனத்தையும் அடக்கு முறைகளையும் தடுப்புச் சட்டங்களையும் கொண்டு அடிப்படை உரிமைகளை மறுத்ததன் மறுவிளைவாக, மண்ணின் மைந்தர்கள்-மறவர் கூட்டம்-மான வீரர்கள்-தானைத் தலைவர் பிரபாகரன் தலைமையில் புதிய சகாப்தம் படைக்கத் தொடங்கி விட்டனர்.

## தந்தை செல்வா- ஓர் வரலாறு

ஈழத்தமிழர்களின் வரலாற்றுப்பாதை என்பது 'செல்வாவுக்கு முந்திய வரலாறு', 'தந்தை செல்வா வாழ்ந்த நாட்கள்', 'தந்தை செல்வா மறைவிற்குப் பின்னர்', எனக் குறிக்கப்படவேண்டிய ஒன்று.

மன்னர் ஆட்சி மறைந்து, மக்களாட்சி புகுந்த வேளை தமிழ் பேசும் மக்கள் என்ற தேசிய வடிவத்துடன் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த அனைத்து மக்களையும் ஓர் அணியில் திரட்டி, அரசியல் சக்தியாக்கிக் காட்டிய முதல் தலைவர் தந்தை செல்வாவேயாவார். கிழக்கில் இந்து , கிறிஸ்தவர், இஸ்லாமியர்களுக்கிடையே ஒற்றுமைப் பாலமாக விளங்கியவர் தந்தை செல்வா. கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சியின் பா.உ.க்களாக எம். எஸ். காரியப்பர், எம்.எம். முஸ்தாபா, சி.ஏ. அஹமது, எம்.ஈ.எச். முஹம்மது அலி போன்றவர்கள் விளங்கினர். வர்த்தகத்துறையில் பெரும்பாலும் ஈடுபாடு கொண்டிருந்த மக்களை அரசியல்மயப் படுத்தி அரசியலுக்குக் கொண்டு வந்தவர் தந்தை செல்வா என்பதை பலர் இன்றும் நினைவு கொள்வர். எம். இசட். மசூர் மௌலானா, ஈழத்தின் தலை சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களில் ஒருவர். அவரை அரசியலில் அறிமுகப் படுத்தியவர் தந்தை செல்வா என்பதால், 'தந்தை' என்று அன்று மேடைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கியவர்களுள் அவரும் ஒருவர். வாழும் தாய் மண்ணையும், பேசும் தாய்மொழியையும் பேணிக்காத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தின் தந்தை என்ப தால் போலும் அனைவரும் பெற்றவரின் மதிப்பும் பாசமும் தந்து அவரை 'தந்தை செல்வா' என அழைத்தனர்.

## தந்தையின் நூற்றாண்டு விழா

இன்று வாழத்துடிக்கின்ற ஈழத்தமிழினம் 'தேசபிதா' என்ற தகைமை உடையவரின் நூற்றாண்டு நிறைவை முறையாகக் கொண்டாடியதெனக் காண முடியவில்லை. மிகவும் மட்டுப் படுத்தியும் எளிமையாகவும் கொழும்பு, இலண்டன், சென்னை, பேர்லின் நகரங்களில் கொண்டாடினர். கார்ள் மார்க்ஸ் வர லாற்றை அறியாது பொது உடைமைத் தத்துவத்தையும், காந்தியைப் பற்றித் தெரியாது சத்தியாக்கிரகத்தையும் , ஹிட்லர் வரலாறு அறியாது இன ஒதுக்கலையும், சே-குவேராவை உணராது புரட்சியையும் எப்படி ஒருவரால் எளிதில் அறிய முடியாதோ அவ்வாறே ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற் றையும் அபிலாஷைகளையும், கூடி வாழ நெடுநாள் நீட்டிய கரங்களையும், காட்டிய நீதி நியாயங்களையும், தந்தை செல்வா அரசியலில் ஆற்றிய ஆற்றல் மிகு பண்பையும் அறியாமல் புரிய முடியாது.

மனிதர்கள் வாழ்வு என்றும் சுருக்கமானது. ஆனாலும் சிலர் மக்களின் வாழ்வைப் பணயம் வைத்து வாழ்ந்து மடிகிறார்கள். சிலர் தமது வாழ்வையே அர்ப்பணித்து நாடு, இனம், மொழி, வாழ வேண்டித் தாம் மடிகிறார்கள். தனி மனிதனின் வாழ்வை தன் இனம் வாழ வேண்டி ஈகம் செய்வது என்பது அருமையிலும் அருமை. அத்தகையவர்களை தெய்வத்திற்குச் சமமாகப் போற்றல் வேண்டும். எனவே தான் வரலாறு உயிரைப் போன்றது- உண்மையானது. அதனைப் போற்றாது மறப்பின், வாழ்வு நகைப்புக்கிடமாகி நலிந்து விடலாம். நேற்றைய நியாயங்கள் இன்றைய சாட்சியங்களாகும். அது போலவே இன்றைய தியாகங்கள் நாளைய வரலாற்றின் அத்தியாயங்கள். அவற்றில் ஒன்றை மறந்தாலும் இனம் நலிவடைந்து வலுவிழப்பது என்பது உண்மை. துரோகங்கள் துடைத்துத் தியாகங்கள் தீபமாக ஒளி சேர்க்க வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்து வாழ்வது முடியாது, ஏன்?

தந்தை செல்வா மறைந்து கால் நூற்றாண்டை எட்டுகின்ற இந்நேரத்தில், அவர் ஈழத்தமிழினத்தின் விடுதலையைத் தொட்டுக்காட்டிய 'கடைசி உயில்' தான், 'தனித்தமிழீழம்' என்ற கோட்பாடாகும். இதனை அவர், இலங்கைப் பாராளுமன்றத்தில், ஆங்கிலேயரிடம் இருந்த ஆட்சி அதிகாரம், சிங்களப் பெரும்பான்மைக்கு மாற்றப்பட்ட இருபத்தெட்டாவது வருட நிறைவுநாள் 04.02.1976 அன்று, மக்கள் ஆணை பெற்று, பாராளுமன்றத்தில் 'தனித்தமிழீழம்' என்ற கோரிக்கையைத் தெளிவு படுத்தி உலகிற்குப் பிரகடனம் செய்தார். தந்தை செல்வா அன்று அவ்வாறு பிரகடனம் செய்து உரையாற்றிய போது, உலக நாடுகளும் சிங்கள ஆட்சியும் அதனைப் பொருட்படுத்தவோ, தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளவோ தவறி விட்டன! குறிப்பாக, சிங்களத் தலைவர்கள், தந்தை செல்வாவின் கருத்துக்களைக் கணக்கெடுக்கத் தவறினரென இன்று புரிந்து கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்!

தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும், அவர்களின் நியாயமான கோரிக்கைகளையும் உரிய பங்குகளையும் மறுத்து, இரும்புக்கரங்களின் உதவியால் அடக்கி, அப்பாவிப் பொது மக்களின் உடைமைகள் உயிர்களை அழித்து அவலங்களுக் குள்ளாக்கி, அமைதியாகத் தமது உரிமைகளைக் கேட்ட போது, அசட்டை செய்து ஏமாற்றியதன் எதிர் விளைவுதான் தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையாகும். இதற்குப் பின்னர் இன்று தொடர்கின்ற, வீறு கொண்ட விடுதலைப் போராட்டம், தமிழீழ மக்களின் முடிந்த முடிவாகிய 'தனிநாடு' நோக்கிச் செல்கின்ற ஒன்றாகும். இப்போராட்டம், கடந்த 17 ஆண்டுகளாக, பல்வேறு நிலைகளையும் தாண்டிய ஓர் நாட்டின மக்களின் அற்புதமான அர்ப்பணிப்புக்களின் வெளிப்பாடாகும்.

இதனைத் தந்தை செல்வா மறைந்த பின்னர், ஆயுதப்போராட்டமாக வடிவமைத்து, தலைமை தாங்கித் தொடர்ந்து, சாதனைகள் படைத்து, தயங்கியும்- பயந்தும், பலியாகியும் - போய்க் கொண்டிருந்த தமிழ்ப் பெண்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானமிகு மறமங்கையராக மாற்றி அணிவகுத்துச்சேர, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்து தாயக மண்ணை விடுவிக்கு முகமாக, தமிழ்த் தேசியத்தின் ஏற்றமிகு தலைவராகத் திகழ்பவர் வே. பிரபாகரன் ஆவார்.

## ஏமாற்றத்தின் எதிர்விளைவு

கடந்தகால அரசியல் நடவடிக்கைகள், குறிப்பாக, தந்தை செல்வா தலைமையில் நடந்தேறிய, அடிப்படை உரிமைகள் பற்றிய பேச்சுவார்த்தைகள், நியாயமான கோரிக்கைகள், குறைந்த பட்சக் கோரிக்கைகள், ஒப்பந்தங்கள், மாநாடுகள், சமரச முயற்சிகள், விஷேட சட்டவாக்கங்கள் உட்பட பல்வேறு அரசியல் முயற்சிகள் எல்லாமே, சிங்களக் கட்சிகள், தலைமைகள், பௌத்த பீடங்கள் ஆகியவற்றின் பிடிவாதப் போக்கினால் தமிழ் பேசும் மக்கள், குறிப்பாக, இளந் தலைமுறையினர் உட்பட அனைத்து மக்களும் சிங்களவர்களின் ஏமாற்றுப்போக்கை நன்கு புரிந்து கொண்டனர். இந்தக் கட்டத்தில், மிதவாதக் கொள்கையைப் பின்பற்றி மீண்டும் அரசியலில் ஈடுபட்ட- 'தந்தை செல்வா காட்டிய வழியில், தனிநாட்டுக்கான-' தமிழீழக் கோரிக்கை மீது, 1977 ல் நடந்தேறிய தேர்தலில் வெற்றி பெற்ற தலைவர்கள் - 'வாய்ச்சொல் வீரர்களாக' மட்டுமே வலம் வந்தனர். செயலில் எதனையும் செய்யத் துணிந்தாரில்லை!

இதன் எதிரொலியாக, இளம் தலைமுறை யினர் திடம் கொண்டு, கட்டி எழுப்பிய 'ஆயுதப் போராட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது. பல்வேறு நிலைகளில் இருந்து, இன்று இப்போராட்டம், பரிணாம வளர்ச்சியடைந்து, முனைப்புடன், தமிழீழ விடுதலையை முன்னெடுத்துச் செல்வதைக் காண முடிகின்றது.

எனவே தான், தந்தை செல்வா, அறுதியாகவும் இறுதியாகவும் பிரகடனப் படுத்திய தமிழீழக் கோரிக்கை மீது, அவரின் பின் வந்த மிதவாதத் தலைமைகள் தவறி விட, அவரது அடிச்சுவட்டில்- மிகத்திடமாகத் தடம்பதித்த, புதிய தலைமையை தமிழ் மக்கள் அடையாளம் கண்டவாறு, அரசியல் வாதிகள் காணத் தவறினர்! இதனால் ஆங்காங்கு முரண்பாடுகள் எழுந்ததென்பது புரியாததல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நடைபெறுகின்ற விடுதலைப் போராட்டத்தில் இருந்து விலகி நின்று தமது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்ற பேர்வழிகளைத் தமிழ்மக்கள் ஒரு போதும் மறந்துவிட மாட்டார்கள்!

## போரும் சமாதானமும்

ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்படுகின்ற இன மக்கள் உலகெங்கும் உரிமைப்போராட்டங்கள் மூலம் தமது வாழ்வுக்கான உரிமையை நிலைநாட்டி வருவது, வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களைக் கொண்ட நிலையில், சிறுபான்மை-பெரும்பான்மை, ஆள்வோர், ஆளப்படுவோர், எனக் காணப்பட்டு, வேற்றுமை தோன்றும்போது, பாதிப்புக்குள்ளாகிய மக்கள், தமது மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக குரல் எழுப்புவது இயல்பாகும். இவ்வாறு, பாதிப்படைந்த மக்களின் குறைகளை, முறையாகவும் நீதியாகவும் தீர்க்க, குறிப்பாக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் நிர்வாகிகள் தவறும் போது, அமைதிக்கும், முன்னேற்றம் - சமாதான சகவாழ்வுக்கும், பங்கமும் ஏற்பட ஏதுவாகின்றது. கடந்த அரை நூற்றாண்டு மொழிச்சிக்கல், பல்வேறு கோணங்களில் வளர்ந்து, இன்று இலங்கைத் தீவில் ஓர் போராட்டக் களத்தை ஏற்படுத்தியுள்ளது

ஈழத்தமிழர்கள், நாட்டின் பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டு ஆற்றிய பங்கு முற்றாக மறக்கப் பட்டுள்ளது. தமிழரின் தாய்மொழிக்குத் தகுந்த இடம், சட்டப்படி வழங்கிச் செயலாக்கம் பெறவில்லை. தமிழர் தாயகபூமி, பிற மக்களால் ஆக்கிரமிப்பு, பறிப்பு, என இழக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மேலாகத் தமிழர்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும், நடமாட்டம், பேச்சு, எழுத்து, அடங்கிய கருத்துச் சுதந்திரமும் வாழ்விடச் சுதந்திரமும் எனச் சகல மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு, அடிமைத்தனம் ஒன்றே உரியதாக காண முடிகின்றது. இந்நிலையில், 'போராட்டம்' தவிர வேறு வழியில்லை எனத் தள்ளப்பட்டதால், தனித் தமிழீழம் ஒன்றே தமிழருக்கு மார்க்கம் எனப் புரிய வேண்டியதும் அறிய வேண்டியதுமாகும்.

போராடுவதைத் தவிர, வேறு வழியில்லை எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனப் படுத்திய வேளையிலும் அதனைப் புரிய முயலாது-குறைகளைத் தீர்க்கமுயலாது, பேச்சுவார்த்தை, ஒப்பந்தங்கள் மூலம் குறைந்த பட்சக் கோரிக்கைகளைத் தானும் வழங்க முற்படாது, அடக்கி ஒடுக்கி அடிமைகளாய் தமிழ் மக்களை ஆளமுடியும் என்ற எண்ணத்துடன் ஆட்சி பீடம் ஏறியவர்கள், முடிவு செய்த மூடத்தனத்தால் மட்டுமே சமாதான சகவாழ்வுக்குச் சமாதி கட்டிவிட்டு, அழிவுப் போரை வருவித்துக் கொண்டிருப்பதை இன்று உணர்ந்து கொள்ள முடிகின்றது! 'பிரிவினை', 'பயங் கரவாதம்' என்ற கூச்சல்கள் எங்குமே ஒலிக்கப்பட்டாலும், அதற்குப் பின்னால் மறைந்திருக்கின்ற உண்மைகளைப் புரியாத வரைக்கும் சமாதானத்தை யாராலும் நிலைநாட்டிவிட முடியாது!

சமாதானம், அமைதி, நீதி, சட்டம், ஒழுங்கு, யாவுமே குழிதோண்டிப் புதைத்தவர்கள் காலங் காலமாக, தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல், ஆட்சி செய்த சிங்களத் தலைமைகளும் அவர்களை ஆதரித்து வந்த சிங்கள மக்களுமேயன்றி சமாதானமாகவும் சாத்வீக வழியிலும் உரிமைகளைக் கேட்டு ஏமாற்றங் கண்ட தந்தை செல்வாவும், அவருக்குப் பின்னர், தலைமையேற்று வழி நடத்தி உரிமைப் போரைத் தொடருகின்ற தலைமுறையினரும் அல்லர் என்பதை இன்றாவது புரியாதிருப்பது விந்தையாகும்.

## ஓயாத எண்ணம்ஒன்றே!

'மன்னன் உயிர்த்ததே மலர்தலை உலகம்' என்ற நிலை மாறி, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்று கூறி, மேலைநாட்டு, கட்சி அரசியல் முறை- 'மக்கள் தலைமை' (சனநாயகம்) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்வழி வாக்குச் சீட்டுக்கள் மூலம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது, புதிய அரசியலில் உச்சக் கட்டமாகியது. இதன் பொருள், மக்கள் கூட்டத்தினர், பிரதேசம், இனம், மொழி என வரையறைக்குள் வாக்குமூலம், பெரும்பான்மையாகத் தீர்மானம் எடுக்கும் பட்சத்தில், அதனை ஏற்று, செயலாக்கம் செய்வது, மேலை நாட்டின் அரசியல் சனநாயகத் தத்துவத்தின் சிறப்பம்சம் ஆகும்! இதனை மீறி, ஒரு நாட்டில் அல்லது அந்நாட்டின் ஓர் பூர்வீக குடிகளாகிய சிறுபான்மை மக்களின் ஏகோபித்த அல்லது பெரும்பான்மைத் தொகையினரின் முடிவை அவமதித்தோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்க மறுத்தோ அடக்கியோ நடக்க முனைந்தால், அந்த இடத்திலிருந்து 'சனநாயக சகவாழ்வு' சாகடிக்கப்பட்டு விட்டதென்பதுதான் உண்மையாகும். மக்களது விருப்பத்திற்கு மாறாக, இராணுவ வெற்றியின் விளைவாக இணைக்கப்பட்ட செக்கோஸ்லவேக்கியா, அண்மைக்காலத்தில், மக்களின் தீர்ப்புக்கிணங்க 'செக்' குடியரசாகவும், சலோவாக்கியா நாடாகவும் அமைதியாகப் பிரிந்து கொண்டனவென்பது, புதிய மக்கள் சனநாயகத்தின் தீர்ப்புக்குக் கிடைத்த வெற்றியாகும். எனவே தான், வேறுபட்டு, மொழி, இன, பிரதேச வேறுபாடுகளின் கீழ் வாழும் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் எங்கு வாழ்ந்தாலும் இது ஏற்புடையதாகும். இவ் வாறன்றி, எந்த விலை கொடுத்தும் இரும்புக் கரங்கள் கொண்டு செயற்கையாக இணைப்பு-ஒருமைப்பாடு-தேசிய ஒற்றுமை என முயன்றால், அங்கு இரத்த ஆறு ஓடுவதுடன், கொடுமைகள்-வன்முறை, கொலை எனத் தொடர்கதையாகவே இருக்கும் என்பதற்கு, இலங்கை ஒரு உதாரணமாகும்.

கனேடிய மாநிலமாகிய கியுபெக்கை தனி நாடாக்கிட அந்நாட்டில் வாழும் பிரெஞ்சுக் குடியேற்ற மக்களுக்கு இருப்பதைப்போல, இலங்கையின் பூர்வகுடிகளாகிய-ஈழத் தமிழர்களுக்கும் இலங்கை இந்திய ஒப்பந்தம் (1987) கைச்சாத்திட்டு ஏற்றுக் கொண்டவாறு, வடக்கு- கிழக்கு பிரதேசம், ஈழத் தமிழகத் தாயக பூமியில் பிரிந்த செல்லும், சுயநிர்ணய உரிமையை எவராலும் மறுக்க முடியாது. இதனை, உலகின் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்போர் மறைக்கவும் கூடாது. இதனை நன்றாக விளங்கிக் கொண்ட தந்தை செல்வா, கால் நூற்றாண்டுக்கு முன்னரே 'எமது முன்னோர்கள் புத்திசாலிகள். அவர்கள் தமக்கென ஒரு தாயகத்தை வடக்கு-கிழக்குப் பிதேசத்தில் வரையறுத்து ஆட்சி செய்து, தமது மொழி, கலை, பண்பாடு, சமயம், என வாழ்ந்துள்ளார்கள். இவ்வுரிமையை ஐரோப்பியர் எம்மிடமிருந்து கைப்பற்றி, 4.2.1948 வரை ஆண்டார்கள். இலங்கை சுதந்திரம் பெற்ற அந்நாள் முதல், எமது தாயகத்தின் உரிமை எமக்கு மீண்டும் கிடைத்துள்ளது! இதனை, எப்பாடு பட்டும் நாம் காப்பாற்றியே தீரவேண்டும். இன்றேல், சிங்களவருக்கு அடிமையாக வாழ நேரிடும்! நாம் ஒருபோதும் அவ்வாறு அடிமைகளாக வாழ முடியாது! நாம் எமது வாழ்வுரிமைக்காகப் போராடி அழிந்தாலும் அழிவோமேயன்றி, எம் மக்கள் அடிமைகளாக வாழ மாட்டார்கள்!' என்று கூறி உலகிற்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்த பேருண்மை, இன்று விஸ்வரூபமாகிக் கொண்டிருப்பதைக் கண்ட பின்னரும், உலகம் கண்மூடிப் பால்குடிக்கின்ற பூனை போன்று யதார்த்தத்தைப் புரிய மறுப்பது வியப்பும் வருத்தமும் ஆகும்.

தந்தை கூறிய உண்மைக்கு உருவம் தந்து, தமிழர் உயிர்நாடியாம் தாயக மீட்புப் போரை, தலைமையேற்று நடாத்துகின்ற தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் தலைமையில், தமிழீழம் என்ற ஓர் நாடு உலக வரைபடத்தில் இடம்பெறும் என்ற எண்ணம் ஒன்றே இன்று ஓயாது ஒழியாது அலை அலையாக அனைத்துத் தமிழ் உள்ளங்களிலும் வீசிக் கொண்டிருக்கின்றது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

## தாய்மொழியும் தாயகமும்

1956ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதியில் நிறைவேற்றப்பட்ட 'தனிச்சிங்களச் சட்டம்', 1961ம் ஆண்டு தை முதல் அமுலுக்கு வந்தது. இதற்கிடையில், இரு இனங்களுக்கு மிடையே ஏற்பட்ட கலவரங்கள், எதிர்ப்புக்கள், ஒப்பந்தம் எனக் காணக்கூடியதாகும்.



தந்தை செல்வா, திரு அ.அமிர்தலிங்கத்துடன் மேற்கொண்ட தமிழகப்பயணத்தின் போது பெரியார் ஈ.வே.ரா.வை சந்தித்து உரையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மகா சபையின் பிதாமகர் எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா, 1937ம் ஆண்டு முதல் தமிழருக்கு எதிராகத் தொடங்கிய அமைப்புத் தான் சிங்கள மகாசபை. 'சிங்களத்தை 24 மணித்தியாலத்தில் ஆட்சி மொழியாக்குவேன்!' என ஆர்ப்பரித்து, ஆட்சியைக் கைப்பற்றி, தனிச் சிங்களச் சட்டத்தைப் புகுத்தியவர். அவரால் கொண்டாடப்பட்ட 2500ம் வருட புத்த ஜெயந்தி முதல், ஈழத்தமிழரின் இரத்தம் சிந்தத் தொடங்கி, இன்று வரை ஆறாகப் பெருகிக் கொண்டிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. தந்தை செல்வாவின் தலைமையில், அமைதியாகவும் உறுதியாகவும் தமிழ்மொழிக்கு சம உரிமை கோரி சாத்வீகப் போராட்டம் நடைபெற்ற வேளை, குண்டர்களை ஏவித் தமிழ்த் தொண்டர்களைத் தாக்கிய போது, உலகமே அதனைக் கண்டித்ததும் இந்தக் காலத்தில் தான்!

'சிங்களவரும்- தமிழர்களும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ வழி வகுக்கும் விதத்தில் ஏற்ற அரசியற்கோட்பாட்டை- 'கூட்டாட்சி முறையை' அமுல் செய்யக் கூடாது' எனப் பிரதமரிடம் நேரில் சென்று கேட்ட வண. பிதா. தனி நாயகம் அடிகளாரிடம், 'நான் வாள் கொண்டு தீர்வு காண்பதென்ற முடிவுக்கு வந்துள்ளேன்' ("Father, I will rather decide it on the point of sword!") என்று கூறக்கேட்ட அடிகளார் அதிர்ச்சி அடைந்ததும், பின்னர் புத்த பிக்குவின் துப்பாக்கிக் குண்டுக்கு அவர் பலியானதும் உலகம் அறிந்த செய்தியாகும்.

தமிழ்மொழி உரிமைப் போரைத் தலைமை யேற்று நடாத்தி, நாட்டின் ஒரு பகுதியில் அரசுஇயந்தி ரத்தை இயங்காது செய்ததுடன் சட்டத்தை மீறி அமைதிவழிப் போரில் இறங்கியதால் 26.7.1957 இல் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இதுபற்றி விளக்கிய தந்தை செல்வா, 'இது எமது எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவு செய்யா விட்டாலும், ஓர் கௌரவமான அந்தஸ்திற்கு வழிகாட்டியுள்ளது!' என்று குறிப்பிட்டார். ஆயினும் அவ்வொப்பந்தம் மீறப்பட்டது! டட்லி-செல்வா ஒப்பந்தமும் 1965 இல் அதேகதிக்குள் தள்ளப்பட்டது.

## தீர்வுகள் தீய்ந்து போயின!

காலத்துக்குக் காலம் தமிழ் மக்களின் குறைந்த பட்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிலாஷைகளைத் தானும் நிறைவு செய்து நாட்டின் ஒற்றுமையையும் மக்களின் முன்னேற்றத்தையும் பேண முயலாது, சட்டங்களின் மூலம் இரும்புக்கரங்களினால் தமிழர்களின்- தாய்மொழி, தாயகம் மற்றும் தலையாய உரிமைகள் அத்தனையும் மறுக்கப்பட்டதனால் எழுந்ததே இன்றைய தனித் தமிழீழப் போராட்டம் என்பதை வரலாறு எடுத்துக் காட்டுவதாகும்.

இதுவரை பொருந்திய கீழ்க்காணும் நடவடிக்கைகளுள்

1. பண்டா-செல்வா ஒப்பந்தம் (1957)
2. தமிழ்மொழி விஷேட விதிகள் ஆணைச்சட்டம் (1960)
3. டட்லி-செல்வா ஒப்பந்தம் (1965)
4. பிரதேச அபிவிருத்திச் சபை (1981)

ஆகியவை அடங்கும். இதனுள் பிரதேச அபிவிருத்திச் சபை தவிர்ந்த ஏனையவை தந்தை செல்வா தலைமையில் கைச்சாத்திடப்பட்டன.

தந்தை செல்வா, தாயகம் பற்றிய- தாய்மொழி பற்றிய உடன்பாடுகளில் எதனையும் விட்டுக் கொடுக்கவில்லை!

தாய்மொழி விடயத்தில், பண்டா-செல்வா உடன்பாட்டின் கீழ், வடக்கு-கிழக்கு அடங்கிய பிரதேச சபை(Regional Council) க்கு, பாராளுமன்ற அதிகாரம் வழங்குவதாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. இவ்வுடன்பாடு மீறப்பட்ட பின்னர், கூட்டாட்சி அரசியல் திட்டம் முன்வைக்கப்பட்டது.

அடுத்து, டட்லி-செல்வா உடன்பாட்டின் கீழ் (முன்னர் குறிப்பிடப்பட்ட பிரதேச சபை இணைப்பு) மாகாணசபைக்கு மாற்றமாகியது. டட்லி-செல்வா உடன்பாட்டின் கீழ்,

1. வடக்கு-கிழக்குமாகாணங்களில் உள்ள காணியற்ற தமிழ் பேசும் மக்களுக்கே முதலிடம் என்றும்,
2. வடக்கிலும்- கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கும்
3. ஏனைய இலங்கைப்பிரசைகளுக்கும் வழங்க உடன்பாடாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றது ஏன்?

இவ்வாறு சுதந்திரம் பெற்று பாராளுமன்ற அரசு முறை மேற்கொள்ளப்பட்ட பின்னர், தமிழினத்தின் அரசியலை நெறிப்படுத்தி, வழிநடத்தி, இதய சுத்தியோடும், உணர்வோடும் விட்டுக் கொடுக்காது அமைதி கண்டு வாழ முயன்று அற வழியில் எதிர்ப்புத் தெரிவித்து, பேச்சுவார்த்தை, உடன்பாடு, விட்டுக்கொடுப்பு என எல்லாவற்றையும் பாவித்து ஏமாற்றம் கண்டபின்னரே, தனித்தமிழீழம் தவிர தமிழரின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட வேறு வழி இல்லை எனக் கண்டவர் தந்தை செல்வா.

இவ்வாறு தமிழர்களுக்கு உரிமைகள் வழங்க மறுத்தும், ஏமாற்றியும் வந்த சிங்களத் தலைமைகள் தமிழர்களுடன் இணைந்து சமமாக வாழ்வதை மறுத்து, அவர்களை ஒழித்துக் கட்டவும் அடிமைப்படுத்தவுமே எண்ணம் கொண்டவர்களாக இருப்பதே இன்று ஆயுதப் போராட்டத்தை மேற் கொள்ள வேண்டியதாக மாற்றம் பெற்றது.

ஈழத்தமிழர்கள், தம் முதன்மையான உயிர் போன்ற உரிமைகளாகிய தாயக மண்ணையும் தமிழ் மொழியையும் என்றுமே விட்டுக்கொடுக்கப் போவதில்லை- விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதை 1956இல் தனிச்சிங்களச் சட்ட விவாதத்தில் உரையாற்றிய வவுனியா பா.உ. திரு சி. சுந்தரலிங்கம், எதிர்காலத்தில் இடம் பெறப்போகின்ற ஆயுதப் போராட்டத்தைக் கணித்தவர் போல, பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நாங்கள் சிங்கள மொழியைப் படிப்பதற்கு முன்னர் ஆயுதம் பாவிப்பதை அறிந்து கொள்ள வேண்டியிருக்கும் அதில் சிறிதும் தவற மாட்டோம்"

( "We will learn to use fire-arms before we learn Sinhala- Make no mistake on that score" )

-***C.Suntharalingam M.P., Vavuniya. Hansard, Vol.24, Col.1805, 1956)***)

இவ்வாறு அன்று கூறிய அவரின் கூற்று இன்று எத்துணை உண்மை என்பதை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் தேவை

சிலர் மறைந்த பின்னரும் மக்கள் உள்ளங்களில் வாழ்வதும், இன்னும் சிலர் உயிர் வாழும் போதும் இறந்தவர்களாகக் கணிக்கப் படுவதும் உண்டு. அந்த வகையில் தந்தை செல்வா நூற்றாண்டு விழாவையொட்டி 23.2.1997இல் வீரகேசரி ஆசிரியர் தலையங்கத்தில் எழுதிய குறிப்பிலிருந்து அவர் மறைந்தும் மறையாது மதிக்கப்படும் ஒருவர் என்பதை அறியலாம்:

**இலங்கைத் தமிழினம் காலத்திற்குக் காலம் பல தமிழ்த் தலைவர்களைப் பெற்று வந்துள்ளது. அந்த வரிசையில் சமகால அரசியல் நீரோட்டத்தையும் தமிழினத்தின் போராட்ட வரலாற்றையும் முன்வைத்து நினை வோட்டத்தை மீட்டும் போது மனத்திரையில் நீங்காது நிலைத்திருப்பவர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களே!**

**சிங்களப் பெரும்பான்மைவாதம் நாட்டில் வேரூன்றி சிறுபான்மை மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப் பட்டு தமிழினம் ஓரங்கட்டப்படுவதை தீர்க்கதரிசனத்தோடு உணர்ந்து அவற்றுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்க வைத்தவர் அவரே!**

**வடக்கு-கிழக்கு-மலையகம் என்று கூறு பட்டுக்கிடந்த தமிழ் மக்களைத் தட்டியெழுப்பி, இனத்துக்கு வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே எடுத்துச் சொல்லி அரசியல் ரீதியாக ஒன்றுபட வைத்தவரும் அவரே!**

**சத்தியாக்கிரகம், வீதி மறியல், ஆர்ப்பாட்டம் என்றும் அண்ணல் மஹாத்மா காந்தி காட்டிய அஹிம்சைவழிப் போராட்டத்தைத் தொடக்கி, தமிழ் மக்கள் மத்தியில் இன எழுச்சிக்கும் விழிப்புணர்வுக்கும் வித்திட்டவரும் அவரே!**

**அவர் இன்று உயிருடன் இருந்திருப்பாரேயானால் எதிர்வரும் மார்ச் 31ம் திகதி தமது 100வது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருப்பார். தமிழினத்தின் தந்தை என்றும் தீர்க்கதரிசியென்றும் எல்லோராலும் அன்பொழுக அழைக்கப்பட்ட இவருக்கு அவர்பால் அன்பு கொண்ட தமிழ்ப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமகன்மார் கூடி நாடளாவியரீதியில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முடிவு செய்திருப்பது காலத்தின் தேவை மட்டுமல்ல, வரவேற்கப்பட வேண்டியதொன்றுமாகும். தந்தை செல்வா என்றுமே சொல்லின் செல்வராக விளங்கவில்லை. சிறிது பேசி, பெரிய காரியங்களைச் செய்யும் செயல் வீரனாகத் திகழ்ந்தார்.

மலையகத் தமிழ்மக்களுடைய குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட போது, இன்று அவர்களுடைய கழுத்து அறுக்கப்படுகிறது. நாளை நமக்கும் இதே கதிதான் என்று தீர்க்கதரிசனத்தோடு கூறியவர். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாட்டில் ஒற்றையாட்சி நிலவுமானால் அது ஓரினத்தின் வாழ்வுக்கும், மற்றைய இனத்தின் வீழ்ச்சிக்கும் வழி வகுக்கும் என உணர்ந்தே, இணைப்பாட்சித் தத்துவத்தை முன்வைத்தார். ஆட்சியாளர்கள் மறுத்து விட்டனர்.

தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்படும் இனமாக வாழ்வதை அவர் விரும்பவில்லை. சலுகைகளைக் கெஞ்சிப் பெறலாம். விடுதலையைப் போராடித்தான் பெறமுடியும் என்று உணர்த்தியவர். இது கடந்த கால வரலாறு. இன்று அனுப வித்து வரும் துன்ப துயரங்களுக்கு விடிவு எப்போது என்று தமிழினம் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றையும் செயல்திறனையும் இளைய பரம்பரையினர் மத்தியில் நூற்றாண்டு விழாக்கள் மூலம் பறைசாற்ற முன்வந்திருப்பது நொந்து போயிருக்கும் நெஞ்சங்களுக்கு ஒத்தடம் கொடுப்பதாக இருப்ப தோடு வாழ்வில் தெம்பையும் ஏற்படுத்துவதாக இருக்கும்.

அவர் மறைந்து கால் நூற்றாண்டு காலமாகி விடினும் அவரின் மாண்புகளையும் இன, மொழி, நாடு என எண்ணி ஆற்றிய பணிகளையும், குறிப்பாக எழுபதுகளில் பிறந்த புதிய தலைமுறையினர் அறிய முடியாது போய்விட்டது. தமிழரின் அறிவியல் தேட்டங்கள் - யாழ் நூல்நிலையம் உட்பட- அனைத்தும் அழித்தொழிக்கப்பட்ட நிலையில் வெளி நாடுகளில் வாழும் ஒரு சிலராவது உண்மை வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடுதல் காலத்தின் தேவையாகும்.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே!

-சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா நாமம் வாழ்க!

அன்பு பொறுமை வீரமாதி
அரிய பண்பு கொண்டவர்
அசலம் அன்ன உறுதி நெஞ்சம்
ஆழ்ந்த சொல்லும் கண்டவர்
துன்பங்கோடி மண்டி வரினும்
துயருறாத தூய நெஞ்சர்
தந்தை செல்வா நாமம்
சிந்தை கொண்டு வாழ்த்துவோம்!

மானத் தமிழன் ஈழத்தீவில்
மாண்பு கொண்டு வாழவேண்டி
மனதில் கனவு கண்டவர்
ஞானத் தலைவர் எண்ணம் போல
வேளை வந்து நாளை மலரும்
தமிழீழ நாடு காண இங்கு
நாடி நின்று வெற்றி காண
நாமும் வாழ்த்திப் பாடுவோம்!

ஈழமைந்தன் – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக் கோரிக்கை முதல் தனிநாட்டுக் கோரிக்கை வரை
## பேரினவாதத்தை தந்தை செல்வா எதிர்கொண்ட அந்த 21 ஆண்டுகால அரசியல்

**-ஆர்.பாரதி-**

இலங்கையின் இனவாத அரசியலில் தமிழ் பேசும் மக்களின் ஒரு தலைவர் என்ற முறையில் தந்தை செல்வநாயகம் செல்வாக்குச் செலுத்தியது 21 ஆண்டுகள் மட்டும் தான். 1956ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரையிலான அந்த 21 ஆண்டுகளிலும் தந்தையின் பெயர் இந்நாட்டு அரசியலிலிருந்து பிரிக்க முடியாததொன்றாகி விட்டது. உண்மையில் இலங்கையில் இனவாதம் எவ்வாறு வளரப் போகின்றது என்பதையும் தமிழர் போராட்டம் எவ்வழியில் செல்லப்போகின்றது என்பதையும் இந்த 21 ஆண்டுகள் தெளிவாகவே காட்டியுள்ளது.

இந்நாட்டக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்ட போதே தந்தை செல்வா அரசியலில் இறங்கிவிட்டார். ஜீ. ஜீ.பொன்னம்பலத்துடன் இணைந்து தமிழ்க்காங்கிரஸை ஆரம்பித்த அவர், அக்கட்சியின் வளர்ச்சிக்காக செய்த பணிகளும் அளப்பரியது. காங்கிரஸிலிருந்து தந்தை விலகியபோது அமைதியும் சாந்தமும் கொண்ட அவரால் ஒரு தலைமையை எவ்வாறு வழங்க முடியும் என்ற கேள்வியைப் பலர் எழுப்பினார்கள். ஆனால் உண்மையில் தந்தை செல்வநாயகம் தமிழ்த்தேசிய இனத்தின் தலைமையைத் தேடிச் செல்லவில்லை. தலைமை தான் அவரைத் தேடிச் சென்றது. குழம்பியுள்ள சூழ்நிலை ஒன்றில் சும்மா இருக்காது ஏதாவது செய்தேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் தந்தை செல்வாவைத் தமது தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது 195ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாகியது. அத்தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்ற அவர் அடுத்து வந்த 21 வருடங்களில் சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான ஒரு சின்னமாகத் திகழ்ந்தார். தமிழர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வ காண வேண்டுமானால் தந்தையுடன் பேசியேயாக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிங்களம் மட்டும் சட்டம்: செல்வாவின் நிலைப்பாடு

தமிழ்த் தலைவர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றபின்னர் அவர் எதிர்கொண்ட முதலாவது அரசியல் பிரச்சினை சிங்களம் மட்டும் சட்டமாகும். 1956ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மக்கள் முன்னணி அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது அதற்கெதிரான போராட்டத் துக்குத் தலைமைதாங்க வேண்டிய பொறுப்பு இயற்கையாகவே தலைவர் செல்வநாயகத்திடம் விழுந்தது.

காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்தார். அப்போதைய பாராளுமன்றத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த எதிர்ப்புப் போராட்டம் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் தொடர்ச்சியான அதிர்ச்சி அலைகளைக் கிளப்பி விட்டது. சிங்களம் மட்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி நிற்பது ஆபத்தானது என்பதை அப்போராட்டங்கள் பண்டாரநாயக்கவுக்கு உணர்த்த முற்பட்டன.

ஆனால் பண்டாரநாயக்க அதனை உணராத நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்வா தள்ளப்பட்டார். 1956 ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் வரலாற்றுப் புகழ்மிக்க திருமலை யாத்திரையை அவர் நடத்தினார். அதன் பின்னர் ஆகஸ்ட்



**பண்டா-செல்வா பேச்சுவார்த்தையின் போது பிரதமர் பண்டாரநாயக்கவுடன் தந்தை செல்வா. அருகில் திருகோணமலை எம்.பி.ஆர்.இராஜவரோதயம் மற்றும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 இல் திருமலையில் நடைபெற்ற மாநாட்டில் நான்கு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உண்மையில் இந்த நான்கு தீர்மானங்களுமே 1957ஆம் ஆண்டு முதல் இலங்கையிலிருந்த அனைத்து அரசாங்கங் களுடனும் தமிழ்ப் பிரச்சினை தொடர்பான பல்வேறு பேச்சு வார்த்தைகளுக்கும் உடன்படிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைந்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

## பண்டா- செல்வா உடன்படிக்கை

அதே வேளையில் இந்த நான்கு விடயங்களுமே பண்டாரநாயக்கவுடன் அவர் செய்து கொண்ட உடன் படிக்கைக்கும் அடிப்படையாகவிருந்தது. 1957 ஜுலையில் கையெழுத்திடப்பட்ட இந்த உடன்படிக்கை தான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட முதலாவது உடன்படிக்கையாகும். அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு அடிப்படையையும் இந்த உடன்படிக்கையே முன்வைத்தது.

இந்த ஒப்பந்தம் இலங்கையிலுள்ள தமிழ்த் தேசிய இனத்தின் கட்டமைப்பில் மூன்று பிரதான நிலைகளை ஏற்றுக் கொண்டிருந்தது. இவற்றுள் முதலாவது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித்தாயகம் என்ற உரிமை. இரண்டாவது இலங்கையி லுள்ள தமிழ்த் தேசிய இனத்தின் மொழியாகத் தமிழ் மொழியைப் பிரயோகிப்பதற்கான உரிமையை வழங்கியது. மூன்றாவதாகத் தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவு பிரதேசத் தன்னாட்சி யை இந்த உடன்படிக்கை வழங்கியது.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கில் எந்தவித நடவடிக்கையையுமே பண்டாரநாயக்க மேற்கொள்ளவில்லை. உண்மையில் இந்த உடன்படிக்கைக்கு சட்டவாக்கத்தைக் கொடுப்பதற்கான ஆதரவு பிரதமர் பண்டாரநாயக்க வுக்கு இருக்கவில்லை. இதனால் "சிங்களம் மட்டும்" சட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. உடனடபடிக்கையையும் பண்டாரநாயக்க கிழித்தெறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் அரசாங்கத்துக்கு மேலும் அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவை செல்வநாயகத்துக்கு ஏற்பட்டது. இந்த நிலையில் சிங்கள ஸ்ரீ இலக்கங்களுடைய பஸ் வண்டிகள் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. இதற்கு எதிராக செல்வநாயகம் போர்க்கொடி தூக்கினார். தென்பகுதியில் மீண்டும் தமிழர்களுக்கு எதிரான கலவரம் தலைதூக்கியது.

நிலைமையைச் சமாளிப்பதற்காக அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய பிரதமர் பண்டாரநாயக்க, செல்வநாயகம் உட்பட பல தமிழரசுக்கட்சித் தலைவர்களைக் கைது செய்தார். ஒரு வாரச்சிறைத்தண்டனை இவருக்க வழங்கப்பட்டது.

## டட்லியைக் கவிழ்த்த தந்தை செல்வநாயகம்

இதன் பின்னர் 1960 மர்ச்சில் நடைபெற்ற தேர்தலில் செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. ஆட்சிப்பொறுப்பையும் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி (ஐ.தே.க.) கைப்பற்றியிருந்தது. ஆனால் டட்லிக்கு போதிய பெரும்பான்மை கிடைக்காததால் தமிழரசுக்கட்சியின் ஆதரவை அவர் நாட வேண்டி இருந்தது.

ஆனால் இந்த ஆதரவை "சும்மா" கொடுத்துவிட அவர் தயாராக இல்லை. பண்டா-செல்வா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தினால் ஆதரவை வழங்கலாம் எனத் தந்தை செல்வா நிபந்தனை விதித்தார். ஆனால் இதனை ஏற்றுக் கொள்ள டட்லி சேனநாயக்க தயாராக இருக்கவில்லை.

அதே வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தந்தை செல்வநாயகத்தை அணுகியது. பண்டா-செல்வா உடன்படிக்கை தமது தலைவரின் கொள்கை என்பதால் அதனைத் தம்மால் நடைமுறைப்படுத்த முடியும் என அவர்கள் வாக்குறுதி யளித்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தமிழரசுக்கட்சியின் ஆதரவுடன் 1960 ஏப்ரலில் டட்லியின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் மீறப்பட்ட வாக்குறுதிகள்

புதிதாக ஒரு வருடத்துக்குள்ளேயே இரண்டாவதாக நடத்தப்பட்ட தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றது. ஆறு கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழரசுக்கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதியை சுதந்திரக்கட்சி மீறத்துணிந்தது.

பண்டா-செல்வா உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதற்குப் பதிலாக சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்தது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம்.

இதனால் அதிர்ச்சியடைந்தார் செல்வா. இதற்கு எதிராக அவர் ஆரம்பித்த போராட்டம் தான் யாழ்ப்பாணம் கச்சேரி முன்பாக இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம். இது ஒரு பாரிய போராட்டமாகியது. நாட்டுக்குள்ளேயே மற்றொரு நாடு தோன்றியது. தனியான முத்திரை வெளியிடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் தமிழர்கள் அனைவரும் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டிருந்தார்கள் எனப் பேராசிரியர்



**யாழ்ப்பாணம் கச்சேரி முன்பாக இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தந்தை செல்வா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்சன் கூறுகின்றார். இந்த நிலையில் மீண்டும் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. செல்வநாயகம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். இராணுவ உதவியுடன் போராட்டம் தடுக்கப்பட்டது.

1965இல் டட்லி சேனநாயக்கா மீண்டும் ஆட்சிபீடம் ஏறினார்கள். புதிய பாராளுமன்றத்தில் டட்லிக்குப் போதிய ஆதரவு இல்லாததால் தமிழரசுக்கட்சியின் ஆதரவு நாடப்பட்டது. செல்வா மீண்டும் நிபந்தனை விதித்தார். புதிய உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பண்டா-செல்வா உடன்படிக்கையை விட சற்று விரிவானதாக இந்த உடன்படிக்கை அமைந்திருந்தது. பின்னர் அது கூட டட்லியால் ஒரு தலைப்பட்சமாகக் கைவிடப்பட்டது.

## புதிய அரசியலமைப்பும் பதவி துறப்பும்

தந்தை செல்வநாயகத்தின் இந்த அரசியல் வாழ்க்கையைப் பார்க்கும் போது அவரது ஆதரவைப் பெறுவதற்காக சிங்களத் தலைவர்கள் வாக்குறுதி அளிப்பதும் பின்னர் அவற்றை மீறுவதுமாகவே அமைந்திருந்தது. உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் கூட இந்த ஏமாற்றங்களால் அவர் துவண்டுவிடவில்லை.

1970இல் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் 1972இல் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்த போது,கடுமையான நிலைப்பாடொன்றை எடுக்க வேண்டிய தேவை செல்வநாயகத்துக்கு ஏற்பட்டது. இந்த நிலையில் இரண்டு நடவடிக்கைகளை செல்வா மேற்கொண்டார். ஒன்று தமிழ் அமைப்புக்களை ஒன்றாக ஒரு கூட்டமைப்புக்குள் ஒன்றுபடுத்த முற்பட்டார். இரண்டாவதாக தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்பை ஏற்கவில்லை என்பதை நிரூபிப்பதற்காக இடைத்தேர்தல் ஒன்றை நடத்துமாறு கோரி தனது எம்.பி. பதவியைத் துறந்தார். மூன்று வருட காலமாக காங்கேசன் துறைக்கான இந்த இடைத்தேர்தலை நடத்த அரசு தயங்கியது. பின்னர் 1975இல், இத்தேர்தலை நடத்தியபோது ஆளும் கட்சி செல்வநாயகத்திடம் படுதோல்வியடைந்தது.

இந்தப் பின்னணியில் அரசாங்கங்களுடன் பேச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை நடத்துவதோ, உடன்படிக்கைகளைக் கைச் சாத்திடுவதோ எவ்வித பலனையும் தரப்போவதில்லை என்ற முடிவுக்கு தந்தை செல்வா வந்தார். தந்தை செல்வாவின் இந்த அனுபவம் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றத்துக்கும் தமிழீழப் பிரகடனத்துக்கும் காரணமாக அமைந்தது.

1956க்கும் 77க்கும் இடைப்பட்ட காலத்தில் செல்வ நாயகம் எதிர்கொண்ட சவால்கள் பல. ஆனால் அரசியல் மதிநுட்பத்துடனும் உறுதிப்பாட்டுடனும் தனது இலக்கை நோக்கி அவர் சென்றார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர் விலை போகவும் இல்லை: விட்டுக்கொடுக்கவும் இல்லை. தமிழ் பேசும் மக்கள், பாரம்பரியத் தாயகம், தன்னாட்சி போன்ற கருத்துக்கள் எமது நாட்டு அரசியலில் இன்று தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்றால் அதற்கு கால்கோளிட்டவர் தந்தை செல்வநாயகம் தான்.

**(நன்றி: ஞாயிறு தினக்குரல், கொழும்பு, 06 ஏப்ரல் 1997 ப.5)**



**பண்டா-செல்வா ஒப்பந்தம் தொடர்பாக பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவுடன் தந்தை செல்வா, வி.ஏ.கந்தையா, டாக்டர் நாகநாதன் ஆகியோர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் அரசியற் சிந்தனை

## -சந்திரசேகரம் பரமலிங்கம்-

தந்தை செல்வாவின் நூற்றாண்டு தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் கொண்டாடப்படுகின்ற இவ்வேளையில் அப்பெருமனிதன் உருவாக்கிய அரசியல் கொள்கைகள், போதித்த அரசியல் தத்துவங்கள் பற்றிய ஒரு சுருக்கமான கண்ணோட்டமாகவே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

மேற்கத்தைய ஆளுகைக்கு தமிழ்த்தாயகமும் உட்பட்ட காரணத்தால் இன்றுவரை இறைமை இழந்த மக்களாகவே தமிழர்கள் வாழ்கின்றார்கள். இந்நிலையிலிருந்து நிரந்தர விடுதலை பெற்று சுதந்திர இனமாக தமிழர்கள் இலங்கையில் தமது தாயகமான ஈழத்தில் வாழ்ந்திட வேண்டுமென்பதே தந்தை செல்வாவின் அரசியற் சிந்தனையின், அரசியற் கொள்கையின் அடிநாதமாக விளங்கியது. இவற்றிற்கு செயலுருக் கொடுக்கின்ற சந்தர்ப்பம் தந்தை செல்வாவிற்கு 1948இல் இலங்கையில் ஏற்பட அரசியல் மாற்றத்துடன் கிடைத்துக்கொண்டது.

சிங்களப் பெரும்பான்மைத் தலைவர்கள் இவ்வாண்டில் அரசியல் மாற்றத்தை, தமிழருக்கெதிராக எதனையும் சாதிக்கக தங்களுக்குக் கிடைத்த சுதந்திரமாகக் கொண்டமையால் போலும், இலங்கையின் முதற் பாராளுமன்றம் பிரஜாஉரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது. இக்காலகடடத்திலே தான் தந்தை செல்வா புதியதொரு அரசியற் கட்சியான சமஷ்டிக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்து தமிழ்த்தேசியவாதத்தைக் கட்டி எழுப்பி, தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தில் தன்னாட்சியை நிறுவிட வழிவகுத்தார்.

சமஷ்டிக் கட்சியென்பது, இன்றைய இலங்கையில் வட-கிழக்குமாநிலத்தை உள்ளடக்கிய தமிழர் பிரதேச அரசு ஒன்றை அமைக்கவும் சிங்களவர்-தமிழருக்கு பொதுவான விவகாரங்களைக் கவனிக்க மத்திய அரசு ஒன்றினைக் கொண்டிருக்கும் சமஷ்டி ஆட்சி முறையினை நிறுவிக் கொள்வதற்காகத் தந்தை செல்வாவினால் உருவாக்கப் பட்ட இக்கட்சியின் தலைமையும் செயற்பாடும் எப்பொழுதுமே தந்தை செல்வாவை மையமாகக் கொண்டே காணப்பட்டது. இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் எதிர்நோக்கிய 1952ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலைத் தவிர 1977ஆம் ஆண்டு வரையிலான ஏனைய பொதுத்தேர்தல்கள் யாவற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் தமி நம்பிக்கையை இக்கட்சியின் மீது வைத்திருந்த காரணத்தால் மிக அதிக அளவிலான தமிழர் பிரதேசங்களிலுள்ள பாராளுமன்ற ஆசனங்கள் இக்கட்சிக்குக் கிடைத்தன. பிரதேச அடிப்படையிலிருந்த தமிழர் அரசியலை அரங்கிலிருந்து அகற்றி, ஒரு தலைமையின் கீழ், ஒன்றிணைத்த முதல் தலைவர் தந்தை செல்வாவே. இச்செயற்பாட்டின் விளைவாகவே தமிழர் தேசியவாதம் இலங்கையில் புதியதொரு பரிமாணத்தை அடைந்து கொண்டது. இன்றுள்ள உறுதிநிலைக்குத் தந்தை செல்வாவே வித்திட்டார் எனலாம்.

## சுயநிர்ணய உரிமை

ஒரு தொடர்ச்சியான பிரதேசத்தில் வரலாற்றுரீதியாஒரு மொழி, இன மக்கள் வாழ்ந்து வந்தால் அவர்கள் சுயநிர்ணய உரிமைக்குரியவர்கள் என்றே சர்வதேச மனித உரிமைகள் சட்ட வல்லுநர்கள் விளக்கமளிக்கிறார்கள். இச்சட்டக் கோட்பாட்டினடிப்படையில் தமிழினத்தின் இன்னல்களை உலகெல்லாம் பகிரங்கப்படுத்தி சயநிர்ணய உரிமையுடனான சமஷ்டி ஆட்சி முறைமை மட்டுமே அமைதித் தீர்வுக்கு அத்திவாரம் என்று தம் வாழ்நாளெல்லாம் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் வாதிட்டார். பல இன மக்கள் வாழும் நாடுகளில் சமஷ்டி ஆட்சிமுறை வெற்றியளித்த சந்தர்ப்பங்களை ஆதாரம் காட்டி இலங்கையில் அதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

1948ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தையடுத்து அறிமுகமான சோல்பரி அரசியலமைப்பு உருவாக்கிய ஒற்றை ஆட்சிமுறை தமிழ் இனத்தின் கௌரவத்திற்கு ஏற்றதல்ல என்ற அதன் ஆரம்பத்திலேயே தீர்க்கதரிசனம் செய்தார்.

தந்தை செல்வா வாழ்ந்த காலகட்டம் அவரது கல்வி, சட்டப்பயிற்சி, சமய ஈடுபாடு, சமுதாய அணுகுமுறை போன்ற காரணிகளால் பாராளுமன்ற ஆட்சி முறையிலும், அஹிம்சை வழியிலும் நம்பிக்கை வைத்து தாம் உருவாக்கிய அரசியல் கொள்கைகளுக்கு செயலுருவம் கொடுக்க முன்வந்தார். பணத்தோடு அரசியலுக்கு வந்து பணமின்றி இறந்த இலங்கையின் அரசியல் தலைவர் தந்தை செல்வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா
-கவிஞர் செ.நாகேந்திரன்-

நேர்வழியில் நம்பிக்கை நிதானத்துடன்
கூர்மையறிவோடு கூதர்க்கப் பேச்சின்றி
தார்மீகக் கருத்தைத் தமிழர்க்கு உரைத்த
சோர்வற்ற தலைவர் தந்தை செல்வா

சாதி சமயச் சண்டை வேண்டாமென
ஓதிச் சமபந்தி போசனம் செய்தன்று
வீதி வழிபாத யாத்திரையும் புரிந்து
நீதியைக் காத்தவர் தந்தை செல்வா

அருமைக் குணத்தால் தமிழரையன்று
பெரு விருப்போடு பிரியாது காத்து
திருமலை மையமாய் வடக்கும் கிழக்கும்
ஒருப்பட வைத்தவர் தந்தை செல்வா

சகசமாய் அன்புடன் சேர்ந்து பழகி
முகமதியரை வாழ்வில் மெச்ச நடத்தி
மகத்துவங் குன்றாப் பாராளும் சபைக்கு
புகவழி செய்தவர் தந்தை செல்வா

மொழிவழியில் தொழிற்சங்கந் தொடக்கி
விழிபோல் அதனை உரித்துடன் காத்து
எழில் தமிழுரையும் வாதாடிப் பெற்ற
அழியாக் கருத்தா தந்தை செல்வா

அலைகடலாய் ஓயாது நாட்டுக்குழைத்த
மலைநாட்டுத் தமிழர் பத்துலட்சம் பேரின்
நிலைக்கள உரிமையை அரசன்று நசுக்க
தலைநிமிர்ந் தெதிர்த்தவர் தந்தை செல்வா

திட்ட மிட்டரசு தமிழரின் நிலங்களில்
இட்டப்படி யெல்லாம் குடியேற்றம் புரிய
கட்டங் கட்டமாய் எதிர்த்து வாதாடி
தட்டிக் கேட்டவர் தந்தை செல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதி தளரா மதியுடன் முதலில்
இனங்கள் இணைந்து இலங்கை மேலோங்க
ஜனநாயக முறையில் சமஷ்டியை முன்வைத்து
சினமற்றுக் கேட்டவர் தந்தை செல்வா

ஈரமுடன் கேட்டலுத்து இன்னலே கண்டு
வீரம் முயற்சியுடன் வெங்குருதி சிந்தியினி
தீரப் போரென்று தூபமிட்டு இளைஞரை
பேரணிக்கு ஆக்கியவர் தந்தை செல்வா

வட்டுக்கோட்டையில் தனிநாடு என்னும்
விட்டுக் கொடா வேங்கையை நாட்டி
பட்டுப்போகாமல் தியாகத்தால் அதனை
கட்டி வளர்த்தவரும் தந்தை செல்வா

இணைந்துவாழ இயன்றவரை பாடுபட்டு
சுணையற்ற அரசுக்குச் சமரே பாடமென
அணைத்துப் பேச்சால் இளைஞரை ஊக்கி
துணையாய் நின்றவர் தந்தை செல்வா

கடைசி முடிவான தனிநாட்டுக் கொள்கைக்கு
படைபலம் பேரணிக்கு வாலிபரைத் தூண்டி
தடை வரும் துயர் வரும் தம்பிமாரிதனை
அடைவார் என்றவர் தந்தை செல்வா

ஏகத்துவத்தை இறுதியில் எதிர்த்துப் பின்
பாகம் பிரிக்காயாப்பில் சத்தியமோ செய்யாது
தாகமே கொண்டு தனித்தமிழ் நாட்டுக்காய்
சாகவும் துணிந்தவர் தந்தை செல்வா

குன்றுக் கொள்கையாய் தனித்தமிழீழத்தை
வென்று வளம் பெருக்கி வடிவமைத்து
என்று இளைஞர் எண்பித்துக் காட்டுவரோ
அன்றுதான் சாந்தியாவார் தந்தை செல்வா

முந்தை நம்முன்னோர் ஆண்ட திருமண்ணை
தந்தை தனிநாடாய் எல்லையும் சொல்லியதை
சிந்தையில் வைத்தின்று தியாகம் புரிவோரே
தந்தையின் வாரிசென்றால் தரணி ஏற்காதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கதரிசனம் மிகுந்த தலைவர்

## -மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்-

தரணி போற்றும் தந்தை செல்வா தமிழினத்துக்குக் கிடைத்த ஓர் அரும்பெரும் சொத்து. அந்தப் பெரும் தலைவர் எமக்குக் காட்டிய வழி அஹிம்சை வழி. தமிழ் பேசும் இனம் பாகுபாடற்ற, சாதிமத வேறுபாடற்ற ஓர் இனமாக வாழ வேண்டும் என்பதற்காகவே அவர் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தார். மலையகத் தமிழ் மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களை நாடற்றவர்களாக ஆக்கி, அரசியல் அநாதை களாக்கும் இந்திய பாக்கிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டத்தை எதிர்த்தே, தான் சார்ந்த கட்சியை விட்டு வெளியேறி ஒரு புதுக் கட்சியை உருவாக்கினார். அவரது தீர்க்கதரிசனம் பலித்தது. இன்று இந்தியத் தமிழருக்கு அநீதி இழைக்கப்படுகிறது. நாளை இலங்கைத்தமிழருக்கும் மொழிப்பிரச்சினை வரும் போது இதே கதி ஏற்படும் என அன்றே கூறி, தான் சார்ந்த தமிழ்க்காங்கிரஸ் கட்சியை விட்டு அமரர் வன்னியசிங்கத்துடன் வெளியேறினார்.

முதன் முதலாக அவரது இயக்கத்தின் கால்கோள் விழா மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் ஸ்ரீலஸ்ரீ துரைசாமிக்குருக்களின் ஆசியுடன் நடைபெற்றது.

தந்தை செல்வாவின் தலைமையில் கோப்பாய்க்கோமான் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோருடன், சட்டக்கல்லூரிமாணவனாக இருந்த என் கணவரையும் (அ.அமிர்தலிங்கம்) தன் கைப்படக் கடிதம் எழுதி வரவழைத்துப் பேசவைத்தார். அதன் பின்னர், அரசு கொண்டு வந்த சட்டத்தின் பயங்கர விளைவுகளை விளக்கி, வட-கிழக்க மாகாணங்கள் முழுவதும் பட்டி தொட்டிகள் எல்லாம் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பலத்த எதிர்ப்புக்கள், கல்லெறிகள் மத்தியில் வளர்ந்த இயக்கமே பெரவிருட்சமாக மக்களால் கட்டி வளர்க்கப்பட்ட தமிழரசுக்கட்சி. தந்தை செல்வா, தமிழினத்துக்காக உருவாக்கிய தமிழரசுக்கட்சியில் மன்னார், மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் மட்டுமல்ல, மலையகத்துத் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக உழைத்தனர்.

கட்சி ஆரம்பித்த ஒரு மாதத்திலேயே சோல்பரி பிரபுவின் வருகைக்க எதிர்ப்புத் தெரிவித்து பகிஷ்கரிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தை நடத்தினர். இந்த முதல் பகிஷ்கரிப்பும், கூட்டமும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியையும், ஆட்சியாளர் மத்தியில் ஒரு பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. தந்தை செல்வாவின் முயற்சியும் விடாஉழைப்பும் கட்சியில் பல நல்லோரைப் பங்காளர்களாக மாற்றியது.

பல தலைவர்கள் தமிழ்மக்களை வழிநடத்த முன்வந்து அரசிடம் சரணாகதி அடைந்ததை தந்தை சுட்டிக்காட்டினார். ஒர நாள் களத்தில் தலைநிமிர்ந்து நின்று மறுநாள் களத்தை விட்டோடி மறைந்தவர்களையும், தமிழ் மக்களுக்கும் உரிமை மறுக்கப்பட்ட நேரத்திலும் '' தமிழ் மக்களுக்கு எந்தக் குறையும் இல்லை" எனப் பிரச்சாரம் செய்தவர்களையும் தந்தை வெளிப்படையாகச் சாடினார். தம்முடைய பதவிகளுக்காக சிங்கள அரசாங்கங்களுக்க வால் பிடித்து நின்ற தலைவர்களை தமிழ் மக்கள் அடையாளம் கண்டு ஒதுக்கிவிடத் தந்தையின் பிரச்சாரங்கள் உதவின.

தந்தை செல்வாவின் நேர்மையான பாதையும், தன்னலமற்ற சேவையும் தான் பல தமிழ் மக்களை தமிழரசுப் பாசறையில் சேர்க்க உதவியது. பல நல்ல தலைவர்களை உருவாக்கியது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, மன்னார், திருக்கோணமலை என்ற பிரதேச வேறுபாட்டைக் களைந்து, மலையகத்தமிழர், முஸ்லிம்கள் உட்பட, தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து தமிழ் பேசும் இனம் என்ற ஒரு சொல்லின் கீழ் கொண்டு வந்த பெருமை தந்தை செல்வாவையே சாரும்.

"சிங்களம் மட்டும் சட்டம்" கொண்டுவந்து நிறைவேற்றப் பட்ட போது தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனத்தைத் தமிழினம் உணர்ந்தது. சிங்கக் கொடியை கொண்டு வந்ததை எதிர்த்து நின்றது தமிழரசுக்கட்சி.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றத்தை எதிர்த்து நின்றது. கிழக்க மாகாணத்தில் சிங்களக் குடியேற்றத்தால்எம் மக்கள் சிறுபான்மையாகவாழும் நிலை ஏற்படும் என்ற ஆபத்தை விளக்கிப் பிரச்சாரத்தை மேற்கொண்டது தமிழரசுக்கட்சி. மக்களை விழிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும், அரசின் சூழ்ச்சிகளைப் பரிந்து எதிர்த்து நிற்கவும் வழி வகுத்தது தந்தை செல்வாவின் அமைப்பான தமிழரசுக்கட்சியே.

தமிழ் மக்கள் சுதந்திர தாகமும், விழிப்புணர்வும் கொண்டவர்களாக இருப்பதற்கு உதவியது தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த எதிர்ப்பு இயக்கங்களும், பகிஷ்கரிப்புக்களும், கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களுமே.

தமிழைப்பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்ற பாரதிதாசனின் கூற்றுக்கமைய 1954ஆம் ஆண்டு இலங்கை வந்த எலிசபெத் மஹாராணியின் முன் சிங்களமும் ஆங்கிலமும் மட்டுமே ஜே.ஆர். ஜயவர்த்தனவால் நன்றி கூற எடுத்துக் கையாளப்பட்டன. தமிழில் மொழி பெயர்ப்பு கூட இடம்பெற வில்லை. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்த பிரதமர் சேர்னோன் கொத்தலாவலைக்கு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியது தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணி. தமிழ் மொழியைப் புறக்கணித்து மேலும் அநியாயமான குடியுரிமைச் சட்டங்களை அமுல் நடத்தி, தமிழ்த் தொழிலாளர்களின் உரிமைகளைப்பறித்து நாடு கடத்தி, தமிழ் மக்கள் பலத்தைக் குறைக்க முனைந்த அரசின் பிரதமராக வந்த கொத்தலாவலையைக் கறுப்புக்கொடி காட்டி பகிஷ்கரிப்ப நடாத்தி', தமிழ் மக்களது எதிர்ப்பு சக்தியை உணர்ந்து கொள்ள வைத்த பெருமை தமிழரசுக்கட்சிக்கே உரியது.

இலங்கையில் மாறி மாறி வந்த ஆட்சிகள் தமிழ் மக்களது பலத்தால் பெரும்பான்மை பெற்று, பலத்தோடு பாராளுமன்றம் சென்ற தமிழரசுக்கட்சியுடன் ஒப்பந்தங்கள் செய்தன. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றன ஏற்பட்டாலும் பின்னர் அவற்றையெல்லாம் கிழித்தெறிந்து, கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டனர் சிங்களத் தலைவர்கள்.

சிங்கள ஸ்ரீயை எதிர்த்து சிறையில் அடைக்கப்பட்டார் தந்தை. பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் அவருடன் சிறை சென்றனர். ஐந்து மாவட்டங்களில் அரசு நிர்வாகத்தை மூன்று மாதங்களுக்கு மேலாக ஸ்தம்பிக்க வைத்து சத்தியாக்கிரகத்தை நடாத்தினார் தந்தை செல்வா. தமிழரசு தபால் சேவையை நடாத்தினார். இந்தியத்தலைவர் இராஜாஜி இந்தச் சத்தியாக்கிரகத்தைப் பாராட்டி கல்கியில் தலையங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினார் எது இருந்தும் என்ன பயன்? அரசாங்கம் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ்த் தலைவர்களையும் தொண்டர்களையும் கைது செய்து, வடகிழக்குப் பகுதியில் முக்கியமான 74 பேரை பனாகொடை இராணுவ சிறையில் அடைத்தது. ஆறு மாதங்கள் இராணுவச் சிறையில் ஏனையோருடன் அடைக்கப்பட்டார் தந்தை செல்வா.

தமிழ் மக்களுக்க உதவக்கூடிய ஒரேயொரு நாடு இந்தியாவே என உறுதியாக நம்பினார் தந்தை செல்வா. தமிழகம் முழுவதும் சென்று தலைவர்கள் பலரது ஆதரவை-ஒத்துழைப்பைப் பெற்றார். தமிழ் மக்கள் படும் இன்னலையும், சரித்திரரீதியாக தமிழன் அந்த நாட்டின் ஆண்ட இனம் என்பதையும் தமிழகத் தலைவர்களுக்கு புரிய வைக்க எனது கணவரையும் அழைத்துக்கொண்டு தமிழகம் சென்றார்.

அரசியல் தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழக அறிஞர்கள்பலரையும் கண்டு கூட்டங்கள் கூட்டி நிலைமையைப் புரிய வைத்தார். நோய்வாய்ப்பட்ட நிலையிலும், தள்ளாத வயதிலும் அவரது சொல்லுக்கு மதிப்புக் கொடுத்தனர் தமிழகத் தலைவர்கள்.



**தமிழகப்பயணத்தின் போது திரு.அ.அமிர்தலிங்கத்துடன் தந்தை செல்வாவும் துணைவியாரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தை வாழ்ந்த நாட்டிலே - நம்
தாயும் வாழ்ந்த நாட்டிலே
சொந்தமற்ற பிரஜையாய் நாம்
நிந்தையுற்று வாழ்வதா"

என முழங்கினர் ஈழத்தமிழ் மக்கள்.

"மெல்ல மெல்லச் செல்லுகின்ற தந்தை செல்வநாயகம்
சொல்லுகின்ற பாதையிலே செல்லுகின்ற வீரர் நாம்."

என அணிவகுத்து, அஹிம்சைப்பாதையில் வீரநடை போடக் காத்திருந்தனர் ஆயிரமாயிரம் இளம் காளையரும் கன்னியரும். போராட்டங்கள், சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, பகிஷ்கரிப்பு எல்லாவற்றையும் அஹிம்சை வழியிலே கொண்டு நடாத்தினார் தந்தை செல்வா.

பேச்சுவார்த்தைக்காக நாம் எப்போதும் ஆயத்தமாக உள்ளோம் என்பதை எப்பொழுதும் கூறுவார். அதில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார்.

பெரும் வல்லமை படைத்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய அண்ணல் காந்திமகான் கைக்கொண்ட ஆயுதமே அஹிம்சை. எனவே, நாமும் சிறுபான்மை இனம், எமக்கும் அஹிம்சை வழியே சிறந்தது எனக் கூறினார். அவரிடம் இருந்த ஆயுதம் சத்தியமும் அஹிம்சையுமே. அதன் வழியில் தமிழரசுக்கட்சியையும், பல தலைவர்களையும் தன் பணிவன்பால், தமிழ் மக்களின் பலத்தால் வென்று தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

சுதந்திரம் என்ற கனியைத் தெரிந்து கொள்ளக்கூடிய, காணுகின்ற தூரத்திலே தமிழ் மக்களை ஒருங்கே சேர்த்து, தனக்குப்பின் ஒரு தலைமையையும் தந்து, தான் காட்டிய பாதையில் ஒற்றுமை என்ற பலத்துடன், அஹிம்சை என்ற ஆயுதத்துடன் சென்று பெற்றுக்கொள்ளுங்கள் எனக் கூறி எம்மை விட்டுப் பிரிந்தார் எம் தந்தை.

**( நன்றி: அஞ்சல், இலண்டன். ஏப்ரல் 01-14,1997. பக்கம் 6)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் போராட்டமும் தந்தை செல்வாவும்

-ஐ.தி.சம்பந்தன்-

ஈழத்தமிழர்களுக்கு தனி அரசு தான் ஒரே வழி என்று 1949இல் தீர்க்கதரிசனம் கூறிய பெருந்தலைவர் மூதறிஞர் எஸ்.ே ஜ.வி.செல்வநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழா இவ்வாண்டு முழுவதும் தமிழர் வாழும் இடமெல்லாம் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

மலேஷியாவில் பிறந்து ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்ற இவர் புகழ்பெற்ற இராணி அப்புக்காத்து. காத்திருந்த உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியை தூசாக மதித்து ஈழத்தமிழர் விடுதலைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பெருந் தலைவர். தேடிய சொத்துக்கள் அனைத்தையும் தியாகம் செய்து, சுகபோகங்களையும் வெறுத்து, 30 ஆண்டு காலமாக தமிழ் இனத்தின் விடுதலைக்கு இதய சுத்தியோடு போராடிய மஹாத்மா.

சகல தமிழ் பேசும் மக்களால், இளைஞர் தொடக்கம், முதியோர் வரை "ஈழத்துக் காந்தி", " தந்தை செல்வா", என்று அழைக்கப்படும் மூதறிஞர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் விடுதலைப் போராளிகள் அனைவரதும் மதிப்பைப் பெற்றவர். காரணம்? 1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் 10 இலட்சம் மலையகத் தமிழரின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கும் சட்டத்தைத் தீவிரமாக எதிர்த்தவர். ''இன்று அவர்களுக்கு,நாளை எமக்கு" என்று தீர்க்கதரிசனம் கூறிய தந்தை செல்வா 1949இல் இலங்கைத் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார்.

- தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நடைபெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்தல்.
- 10 இலட்சம் மலையகத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை, குடியுரிமை பெற்றுக் கொடுத்தல்
- தமிழர் பிரதேசத்தில் தமிழை ஆட்சிமொழியாக்குதல்
- பூரண சுதந்திரம் பெற்ற தமிழரசை நிறுவுதல்.

ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழரசுக் கட்சி மூலம் போராட்டத்தை முன்னெடுத்தார். முதலில் தமிழர்களை ஒன்றுபடுத்தினார்.

சாதி அடிப்படையிலும், பிரதேசரீதியாகவும், வர்க்கரீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் பிரிந்து பிளவுபட்டுச் சிதறியிருந்த தமிழர்களை ஒன்று படுத்துவதில் வெற்றி கண்டார் தந்தை செல்வா. தமிழ் பேசும் முஸ்லீம் மக்களையும் இணைத்தார். 1961இல் நடைபெற்ற மாபெரும் சத்தியாக்கிரகத்தின் போது ஒற்றுமையின் உறுதிப்பாடு அகில உலகுக்கும் தெரியவந்தது.

தமிழர்களிடையே விடுதலை உணர்வும், மொழிப்பற்றும் வளரத் தொடர்ச்சியாக அஹிம்சை வழியில் பல போராட்டங்களை நடத்தி விடுதலைத் தாகத்தை ஏற்படுத்தி வைத்தார். சுதந்திரதினப் பகிஷ்கரிப்பு, தமிழ்ப்பகுதிக்கு அமைச்சர் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பு, சத்தியாக்கிரகம் (1956, 1961), சட்டமறுப்பு, சிங்கள சிறி எதிர்ப்பு, திருமலை யாத்திரை (1956), சாதி ஒழிப்பு பாதயாத்திரை போன்ற வழிகளில் போராட்டத்தை நடாத்தி தமிழர்களின் விடுதலை உணர்வை வளர்த்து வந்தார். ஆயுதம் எதுவுமின்றி மக்கள் சக்தியால் மூன்று மாத காலமாக வட கிழக்கில் அரசநிருவாகத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்த பெருமை தந்தை செல்வாவின் மதிப்பிட முடியாத சக்தியே.

1961 சட்ட மறுப்பில் அரசுக்கெதிராக தபால் முத்திரை வெளியிட்டு இலங்கை அரசைக் கதிகலங்க வைத்தார். தமிழ்ப்பகுதிகளுக்கு எங்கு சென்றாலும் தமிழ் மக்களின் அபரிமித ஆதரவு உண்டு என்பதை ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை மட்டக்களப்பில் தலைமைதாங்கி நடத்தி, சிறை சென்றதன் மூலம் நிரூபித்தார்.

தந்தை செல்வாவின் உறுதியான போராட்ட வலுவை உணர்ந்த பிரதமர்பண்டாரநாயக்க, பிரதமர் டட்லி சேனநாயக்க ஆகிய இரு சிங்களத் தலைவர்களும் தமிழர் பிரச்சினைக்கு இரு ஒப்பந்தங்கள் செய்தனர்.பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்களை இரு சிங்களத் தலைவர்களும் சிங்கள பௌத்த ஆதிக்கத்திற்குப் பயந்து கிழித்தெறிந்தனர். அதுவே இன்று இரத்தக்களரி ஓடும் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

1972இல் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து தமிழ்ப்பகுதிகளில் அச்சட்டத்தைத் தீயிட்டுக் கொழுத்தி எதிர்ப்பைத் தெரிவித்தார். 1972இல் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு சிங்கள அரசு மூடுவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்திய போது தமிழ் மாணவர்கள் கொதித்தெழுந்தனர். மாணவர் பேரவை அமைத்து மாணவர் போராட்டங்களை முன்னெடுக்க முன்நின்று உழைத்தார் தந்தை செல்வா. அனைத்துத் தமிழ் மாணவர் களின் ஆதரவைப் பெற்ற தந்தை செல்வா 1972இல் கொண்டுவரப்பட்ட அரசியல் சட்டத்தை எதிர்த்து தமது பாராளுமன்ற பதிவியை இராஜினாமாச் செய்தார்.

அரசியல் வேறுபாட்டினால் பிரிந்திருந்த தமிழ் அரசியல் கட்சிகளைத் திருக்கோணமலையில் கூட்டி, தமிழர் கூட்டணியை உருவாக்கினார். சமஷ்டி அரசியல் மூலம் தமிழர்களுக்கு தமிழரசு அமைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் 1949இலிருந்து போராடி வந்த தலைவர் செல்வா 1975இல் முற்றாக நம்பிக்கை இழந்து விட்டார். தமிழருக்கு வரப்போகும் மிகுந்த ஆபத்தை உணர்ந்தார். வேதனைப்பட்டார். துடியாய்த்துடித்தார். மாணவர் பேரவையின் பின் துணிகரமான இயக்கங்களால் கவரப்பட்டார்.

வட்டுக்கோட்டை மகாநாட்டை1976இல் கூட்டினார். நீண்டகாலமாக அரசியல் கருத்து வேறுபாட்டால் பிரிந்திருந்த, பகைத்திருந்த தமிழ்க் கட்சித்தலைவர்களின் இல்லங்கள் சென்று மாநாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அனைவரும் தந்தை செல்வாவின் தலைமைக்கு மதிப்புக் கொடுத்தனர். 1976 மேயில் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. தந்தை செல்வா, ஜீ.ஜீ. பொன்னம்பலம், திரு.எஸ்.தொண்டமான் ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் கூட்டுத்தலைவர்களானார்கள்.

இனித் தமிழர்களுக்குத் தமிழ் ஈழம் தான் முடிந்த முடிவு என்ற அடிப்படையில் வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "மிக வில்லங்கமான காரியம்: இரத்தம் சிந்தித்தான் இதை அடைய முடியும்" என்று தீர்க்கதரிசனம் கூறிய தலைவர் 1977 ஏப்ரல் 26இல் போராட்டத்தைத் தொடருங்கள் என்று அறைகூவல் விடுத்துச்சென்றார். இப்பெரும் தலைவரை அனைத்துத்தமிழர்களும் கட்சிவேறுபாடு இயக்க வேறுபாடு இன்றி இந்நூற்றாண்டில் நினைவு கூருகின்றனர்.

## தமிழ்த் தொழிலாளர் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்

1956இல் கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும்" சட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பெருமளவு பாதிக்கப் பட்டனர். தமிழ் ஊழியர்களின் உரிமைக்குரல் கொடுக்க மொழிவழித் தொழிற்சங்கங்கள் தான் ஒரேவழி என்று தந்தை செல்வா அன்று கூறினார். அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உட்பட சுமார் 18க்கும் மேற்பட்ட மொழிவழித் தொழிற்சங்கங்கள் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்சங்கங்களாக இயங்க வழிவகுத்தவர் தந்தை செல்வா அவர்களே.

மொழிவழித் தொழிற்சங்கங்களில் தொய்வு ஏற்படும் போது துரிதப்படுத்தும் சக்தியாக விளங்கினார். 1975இல் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி துரித செயற்பாடற்றிருந்தது. அது வலுக்குன்றி வருவதை அறிந்து புனரமைப்புச் செய்வதற்கு முன்வந்தார். அக்காலகட்டத்தில் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளர் நாயகம் பதவியை ஏற்குமாறு என்னையும் (ஐ.தி.சம்பந்தன்) தலைமைப்பதவியை ஏற்குமாறு திரு. செல்லத்தம்பு எம்.பி. அவர்களையும் அழைத்து, கொழும்பிலுள்ள அலுவலகத்தில் கூறிய அறிவுரைகள் என்றும் மறக்க முடியாதவை:

" தமிழ்ஊழியர்கள், தமிழ்த் தொழிலாளர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இந்நாட்டில் தொழிற் சங்கங்களை உருவாக்கிய பெருமை தொழிற்சங்கவாதிகளான திரு. நடேசையர், கே.சி.நித்தியானந்தன், சேர். பி. அருணாசலம் போன்றவர்களுக்கு உரியதாகும். ஆனால் இன்று தமிழ் தொழிலாளர் சங்கங்கள் பல கஸ்டமான நிலைகளில் இருந்து வருகின்றன. அவர்களது பிரச்சினைகள் இன உணர்வோடு முன்னெடுப்பதற்கு தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி பலம் மிக்க தொழிலாளர் இயக்கமாக வளர வேண்டும் என்பது எனது கருத்து" என்றார்.

இரத்தினச் சுருக்கமாக, அமைதியாகக் கூறி எம்மிடம் பெரும் பொறுப்பை ஒப்படைத்தபோது திகிலடைந்தோம். தந்தை செல்வா அவர்கள் வைத்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக தொடர்ந்து நான்க ஆண்டுகள் வலுவுள்ள தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியாக மிளிர வைத்தது தந்தை செல்வா வழங்கிய ஆசியேயாகும். இதுவே இவரது உயர் குணம். தமிழ் இனம் விடுதலை பெற அனைத்து முனைப் போராட்டம் அவசியம் என்பதை நன்கு உணர்ந்த பெருந்தலைவர் தந்தை செல்வா.

(இலண்டனில் 1999 இல் நடைபெற்ற தந்தை செல்வா நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப்பாராளுமன்றத்தில் தந்தை செல்வா

## இந்திய பாக்கிஸ்தானிய குடியிருப்போர் பிரசா உரிமைச்சட்ட விவாதம்

**திரு. சா.ஜே.வே. செல்வநாயகம், காங்கேசன்துறை பாராளு மன்ற உறுப்பினர் அவர்கள்**: சபாநாயகர் அவர்களே, நான் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

**டாக்டர் பெரேரா**: பேசுங்கள் தமிழ் காங்கிரஸ் அவர்களே.

**திரு. ஜெயவர்த்தன**: இந்திய காங்கிரஸ் அவர்களே

**திரு செல்வநாயகம்**: இது முழுதான ஒரு இனப் பாகுபாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள சட்டம். இதனை மதிப்புக் குரிய பிரதமர் அவர்கள் மிகத் தந்திரமான முறையில் இங்கே முன்வைத்துள்ளார். இந்தச் சபையிலே பிரதமரைப்பற்றி ஒரு பேச்சு நடந்து கொண்டிருந்தது. பிரதமர் அவர்கள் ஒரு கெட்டிக்காரச் சட்டத்தரணியா இல்லையா என்பதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் இந்தச் சபைக்கு அடித்துக் கூற முடியும், பிரதமர் ஒரு மிகக் கெட்டிக்காரச் சட்டத்தரணி என்பதை.

**பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க**: நான் அப்படி ஒருபோதும் கோரிய தில்லை.

**திரு செல்வா**: பிரதமரிடம் மூன்று விசேட இயல்புகள் உள்ளன. அதில் முதலாவது, இது யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடியது, பிரதமருக்குச் சட்டம் தெரியாது என்பது.

**பிரதமர் சேனநாயக்க**: இதனால் தான் நான் திறமையான சட்டத்தரணி ஆகினேனா?

**திரு.செல்வா**: இரண்டாவதாக, உண்மைகளைப் புரட்டிப் பேசி இவை தனக்குத் தெரிந்த உண்மைகள் என மிகத் தீவிரமாக வாதிட இவரால் முடியும். மூன்றாவதாக, தனது விவாதம் பலவீனப்படும் போது, அதனை விட்டு தனது எதிராளிகளை தூற்றுவதில் இறங்க இவரால் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌரவ. ஏ.ஈ.குணசிங்க:** இதுதான் சட்டத்தரணிகள் விளையாட்டு.

**திரு செல்வா:** பிரதமர் இங்கு கொண்டு வந்துள்ள இந்தச் சட்டவியலை நான் முழுதாக எடுத்து விளக்கத் தொடங்கினால் அது இன்றைய நாள் முடிவிலும் அரைகுறையாகவே நிற்கும். எனவே அவ்விதம் நான் முயலப்போவதில்லை.

ஆயினும் ஒரு உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். அதாவது, நேற்றுப் பிரதமர் குறிப்பிட்ட 1921 அல்லது 1922 ஆம் ஆண்டு இந்திய குடிவரவுச் சட்டத்தை இச்சட்டம் ஒரு காலக் கட்டுப்பாட்டு முறையில் இந்தியத் தொழிலாளர் இலங்கைக்குக் கொண்டு செல்லப்படுவதைத் தடுத்து நின்றது. இதற்கு முன் ஓர் அடிமை வர்த்தகம் போன்ற நிலை இங்கு நிலவியதுண்டு. இதனைத் தேசிய உணர்வு கொண்டு இந்தியா எதிர்த்தது. இந்தியத் தொழிலாளர்கள் மாதாந்த வேலை ஒப்பந்தத்திலேயே எடுக்கப்பட வேண்டும் என்ற நிலையை இந்த சட்டமூலம் ஏற்படுத்திற்று.

பிரதமர் அவர்கள் இந்தச் சட்டத்தைத் தொடர்பு படுத்தி இங்கு குடியமர்ந்துள்ள இந்தியத் தொழிலாளர் இச்சட்டம் காரணமாக தனியான பாகுபாட்டு முறைக்கு உரியவர்களென விவாதிக்கிறார். இவரது சட்ட அறிவீனம் இவரது விவாதத் துணிவுக்கு உதவுகிறது என்று தான் நான் குறிப்பிட வேண்டியுள்ளேன். இங்கு இந்நாட்டின் சட்டத்திற் கூட விரும்பியபடி அல்லாது மாத ஒப்பந்தத்தில் தான் தொழிலாளர் எடுக்கப்பட வேண்டும் என 1865ஆம் ஆண்டு சட்டவிதி பிரிவு எண் 7 பாதுகாப்பு அளிக்கின்றது. இது பாதகத்திற்குத் துணை நிற்கவில்லை என்பதை உணர்வோம்.

இன்னொரு விவாதத்தையும் பிரதமர் அவர்கள் கொண்டு வந்து கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக இங்கு ஆட்சி நடத்திய அரசியலாளர் செய்த தவறுகளையெல்லாம் இந்தியத் தொழிலாளர் மீது சுமத்தினார். இதனை கௌரவ உணவு உற்பத்தி அமைச்சரும் உற்சாகத்தோடு மெச்சிக் கொண்டிருந் ததைக் கண்டோம். இதன்படி பார்க்கையில் இந்த அவலப்படும் இந்தியத் தொழிலாளர் தான் முன்னேற்பாட்டோடு ஏதோ தரிசு நிலச்சட்டத்தை இயற்றிவிட்டு அந்த நிலங்களைப் பிடிக்க இங்கு வந்து குடியேறினர் போன்ற காட்சி எழுந்தது. இவ்வித தவறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுத் திரிபும் வீண்பயமும் கண்டிப்பிரதேச மக்களிடையே ஏன் ஏற்படுத்தப்படுகின்றதெனில், இந்த மிகக் குறைந்த வாழ்க்கை ஆதார உரிமைகளைக் கோரும் இந்தியத் தொழிலாளர்களுக்கு அவைதானும் வழங்கப்படாது மறுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே.

கெளரவ வெள்ளவத்தை-கல்கிசைத் தொகுதி அங்கத்தவர் குறிப்பிட்டதைப்போல் பிரதமர் அவர்கள் இந்த மிக முக்கிய தேசிய விடயத்தை குறுகிய இனத்துவேஷ மனக்கண் கொண்டு பார்க்க முனைகிறார். அழுத்திக் கூறியிருப்பது என்னவெனில் இந்தப் பிரசாஉரிமைச் சட்டம் விவாதிக்கப்படும் போது இதில் ''இனம்'' என்ற பொருள் முக்கியமானது என்பதும், இந்த இனப்பாதுகாப்பிற்கு நாம் எம்மாலான அனைத்தும் செய்ய வேண்டும் என்பதுமே.

இனம் எனக் குறிப்பிடும் போது அவர் எந்த இனத்தைக் குறிப்பிடுகிறார்? இந்நாட்டில் எது பெரும்பான்மையாக உள்ளதோ அந்த இனத்தையே அவர் இந்நாட்டின் இனம் எனக் குறிப்பிடுகிறாரா? அவ்விதமெனில், அது மிகத்தவறான அணுகுமுறையென நான் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளவனா யுள்ளேன். எனவே நான் பிரதிநிதிப்படுத்தும் சிறுபான்மைச் சமூகத்தினரின் சார்பில் எனது மக்கள் இங்கு எழுந்துள்ள இச்சட்டத்தையிட்டு பயம் கொள்ளுகிறார்கள் என்பதைக் கூறி இந்த சட்ட அமைப்புக்கு எனது ஆட்சேபணையைத் தெரிவிக்கிறேன்.

நான் சுட்டிக்காட்ட விரும்புவது இது தான். குடியுரிமை போன்ற வாழ்வியல் விடயத்தை அந்த மனித வாழ்வியல் நோக்கோடு அணுகுங்கள் என்பது தான். இந்த உத்தேசச் சட்டத்தை நான் முழு முதலானதாக எதிர்ப்பதன் காரணம் எதிலிருந்து எழுகின்றதெனில், எந்த மக்கள் இதனால் நேரடியாகப் பாதிக்கப்படவுள்ளனரோ, எந்த இந்திய மக்கள் இந்தப் பெருந்தோட்டங்களில் பன்னெடுங்காலம் தொழிலாளராய் அமர்ந்திருந்து பாடுபட்டும் இனி வருங்காலத்தில் குடியுரிமையோ தேசிய உரிமையோ எதுவும் அற்ற ஏதிலிகளாய் ஆக்கப்பட உள்ளனரோ, அந்த மக்களை மனதில் எண்ணியே நான் எனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

இந்த மக்களுக்கு எதிராக தொடர் வரிசையில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்சாட்டுக்கள் இங்கு பிரதமர் அவர்களாலும் கௌரவ உணவு உற்பத்தி அமைச்சர் அவர்களாலும் முன்வைக்கப் பட்டன. இக்குற்றச்சாட்டை விளக்கும் விவாதங்கள் மிகத் தந்திரமான முறையில் கையாளப்பட்டன. பாதுகாப்புக் கோரப்படாதிருக்கும் இந்திய மக்களின் ஒரு வர்க்கத் தினருக்கு இந்தப் பாதுகாப்புக் கொடுக்கத் தேவையில்லை என்ற விவாதத்தை இங்கு பாதகாப்புக் கோரி நிற்கும் இந்தியத் தோட்டத் தொழிலாளர் மீது சுமத்தி ஒரு குதர்க்க விளக்கம் இங்கு பேசப்பட்டது.

உதாரணமாக இங்கு (யுத்தகாலத்தில்) குண்டு வீசப்பட்ட போது சிலர் பறந்தோடியது உண்மை. ஆனால் அவர்கள் யார்? தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளர் அவ்விதம் ஓடினார்களா? தோட்ட வேலைகள் தொடர்ந்த நடைபெறும் நிலையில் இங்குள்ள நிரந்தர மலைநாட்டுத் தொழிலாள மக்கள் தம் தொழிலிலேயே நிலைக்கவில்லையா? நிரந்தரமில்லாத ஒரு வர்த்தக வர்க்கம் கொழும்பில் குண்டு வீசப்பட்ட போது அந்த நகரை விட்டு ஓடியிருக்கலாம். ஆனால் இவ்விதம் ஓடிய மக்களுக்கு எதிராக விவாதத்தை இங்கே தோட்டப்பகுதிகளில் நிலையாக நின்று தொழில் செய்த இனத்திற்கு எதிராகக் கொண்டு வருவது வியப்பாகிறது.

இன்னொரு நிலைப்பாடு இங்கு குறிப்பிடப்படுகிறது. அது இனமுரண்பாடுகள் இங்கு நிலவுகின்றன என்ற குற்றச் சாட்டாகும். கல்கிசை- வெள்ளவத்தை அங்கத்தவர் வேறு விதமாகக் கூறலாம். ஆனால் எந்தச் சிறுபான்மை இனத்தின் மீதும் தனித்த எதிர்நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அந்தச் சிறுபான்மை இனம் தன்னைக் காத்துக்கொள்ளும் வகையில் தற்காப்பு வகையில் தன்னுள் அவதானமாக நிற்கவேண்டி வருவது இயல்பு. இந்த எதிர்நடவடிக்கைகள் நீக்கப்படும் நிலையில் தான் இந்த மக்களும் தம் அச்சப்பிடியிலிருந்து விடுபடுவார்கள். இப்போது இலங்கைத் தோட்டத் தொழிலாள மக்களுக்குக் கிடைக்கும் இந்திய அரசின் கண்ணோட்டமென்பது தானும் இல்லாத நிலை இருக்குமானால் இவர்க ளுக்கு இந்த இரண்டாந்தரப் பிரசா உரிமை பற்றிய சலுகை தானும் கருத்திற்கு எடுக்கப்படுமா? இது தான் அவர்களுக்குள்ள ஒரேயொரு பாதகாப்பு எனலாம். இதுவும் உறுதிப்பாடான ஒரு பாதுகாப்பு வடிவத்தில் இல்லை. ஆனால் இதனையும் இல்லாது பறிகொடுத்து இவர்களை அனாதைகளாக்கி நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வைத்த செயலுக்கு இவர்களை உள்ளாக்க விரும்புகிறீர்கள்.

**இப்போது இங்கு குடியமர்ந்துள்ள இந்தியத் தொழிலாள மக்களுக்கு எதிராக பிரதமர் அவர்கள் பயன்படுத்தும் இந்த விவாதங்களை இவர்களை முடித்தொழித்த பின் இலங்கைத்தமிழர் மீதும் இவர் பயன் படுத்தத் தயங்கப் போவதில்லை. இது சிங்களவர்களின் நாடு என இச்சபையில் கூறப்படும் நாள் வரும். சில நூற்றாண்டுக்கு முன் இங்கு தமிழர்கள் வந்து குடியேறி உள்ளது உண்மை. ஆனால் அவர்கள் இங்கு சில பகுதிகளைப் படையெடுத்துப் பிடித்தோருடன் வந்தவர்கள். இங்கு இருக்க அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்ற ஒலி இங்கு பரப்பப்படும். இது இப்போது அசட்டு நியாயம்போல் தெரியலாம். ஆனால் இந்தியத் தமிழரை ஒழித்த பின் இது யதார்த்த வடிவத்தில் எழும். இதுவே இனத்தின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதற்குச் சுலப வழிவகையாகும்.**

இந்த இந்தியத் தொழிலாள மக்களை பிரதமர் அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறார் என்று கூறுவதற்கு அப்பால் இவரது கொடுமைகள் மேலோங்கி நிற்கின்றன. பிரசைகளாக்கப் படுவோரையும் இரண்டாந்தரப் பிரசைகளாக்கி, அந்த இனத்தவரையும் இயன்றளவு எண்ணிக் கையில் குறைத்து எடுத்து, அவர்கள் மீது ஏனையோருக்கு இல்லாத பல தடைவிதிகளை ஏற்படுத்தி விடும் பிரயத்தனமே பிரதமரின் அடிப்படையில் எழுகிறது. இவ்விதம் செய்யப் படுவதற்கும் காரணம் கண்டிப்பிரதேச மக்களின் நிலம் பறிபோய் விட்டமை எனக் காரணம் காட்டப்படுகின்றது. இது செய்யப் பட்டது யாரால் என்பதை பிரதமர் விளங்கிக்கொள்ளத் தயாராக இல்லை. இங்கு இம்மக்கள் பெருங் கூட்டங் கூட்டமாக கொண்டு வரப்பட்டு பரம்பரை பரம்பரையாக இங்கு இருந்து வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுக்குத் தெரிந்தது தாங்கள் இந்தியப் பெருநாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதும் அந்நாடு தங்கள் மீது சிறிதளவு அக்கறை காட்டுகிறது என்பதும் தான் அந்தச் சிறிய பாதுகாப்பையும் இல்லாமற் செய்ய பிரதமர் முயலுகிறார்.

**பிரதமர் டி.எஸ். சேனநாயக்க:** ஒரு போதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. செல்வா:** பெருந்திரளான மக்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு இடம்பெயர்வதோ அல்லது புது நாட்டிற்கு வருவதோ உலக வரலாற்றில் நிகழாத ஒன்றல்ல. இது உலகில் திரும்பத் திரும்ப நடைபெற்றுள்ள ஒன்றே. இதில் எழும் விடயங்கள் இன்றைய முன்னேற்ற உலகின் இயல்போடு கணித்துத் தீர்க்கப்படக் கூடியவையே. இவை அந்த நாடுகளின் அல்லது இனங்களின் பலதர நிலைகளை ஆராய்ந்து நீதி நியாய அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டியவையே. இதைச் செய்யாத இடத்தில் தான் வேறுபாடுகள் கிளர்ந்தெழுவதும் இனப் போராட்டம் நிகழ்வதும் இயல்பாகின்றது. சில இடங்களில் ஓர் இனம் அழிவிற்கு உள்ளாக்கப்படுவதும் உண்டு. இதைத்தான் எமது பிரதமர் கையாள முயன்று கொண்டிருக்கிறார். இவ்விதம் இங்கு தோட்டப் பகுதிகளிலுள்ள இந்தியத் தமிழ் மக்களை சிறிது சிறிதாகப் பலவீனப்படுத்தி கடைசியில் அவர்கள் ஓர் இனம் என்றிருந்த நிலைமையை மாற்றி ஒழித்துவிடலாம் என பிரதமர் எண்ணி வருவதை உணருகிறேன்.

இங்குள்ள இந்திய மக்கள் 1870ஆம் ஆண்டிலிருந்தே இங்கு குடியமர்ந்த மக்களாவர். இந்த ஒரு நூற்றாண்டையடுத்த இவ்வேளையும் இவர்கள் கேட்பது என்ன? இன்னும் கூடிய மக்களைத் தாங்கள் கூட்டிவர வேண்டும் எனக் கேட்கிறார்களா? ஒரு நியாயமான தீர்வைத்தானே அவர்கள் வேண்டி நிற்கிறார்கள்? இரண்டாந்தரம் அல்லாத சமமான குடிஉரிமை யையும் இந்நாட்டின் ஏனைய மக்கள் பெறும் வாழ்க்கைச் சலுகைகளையும் தானே இவர்கள் கேட்கிறார்கள்? இவ்வேளையில் ஏனைய நாடுகளில் நடைபெறுவதைக் கவனிப்போம். 7,00,000 யூத மக்கள் 1921-லிருந்து பாலஸ்தீனத்துக்குள் வந்துள்ளனர். இங்கே இந்நாட்டிலிருப்பதும் 7,00,000 இந்திய மக்கள் தான். ஆனால் இவர்கள் சாதுவான தன்மையுடையவர்கள். இதன் காரணமாகப் போலும் இவர்களது வாக்குரிமை முதலியன மறுக்கப்படுகின்றது.

பாலஸ்தீன நாட்டிற் குடியேறிய 7,00,000 யூத மக்கள் அங்குள்ள நிலத்திற்காகப் போராடுகிறார்கள். அங்குள்ள ஏனைய மக்களுடன் சேர்ந்து சீரணிக்கப்படாத தனிக் குடியுரிமைக்குப் போராடுகிறார்கள். இவர்களது போராட்டக் குரலை ஏற்று அங்குள்ள பெரும்பான்மை மக்கள் இந்த யூத மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைக்கு இசைவு தெரிவிக்கிறார்கள். அந்த உரிமைகள் ஏறக்குறைய வழங்கப்பட்டும் விட்டன. இங்குள்ள இந்திய மக்கள் கோருவதும் ஏனைய மக்களைப் பேன்ற குடியுரிமையையே அல்லாது கண்டி மக்களிலும் பார்க்க மேலான உரிமைகளை அல்ல. அதுபோல தங்கள் மொழி உரிமை முதலியன இன இயல்புகளை அவர்கள் பேணிக்காக்க விரும்புகிறார்கள். இவ்வித மொழி பண்பாட்டு இயல்புகளைப் பேணிக்காக்கும் உரிமை எந்த இனத்திற்கும், எந்த சிறுபான்மை இனத்திற்கும் உண்டு. இவ்விதம் தங்களின் தனித்தன்மையைக் காத்து ஏனையோரின் உரிமைகளில் அத்துமீறாத வாழ்க்கையையே அவர்கள் விரும்புகிறார்கள். இதையிட்டுச் சிலர் புகைச்சல் கொண்டு குடியுரிமை வழங்க மறுத்து நிற்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மக்களின் கோரிக்கை மேலதிகமானவை அல்ல. இவை மிகவும் நியாயமான கோரிக்கை என்பதை இங்கு கூற விரும்புகிறேன். இவ்வித விடயங்கள் ஏனைய நாடுகளில் மிகவும் நியாயமான வழிகளில் தீர்க்கப்பட்டுளளன. ஆனால் இந்த வழிமுறை இங்கு நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாரிய அநீதி இங்குள்ள இந்திய மக்களுக்கு எதிராக நடத்தப்படவில்லை. இது எல்லாச் சிறுபான்மை இனங்களுக்கும் எதிராக நடாத்தப் படும் அநீதியாகும்.

இங்கு குடியுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து இனி வரப்போவது மொழியுரிமைச் சட்டமாயிருக்கும். அப்போது எங்கள் நிலை என்ன என்பதை நாங்கள் மேலும் அறிவோம். அத்துடன் தானும் இந்தத் தொடர் நின்று விடப் போலதில்லை. எதுவாயினும் இங்கு இவ்வேளை நான் கூறிக்கொள்ள விரும்புவது, இந்தச் சட்டமானது இனங்களிடையே ஏற்படக்கூடிய வேறுபாடுகளையோ கஷ்டங்களையோ உயரிய கோட்பாட்டுடன் தீர்க்கவல்லதாக அமையவில்லை. இதன் காரணமாக இதனை நான் எதிர்க்கிறேன்.

எங்கள் பிரதமர் ஒரு திறமையான அரசியல்வாதி எனச் சில தடவைகளில் நான் உள்ளூர வியந்ததுண்டு.

**முதலியார் எம்.எஸ். காரியப்பர்:** ஏன் பகிரங்கமாய் அல்ல?

**திரு செல்வா:** இந்தியப் பிரதமருடன் கொண்ட கடிதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பின் போது இவர் காட்டிய அரசியற் சாதுரியத்தை நான் வியந்ததுண்டு. இந்தக் குடியுரிமைப் பிரச்சினையைத் தான் தீர்க்க விரும்பும் தோற்றத்தை இந்தியப் பிரதமருக்கு இவர் காட்டிக் கொண்டிருந்தார். இதில் இந்தியப்பிரதமரும் தானும் ஒரு மனத்தை உடையவர்களாகவும், இதில் குழப்பக்காரர்கள் சிலரே தவறான கருத்தைப் பரப்பகின்றனர் எனவும் எமக்கு விளக்கம் தரப்பட்டது. இந்தியப் பிரதமர் நேருவின் முழுச் சம்மதத்தையும் இதில் பெற்றுத்தரப் போவதாக எமது பிரதமர் விளக்கிக் கொண்டிருந்தார். கடைசியில் நடந்தது என்ன? இந்த இரண்டாந்தரப் பிரசா உரிமை முறையை வழங்குவதில் பண்டிதர் நேரு அவர்களின் உடன்பாட்டைப் பெற எமது பிரதமர் அடைந்தது பெருந்தோல்வியே அன்றி வேறல்ல. இங்கு ஒன்றைக் கூறி வைக்க விரும்புகின்றேன். இந்தியப் பிரதமர் நேரு அவர்களின் சம்மதத்தை இவர் பெற முடியாதிருந்தால் இவர் இந்திய நாட்டின் வேறு அரசியல்வாதிகளின் சம்மதத்தைப் பெறப்போவதில்லை.

இவ்விதம் முதலில் இந்த மக்களுக்கு முழுமையான குடியுரிமை எனக்காட்டி பின்னர் தந்திரமான முறையில் இரண்டாந்தரக் குடியுரிமையைக் கொண்டுவர முயன்றதன் விளைவு எதுவாயிற்று? இந்நாட்டின் மிக நெருங்கிய அயல்நாட்டுடன் இந்த மிக முக்கிய விடயத்தில் நல்ல முடிவைக் காண முடியாது போயிற்று.

எங்கள் பிரதமர் தாம் பெற்றுத் தந்த சுதந்திரம் இந்நாட்டிற்குக் கிடைத்துள்ள சுதந்திரம் எனப் பெருமையோடு கூறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர் சிந்திக்க வேண்டியது ஒன்றுண்டு இந்த எங்கள் நாட்டின் வரலாறு நாம் விலக்க முடியாத அளவு இந்திய நாட்டு வரலாற்றுடன் தொடர்பு உடையதாகவே வந்துள்ளது. இவ்விதம் இந்தியாவில் இடம்பெற்ற அரசியல் வீச்சின் சுதந்திர அலைகள் இங்கு எம் நாட்டின் விமோசனத்தையும் தட்டி எழுப்பத் தவறியதில்லை இதனை நாம் மறந்திட முடியாது.

இங்கு எந்தச் சுதந்திர அதிகாரத்தை வைத்து எமது பிரதமர் இங்குள்ள இந்திய மக்களுக்கு முதலடி கொடுக்க முயலுகிறாரோ அந்தச் சுதந்திரத்தை நாம் எய்துவதற்கு இந்திய மக்கள் தான் அன்று சிறையிருந்தும் உயிரிழந்தும் எமக்கு ஒரு துணையாய் இருந்துள்ளனர். என்பதை உற்றுணர முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாரா? இந்த வழி வந்த தமிழர் மீது இவர்கள் தான் கண்டி மாகாண மக்களின் உரிமையைப் பறிக்க வந்தவர்கள் என்று பழி சுமத்தப்பட்டு இவர்களுக்கு எதிரான சட்டம் இயற்றப்படுகிறது.

ஆனால் இந்த இந்தியத் தொழிலாளர் வந்து இங்கு செய்துள்ளது என்னவெனில் இந்நாட்டின் மலைப்பகுதி உற்பத்தி வளத்தைப் பெருக்கி அரசின் சுகபோகச் செலவினங்களுக்கு வழி செய்துள்ளதே தான். உண்மையில் இந்நாட்டின் வளம் கொழிக்க வேண்டின் இந்த மக்களை நீங்கள் விலக்கவதல்ல இங்கு வைத்திருப்பதே அதற்கு உகந்த வழி. இந்த 7 00 000 அல்லது 6 00 000 இந்தியத்தொழிலாளர் இல்லாத மலையகத் தோட்டங் களை எண்ணிப்பாருங்கள். அங்கே வளம் இருக்குமா? கைவிடப்பட்ட வெறுமை நிலை இருக்குமா என்பதை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்.

கண்டிக்கிராம மக்களுக்கு நீங்கள் தாராளமாக புனர்வாழ்வு அளியுங்கள். இதனை எவருமே எதிர்க்கவில்லை. இந்நாட்டின் எழுபது இலட்சம் மக்களுக்கு 25 000 சதுர மைல் நிலப்பரப்பு உள்ளது. இங்கு எழுவது நிலப்பரப்பு பற்றிய ஏக்கம் அல்ல. இந்த அரசாங்கம் விரும்பும் வகையில் இந்த இந்தியத் தமிழ் மக்கள் பெரும்பான்மை இன மக்களுடன் ஒன்றறக்கலந்து தொலைய மறுக்கிறார்களே என்பது தான். இங்கே தலைதூக்கி நிற்கும் மனக்குறை. இந்த மக்கள் தம் தாய்மொழியில் கல்வி கற்கும் வசதியைக் கேட்கிறார்கள். ஆனால் இதில் தானும் ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் கல்வி வசதி இல்லை. ஒரு இரண்டாந்தர கல்விக்கூட வசதியே இவர்களுக்குக் கிடைக்கிறது.

இங்கு ஒரு சர்வதேச அரசியற் கண்ணோட்டத்தைப் பெறுவதற்கும் இங்கு இலங்கை தனது அயல் நாடான இந்தியாவுடன் இணைந்த கருத்தோடு இயங்கி வருகிறது என்பதைக் காட்டுவதற்கும் போல இந்த இரு நாட்டுப்பிரதமர் களும் தில்லியிலிருந்து லண்டன் வரை பயணம் செய்த போது அடுத்தடுத்த ஆசனத்தில் காண்பிக்கப்பட்டார்கள். இந்த ஆகாயத்தள இணைப்புக்கள் அல்ல மனத்தின் அடித்தள இணைப்பே காட்டப்பட வேண்டி உள்ளது என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது எம்மை எதிர்நோக்கி நிற்கும் கேள்வி என்னவெனில் அரசியல் விவேகமற்ற இந்தத் தொழிலாளப் பெருந்தொகையினருக்கு நாம் வழங்க உள்ள நீதி எத்தகையதாக இருக்கப் போகிறது என்பது தான். இந்த மக்களை அப்படியே வெளியேற்றுங்கள். அவ்விதம் அவர்கள் வாழும் இடத்தைக் கைப்பற்றி அதனையும் கண்டி மாநில மக்களுக்கு வழங்குங்கள் என்பதா? அல்லது மலை நாட்டுத் தொழிலாளர்களே, நீங்களும் இங்கு இருந்து தொடர்ந்து பாடுபட்டு உழையுங்கள். இவ்விதம் எவரிலும் அத்துமீறாது வாழுங்கள். நீங்கள் இந்நாட்டின் வளத்தைப் பெருக்கி உழைக்கும் போது நாங்களும் உங்களை இந்நாட்டின் பிரசைகளாக்கி உதவுவோம். இந்த நல்லுணர்வின் விளக்கத்தோடு தீர்க்கப்படக் கூடியதே இந்தப் பிணக்குகளும் பிரச்சினைகளுமாகும்.

**சபாநாயகர்:** இந்தப் பேச்சை முடிக்க கௌரவ அங்கத்தவர் இன்னும் வெகுநேரம் எடுப்பாரா?

**திரு.செல்வா:** நான் வெகுநேரம் எடுக்கமாட்டேன். இது சுருக்கமாய் இருக்க வேண்டிய விவாதம் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு தவறான கருத்துப் பிரயோகம் இங்கு கையாளப்படுகிறது. இங்குள்ள இந்திய மக்களின் இருப்பினால் கண்டி மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பறிபோகிறதென்பது இந்த விவாதம். பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் அந்தந்தப் பகுதி மக்களின் சனத்தொகையைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது என்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும். எனவே இந்த 7,00,000 இந்திய மக்களின் தொகை பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிடும் என்ற விவாதமோ வீண் பீதியோ வேண்டியதில்லை. அன்று இந்த அவையிலே பிரதமர் அவர்கள் இந்நாடு பெற்றுள்ள சுதந்திர நிகழ்வைப் பாராட்டும் முறையில் ஒரு வாக்கெடுப்பைக் கொண்டு வந்தார். இந்தச் சுதந்திரமானது உங்கள் அரசியலமைப்பிலேயே ஒரு முன்னேற்றம் தான். ஆனால் தமிழன் என்ற வகையில் நான் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இது எங்களுக்கு முன்னேற்றத்தைத் தரவில்லை. சுதந்திரம் பெற்ற அந்நாளிலிருந்து இங்கு இயற்றப்பட்ட சட்டங்கள் யாவும் எங்களை இந்நாட்டின் ஏனைய குடிமக்களுடன் சம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையுடன் தலைநிமிர்ந்து நிற்க வைத்துள்ளதா என்ற கேள்வியை எழுப்பச்செய்துள்ளது.

இங்கு கொண்டு வரப்படும் சட்டங்களில் உள்ள பாரபட்சங்களையும் அநீதிகளையும் தடுக்கும் சக்தி எங்கள் கையில் இல்லை. இங்கு பெறப்பட்டுள்ள சுதந்திரம் இந்நாட்டின் ஒரு இனத்தவருக்கு மட்டுமே உரியதாக வந்துள்ளது. இச்சுதந்திரம் ஒரு இனத்தவருக்கு மட்டுமல்லாது இந்நாட்டின் எல்லா இனத்தவர்களுக்கும் உரித்தாகிப் பயன்படும் வகையை ஆக்குவது பிரதமரின் கையில் தான் இருந்தது. இன்னும் தங்கியுள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர் இந்த நெறியில் செல்லுவதாயில்லை. ஆக்கத்திற்கு எதிர்மாறான அறிகுறிகளே இங்கு காட்சி தருகின்றன. எனவே இங்கு முன்வைக்கப்பட்ட சட்டத்தில் திருப்தி பெற முடியாத மக்களின் சார்பில் எனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நன்றி.

## தமிழரசு முத்திரை

1961ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது தநதை செல்வா அவர்களை தபால் அதிபராக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சட்ட மறுப்பின் போது இலங்கை அரசின் அஞ்சல் சட்டத்தை மீறி தமிழரசு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது வெளியிடப்பட்ட தமிழரசு முத்திரை இதுவாகும்.வெளிவந்தவுடன் இம்முத்திரை பல்லாயிரக்கணக்கில் விற்பனையாகியமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியக்கொடி

(பாராளுமன்றம் நாள் 1.3.1951)

இந்நாட்டுத் தேசியக் கொடியினது வடிவம் இதற்கென நியமிக்கப் பட்ட விசேடக் குழுவின் பரிந்துரையில் உள்ளபடி அமைவதை இச்சபை ஏற்றுக்கொள்கிறது.

- முன்வைத்தவர் அன்றைய பிரதமர் மாண்புமிகு டி.எஸ். சேனநாயக்க.

**இவ்வேளை எழுந்த தந்தை செல்வா (அன்று காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு. சா.ஜே.வே. செல்வநாயகம்) அவர்கள் ஆற்றிய உரை:**

சபாநாயகர் அவர்களே.

இந்தத் தேசியக் கொடி சார்பான கருத்துக்கள் இச்சபையில் 1948 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட போது அக்கருத்துக்களை நான் எதிர்த்தேன். ஒரு நாட்டின் தேசியக் கொடி என்பது குறுகிய வலுக்கட்டாய வடிவத்திற்கு அப்பாற்பட்டதாகப் பரந்துயர்ந்த நோக்கத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். தேசத்தின் இலட்சியத்தையும் இதய மேம்பாட்டையும் இக்கொடி எடுத்துக் காட்டுவதாக வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன்.

ஒரு தேசத்தின் தேசியக்கொடி என்பது அங்குள்ள குறிப்பிட்ட இனத்தினைக் குறிக்கும் கொடியாகக் குறுகிவிடக் கூடாது என்பதை நான் அன்று இச்சபையிற் தெரிவித்தேன். இங்கு போல் பல இன மக்கள் வாழும் நாடுகளில் தேசியக் கொடியை நிர்ணயிக்கும் போது அந்தந்த இன மக்களின் இருப்பும், இதய உணர்வுகளும் தேசியக்கொடியில் இடம்பெறும் வகையிலேயே இயன்றளவு இக்கொடி உருவாக்கப்பட்டு உயர்ந்து நிற்பதை நான் வலியுறுத்திக் கூறினேன்.

உலகிலே அவ்வித நல்ல விளக்கங்கள் தோன்றி வரும் காலம் இப்போது எழுந்து நிற்கின்றது என்பதை எடுத்துக் காட்டி பிரித்தானிய நாட்டின் யூனியன் ஜக் கொடியையும் பிரான்சு, இந்தியா ஆகிய நாடுகளின் தேசியக் கொடி எவ்வாறு அங்குள்ள மக்களின் நேயத்தை தேசிய வடிவில் இலட்சிய ரீதியாகவும் இயன்றளவு இடமளித்துள்ளது என்பதை அன்று எடுத்துக் காட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அளவிற் சிறிய இலங்கையும் அந்த உயரிய மட்டத்திற்கு இலட்சிய ரீதியில் எழுந்திட வேண்டும் என விரும்புகிறேன். இதற்கு எதிர்மாறாக இன்று இந்தத் தேசியக் கொடி விடயத்தில் நாம் முரண்பட்டு நிற்பதன் காரணம் எங்கள் அடிப்படை நோக்கே பிழையாக இருப்பது தான். இனத்தின் பிரதிநிதித்துவ உரிமைகளுக்குப் பதிலாக மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் இங்கு சலுகைகள் பற்றியும் இந்தச் சலுகைகள் மூலம் நாங்கள் ஏற்க வேண்டிய உடன்பாடு பற்றியும் பேசுகிறார்.

இவ்வித பிழையான முடிவுக்கு இவர் வருவதன் காரணம் இவர் இன்றையக் காலத்துக்குரிய இலட்சிய விளக்கங்களையோ உயரிய நோக்கங்களையோ தமது குறிக்கோளாகக் கொள் ளாதது தான்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைமுறையிலிருந்து இன்று வழக்கிழந்து நிற்கும் கொள்கைகளுக்கு இவர் இலக்காகி நிற்கிறார். இதனால் ஒரு தனி இனத்தின் கொடியை இந்த முழு நாட்டின் தேசியக்கொடியாக்கும் தவறான செயலில் இவர் இறங்க விரும்புகிறார். இதனை ஓர் அற்ப திருத்தத்துடன் வழிமொழியப் போகும் கௌரவ அங்கத்தவரும் வேறெதையும் செய்யப் போவதில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களின் கொடியாகவிருந்த அதே (சிங்கக்) கொடியை தேசியக் கொடியாக்கும் பிரதமரின் முயற்சிக்கு உறுதிப்பாடு வழங்கும் பேச்சாகவே இவரது உரை அமையப்போவதை நான் உணருகின்றேன்.

நான் 1948ஆம் ஆண்டு கூறிய அதே நிலைப்பாட்டிலிருந்தே மீண்டும் என் மக்களின் சார்பில் இந்தத் தேசியக்கொடி அமுலாக்கப்படுவதை கண்டித்துப் பேச வேண்டியவனாயுள்ளேன். காரணம், அரசின் நோக்கில் முன்னேற்றம் ஏற்படாதது தான். நாட்டின் தேசியக் கொடி போன்ற முக்கிய விடயங்கள் சாதாரணமானவை அல்ல. இவை நாட்டின் உன்னத நிலையை நோக்கிய இலட்சியக் கோட்பாட்டுடன் அணுகப்பட வேண்டியவை, செயற்படுத்தப்பட வேண்டியவை. வலுக்கட்டுப்பாட்டு முறை களிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட இனம் இன்னொன்றின் மீது குறுகிய மனோபாவ நோக்குடன் தனது அரச பலம் கொண்டு திணிக்க முயலும் குறுகிய செயற்பாட்டிலிருந்தும் விடுபட வேண்டும். ஆனால் இந்தத் தவறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கையே இன்றைய அரசு பின்பற்ற முயலுகின்றது. எனவே தான் மீண்டும் என் எதிர்க்குரலை இச்சபையில் நான் எழுப்ப வேண்டியவனா யுள்ளேன்.

இச்சபையில் (1948 ஆண்டு) இடம் பெற்ற விவாதத்தின் போது குருணாகல் தொகுதியின் அன்றைய உறுப்பினர் (திரு ஸ்ரீ நிசங்க) தமது கருத்துக்களை மிக உயர்ந்த நிலையிலிருந்து எடுத்துக் காட்டினார். பர்மா நாட்டிலிருந்து அப்போது தான் அவர் திரும்பியிருந்தார். அங்கு புதிதாக உருப்பெற்றுள்ள அந்நாட்டின் தேசிய உணர்வானது எவ்விதம் அங்கு பல நூற்றாண்டு காலத்திற்கு முன் இருந்த மயிற்பட்சியைத் தாங்கிய கொடியை மாற்றி புதிய கருத்து வடிவம் கொண்ட அங்கு நிலவும் தேசிய முன்நோக்கிற்கு ஏற்ற ஒரு புதிய தேசியக்கொடியை அமைத்துள்ளதைக் கூறினார்.

ஆனால் இதற்கு எதிர்மாறாக இங்கு என்ன நடைபெறுகின்றது? 10ஆம் நூற்றாண்டுக்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு தனி இனத்தின் சிங்கக் கொடி இன்று இங்குள்ள பல இனங்களின் தேசியக் கொடியாக ஆக்கப்படுகின்றது. இதற்கு ஏதோ மாற்று மருந்து போல இன்னும் ஒரு சாரார் இதே சிங்கக் கொடிக் கொள்கையை ஒரு சிறு மாற்றத்துடன் ஏற்கும் உடன்படிக்கைக்குத் தம்மைத் தாம் தயாராக்குகின்றனர். இவை இன்றைய முன்னேற்ற நாடுகளுக்கு உகந்த வழிவகையாக இருக்க மாட்டா என்பதை நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.

மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் தமக்கு மிகப் பரந்த மனப்பாங்கு இருப்பதாகக் கூறிக்கொள்கிறார். இந்த அவரது பரந்த மனப்பான்மையைப் பரவலாக்கும் வகையிற் போலும் அவர் பண்டாரவளைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் (திரு. நடராஜன்) அவர்களை முன் குறித்த வகையிலான ஒரு திருத்தத்தை இச்சபையிற் கொண்டு வருமாறு நிர்ப்பந்தித்து உள்ளார். அந்த அங்கத்தவருக்கு நடந்துள்ள மனமாற்றத்தைப் பாருங்கள். அவர் ஏது செய்கின்றார்? ஏனைய சிறுபான்மைச் சமூகத்தினரை தாராள மனப்பான்மையோடு நடந்திடும் படி அவர் வேண்டி நிற்கிறார். தமிழரும் முஸ்லீம் மக்களும் தாராள மனப்பான்மையைக் கைக்கொள்ள வேண்டுமாம். இந்தத் தாராள மனப்பான்மை என்ற வேண்டுகோள் எதற்கு என்ன விடயத்தில் என்பதே எம் கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமரின் இந்தத் தாராள மனப்பான்மையும் இவரது அரசின் செயற்பாடும் பண்டாரவளைப் பாராளுமன்ற உறுப்பினரின் பெயரை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கியுள்ளது என்பதையும் இவர் சார்ந்த பதுளைப் பகுதியின் ஒரு பிரிவை இவரிடமிருந்து அறவே நீக்கியுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. இந்தத் தாராள மனப்பான்மை முறையை சீரணித்து நிற்கும் சில தமிழ்ப் பிரதிநிதிகள்- அதாவது தமிழ் இனத்தின் சார்பாக இங்கு வந்துள்ளதாகக் கருதப்படும் தமிழ்ப் பிரதிநிதிகள்- இங்கு பல இனம் அல்ல ஒரு தேசிய இனம், ஒரு மொழி, என்ற கிளிக்கூச்சலில் இறங்கி யுள்ளதைக் காண்கின்றோம். இன்னும் வெகு விரைவில் ஒரு மதம் என்ற கோஷமும் எழும். இவர்கள் வேண்டு வது இவ்விதமான பெரியது சிறியதை விழுங்கும் ஒருமைப் பாட்டைத்தான்.

நான் மீண்டும் கூறக்கூடியது என்னவெனில் இங்கு முன்னேற்றத்துக்குரிய அறிகுறியோ உண்மையிலான ஒற்றுமை உணர்வின் தத்துவமோ இந்த அரசாங்கத்தில் இல்லை என்பதே. இந்நிலையில் பண்டாரவளைத் தொகுதி அங்கத்தவர் இங்கு இந்நாட்டில் இடம்பெற வேண்டியது ஒரு தேசிய இனமும் ஒரு மொழியும் எனத் தம் வாய்விட்டுப் பேசிய வார்த்தைகளையிட்டு நான் ஆழ்ந்த துயரம் கொள்ளுகின்றேன்.

இந்நாட்டில் சில இயல்பான பிரச்சினைகள் இருப்பது உண்மையே. இவற்றை நாம் கருத்தில் எடுத்துத் தீர்க்க வேண்டும். இந்நாடு ஆயிர வருடக்கணக்காக ஒன்றிற்கு மேற்பட்ட இனங்களைக் கொண்டு வந்துள்ளது. இவர்கள் மொழிவாரியாக இரண்டு பெரும்பாகமாக இந்த நெடுங்காலமும் இருந்து வாழ்ந்து வந்துள்ளனர். இந்த இயல்பைத் தாங்க முடியாத சில குறுகிய மனத்தோர் இந்த மொழி வாரி இனங்களில் ஒன்றை மாற்றி ஒழித்து இங்கு இருப்பது ஒரேயொரு இனம் என்ற நிலையை ஏற்படுத்த முயல்வதை பெயரளவில் எமக்குக் கிடைத்த சுதந்திரம் வந்த இந்த மூன்று வருடங்களுக்குள்ளேயே காண முடிகிறது.

இங்கே இந்தப் பாராளுமன்றத்திலேயே தமிழ்ப் பிரதிநிதிகளாயுள்ள சிலர் உங்கள் மொழி உரிமை என்பதை விட்டுக் கொடுங்கள் எனத் தமிழினத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறேன். இவ்வித உடன்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை தான் இங்கு பரிந்து கேட்கப்படுகின்றது. அன்று கல்குடாப் பாராளுமன்ற உறுப்பினர் (திரு. நல்லையா) அவர்கள் இதே சபையில் தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்டுக் கொண்டது இது தான். **" தமிழ் மக்களே, நீங்கள் சிங்களம் படியுங்கள்"** என்பது தான். இதே வரிகளை சிங்களவர்களிடம் அவர்கள் தமிழ் படிக்க வேண்டும் எனக் கூறவில்லை. தமிழர் சிங்களம் படிக்க வேண்டும் என்பதை அந்த உறுப்பினர் இந்தச் சபையினுள்ளே கூறினாரே யொழிய மட்டக்களப்பு மக்களின் முன்னால் அங்கு போய்க் கூறத் துணிய மாட்டார்.

இதே ரீதியில் எனது நண்பர் பண்டாரவளைப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் தமிழ் மக்களிடமும் முஸ்லிம் மக்களிடமும் அவர்கள் தங்கள் பாரம்பரிய வாழ்க்கை எனக் கொண்டுள்ள சிலவற்றை விட்டுக் கொடுக்கும்படி கேட்பதையிட்டு நான் வேதனைப்படுகின்றேன். இந்த வழியில் நாட்டின் தேசியத்தைக் காக்க முடியாது. சிறு பான்மை இனங்களை அழிக்க முயன்றல்ல, அவர்களின் மனத்திலே ஏற்படக்கூடிய ஐயப்பாடுகளை நீக்கியே ஐக்கிய உறுதிப்பாடு கொண்ட தேசிய உணர்வை நாம் கட்டி வளர்க்க முடியும். இதற்குப் பதிலாக சிறியதைப் பெரியது விழுங்கும் முயற்சியே இங்கு நடைபெறுகிறது.

**இந்த வழிமுறை தான் அரசாங்கத்தினால் மொழி விடயத்திலும், இந்தக் கொடி விடயத்திலும் கையாளப்படுவதைக் காண்கிறோம். இது தான் சரணாகதி அடைய மறுக்கும் ஒரு சாராராகிய எங்களை எதிர்த்து எழ வைக்கிறது. எங்களை நாங்கள் பாதுகாக்க தனியான ஒரு தமிழ்ப் பேசும் அரசை உருவாக்குவோம் என்ற உணர்வுக்குத் தூண்டுகிறது.** அவ்வித ஓர் அரசு இருக்குமானால் அத்தகைய அரசில் மதிப்புக்குரிய கல்குடாப் பிரதிநிதியவர்கள் இங்கு கூறியதை அங்கு கூற மாட்டார்.

**மதிப்பிற்குரிய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க**: அப்போதும் அவரும் இன்னொரு கொடியை அங்கு வைத்துக் கொள்ளலாம்.

**திரு.சா.ஜே.வே.செல்வநாயகம்:** நேற்று, கௌரவ பண்டாரவளைப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் இநநாட்டுக்குரியது ஒரேயொரு மொழி (சிங்களம்) எனப்பேசிய போது இந்த நாட்டிலுள்ள 20 லட்சம் தமிழ்ப் பேசும் மக்களையும் அந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச்சிங்களக் கூண்டுக்குள் சிறை வைக்கும் பேச்சாகவே அது இருந்தது. அவ்விதம் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தாய் மொழியை இழக்க வேண்டும். இழந்து படிப்படியே சிங்கள மொழி பேச வேண்டுமாம். இவ்விதம் மொழியுரிமையிலும் இன்று பேசப்படும் தேசியக்கொடி உரிமையிலும் எதிலும் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்கும் உடன்பாடு உடையோராகத் தமிழ் பேசும்மக்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டுமாம். இதை அந்த அங்கத்தவர் கூறிய போது அரசியல் விவகார அமைச்சர் அவரைக் கைதட்டி மகிழ்வித்ததைக் கண்டோம். இவ்விதம் உரிமைகளை இழந்து பெறும் உடன்பாடுகளையும் இந்த அடிப்படையில் உருவாகும் தேசிய ஒருமைப்பாட்டையும் நான் அறவே ஒதுக்குகின்றேன். அதில் என் வன்மையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கிறேன்.

**இங்கு ஒரு புதுவிதமான அரசியற் சித்தாந்தம் அல்லது நாகரீகம் தோன்ற முயலுகிறது. அதில் பெரும்பான்மையினரின் இனத்துவேஷம் அவர்களின் தேசிய உணர்வு எனப் போற்றப்படுகிறது. சிறுபான்மையினரின் இனப்பற்றோ அவர்களின் தேசிய உணர்வல்ல. அது அவர்களின் இனத்துவேஷம் எனக் கொள்ளப்படுகின்றது.**

இங்கு இந்தச்சபையில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாவை இது உயரிய கொள்கையின் அடிப்படையில் ஆகாத மசோதா எனக் கூறி இதனை நான் எதிர்க்கிறேன். இந்தக் கொடியை இங்கு அறிமுகம் செய்து இதற்குத் தேசிய வடிவம் கற்பித்து இதனையே இந்நாட்டின் தேசியக் கொடியாக்க முயலும் இவ்வேளையில் இதில் சிறு பான்மை இனத்தவருக்கும் சலுகை காட்டப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இவ்விதம் உரிமைகள் மறுக்கப்பட்டு சலுகையின் அடிப்படையிலான சரணாகதி உடன்பாடுகளை என் இனத்தின் சார்பில் நான் எதிர்க்கிறேன்.

இந்த சிங்கக்கொடியை இந்நாட்டின் தேசியக்கொடியாக ஆக்கும் போது நீங்கள் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் புறக்கணிக்கிறீர்கள். ஏனைய சிறு பான்மை இனத்தின் பிரதிநிதிகளும் தங்கள் உணர்வு களை இங்கே வெளிக்காட்டவே உள்ளனர். இங்கு பெரிதெனக் கருதி மதிப்புக்குரிய கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் கொண்டு வந்துள்ள மசோதா நிறைவேற்றப் படினும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இனத்தவர்களை நீங்கள் புறக்கணிப்பதாக மட்டுமல்ல தொடர்ந்து அவமதிப்ப தாகவே இருக்கும்.
(சபையில் குழப்ப ஒலி கிளம்புகிறது)

**திரு. சா.ஜே.வே. செல்வநாயகம்:** சாவகச்சேரி பா.உ. (திரு குமாரசாமி) எப்போதும் கேள்விக்குரியவராகவே இருப்பார்.

நான் மீண்டும் கூறுகிறேன். இது ஏனைய இனத்தவர்களை அவமதிப்பதாகவே உள்ளது. தேசியக் கொடியானது நாட்டின் பல்வேறு இனத்தவரையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக இருக்கவேண்டும். ஆனால், அனைத்து இனங்களின் பிரதிநிதித்துவமும் நாட்டின் தேசியக்கொடியில் இருக்க வேண்டும்.

நீங்கள் இந்தச் சிங்கக் கொடியை மாற்றமின்றி அன்று அக்காலத்திலிருந்த ஒரு தனி இனத்தின் கொடி போலவே இன்றும் இங்கு கொண்டு வர முயலுகிறீர்கள். இந்த முன்னைய கொடியே இப்போதும் வரும் தேசியக்கொடி எனப்பட்டதிலும் முக்கிய மத்திய பெரும்பாகமாக இருக்கிறது. இதற்கு வெளியே ஒரு கரையோரத்தில் காட்டப்படும் வெளிக்கோடு தானாம் ஏதோ வேண்டாவெறுப்புடன் சகிக்கப்படும் இருபது இலட்சம் சிறுபான்மை மக்களைக் காட்டி நிற்கும் அடையாளச் சின்னம். இது இம்மக்களை அவமதிப்பதாக இல்லையானால்...
(சபையில் குழப்ப ஒலி)

ஆமாம். சாவகச்சேரி அங்கத்தவரின் உணர்வுக்கு இவை எட்டக் கூடியவை அல்ல. ஓர் அனுபவம் மிக்க ஆசிரியரும் பிரபல பாடசாலை யொன்றின் உப அதிபரும் நேரடி அரசியலில் இல்லாதவருமான பொதுமகன் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இந்தக் கொடித் திருத்தத்தைப் பற்றிக் கூறியதுண்டாம் - "பொன்னா (கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர்) கொண்டு வந்துள்ளது தேசியக்கொடியில் திருத்தமல்ல. அதன் கச்சை போல இரு கோடுகளையே" என.

இதுதான் மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் எந்த மக்களது மனதை தமது சலுகைகளால் திருப்திப்படுத்தி விட்டதாகக் கருதுகிறாரோ, அந்த மக்களது கருத்தாகும். தேசிய ஒருமைப்பாடு எனவும் குரல் கொடுக்கப் பட்டுள்ளது. இந்த ஒருமைப்பாடு ஒவ்வொரு இனத்திற்கும் உரிய தனித்துவத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும் வகையில் ஒருவரையொருவர் மதிக்கும் வகையில் சமத்துவ நல்லுறவின் அடிப்படையில் வேண்டுமே யொழிய இன அழிப்பு முறையில் அல்ல.

குடியுரிமையிலும் சரி, மொழியுரிமையிலும், ஏனைய விடயங்களிலும் சரி நீங்கள் உங்களிலும் அளவிற் சிறிய இனங்களை இன்னல்படுத்தி அழித்தொழிக்கும் நோக்குடனேயே செயற்படுகிறீர்கள். இந்த அடிப்படையில் ஒற்றுமையோ இங்கு கூறப்படும் ஒருமைப்பாடோ தலை தூக்க முடியுமா?

நான் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் அளவிற் சிறியதோ. பெரியதோ அந்த இனத்தின் சார்பில் ஏனைய சிலர் பெரிதென மதிக்கும் பிற பொருளிலும் பார்க்க கொள்கையே பெரிதென மதித்து அதற்கு முதலிடம் கொடுத்துத் தன்மானத்தோடும் சுய கௌரவத்தோடும் வாழ விரும்பும் என் தமிழ் இனத்தின் சார்பில் நான் இங்கு கொண்டு வரப்படும் சிங்கக் கொடியையும் இதன் ஓரத்தில் இரு கோடுகள் இடப்பட்ட மாற்றுச் சிங்கக் கொடியாகி வரும் இரண்டையும் எதிர்க்கிறேன். இந்த இரண்டு கொடிகளும் நாங்கள் மதிக்கும் உயரிய இலட்சியத்தின் அடிப்படையில் அமையவில்லை. மிகவும் பின் தங்கிய பிற் போக்கான கருத்துகளை கொண்டு இவை உருவம் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து ஒரு புதுத் தேசியத்தை நீங்கள் எழுப்ப முடியாது.

நான் இங்கு முன்வைக்கப்பட்டுள்ள திருத்த மசோதாவை எதிர்க்கிறேன். இது பற்றி இச்சபையில் நேற்று பண்டாரவளைத் தொகுதி அங்கத்தவர் பேசிய உரையையிட்டு வேதனை அடைகிறேன். சிலரைத் தாம் திருப்திப்படுத்தி விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கும் பிரதமர் குறிப்பிட்ட கொடியையும் நான் எதிர்க்கிறேன்.

இக்கொடிகள் தமிழ் மக்களின் விருப்பைத் திருப்தி செய்யவில்லை. இவை அமுலாக்கப்படுவதற்கு என் ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம் மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

( நன்றி: இலங்கைப்பாராளுமன்றத்தில் தந்தை செல்வா ஆற்றிய எழுச்சி உரைகள், பாகம் 1. சென்னை: ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம்,எழும்பூர். முதற் பதிப்பு, ஏப்ரல் 1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் காந்தி - தந்தை செல்வா

**-கரிகாலன்-**

"தமிழர்களுக்கு ஓர் தாயகம் உருவானால் உலகத் தமிழர்களுக்கு விடுதலை" என்று கூறியவர் தமிழர் தலைவர் தந்தை செல்வா. தமிழ்த் தந்தை என்றும், ஈழத்துக் காந்தி என்றும் பெரியவர் என்றும் இலங்கைத் தமிழர்களால் போற்றப்படும் தலைவர் பிறந்த நூற்றாண்டு நிறைவை நினைவு கூரும் முகமாக 1998இல் இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்கள் விழா எடுத்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத் தமிழர் வரலாறு உணர்ச்சியும் கிளர்ச்சியும் கலந்து உருவான ஒரு காவியம். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை (எஸ்.ஜே.வி.) செல்வநாயகம் என்பது அந்தக்காவிய நாயகன் பெயர். கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஈழத்தில் எழுச்சி கொண்டுள்ள தமிழ் தேசியவாதத்தின் தந்தை இவர். பெரியவர் செல்வா தலைமையில் 1974 மே மாதம் யாழ்ப்பாணம் - வட்டுக் கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் முதன்முதலாக பிரகடனப்படுத்தப்பட்ட தனித் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசியலில் போராட்டமயமான ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. ஈழத்தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் இன்று ஏற்பட்டிருக்கும் தீவிரப் போக்கையும். பயங்கரமான பரிமாணங்களையும் செல்வா நிச்சயம் எதிர்பார்த்திருக்க முடியாது.

1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே செல்வா மறைந்து விட்டார். ஆயினும், தேர்தலில் தமிழர் விடுதலைக்கூடட்ணி தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து அமோக வெற்றியீட்டி, நாடாளுமன்றத்தில் தமிழர்களின் ஏகப்பிரதிநிதியாக விளங்கியது. 1983 ஜுலை மாதம் இலங்கையில் அரங்கேறிய தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து தமிழரின் அரசியல் வாழ்வை தீவிரவாதிகளான ஆயுதப் போராளிகள் சுவீகரித்துக் கொண்டதும், இதனால் மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும் ஓரங்கட்டப்பட்டதும் தனிக்கதை. எனினும், தீவிரவாதிகளும் மிதவாதிகளும் செல்வாவைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழருக்கு இனவுணர்வை ஊட்டியவர் என நிதானவாதிகளும், தம் நெஞ்சங்களில் விடுதலை வேள்வித் தீயை மூட்டியவர் எனத் தீவிரவாதிகளும் இவரைப் போற்றுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948-ம் ஆண்டு இலங்கை அரசு தோட்டத் தொழிலாளர்களான பத்து இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்தது. இதனால் இவர்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திலிருந்த ஐந்து எம்.பிக்கள் பதவியிழந்தனர். (இன்று அமைச்சராயிருக்கும் தொண்டமான் அவர்களும் ஒருவர்) நாடாளுமன்றத்தில் இச்சட்டத்துக்கு ஆதரவாக தாம் சார்ந்திருந்த கட்சி வாக்களித்த போது, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வா எதிர்த்து வாக்களித்து விட்டு அக்கட்சியிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை நிறுவினார். இந்தியாவில் அமைந்துள்ளது போல சமஷ்டி அமைப்பு முறையில் தமிழர் வாழும் வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைத்து தனி மாநிலமாக்க வேண்டும் எனக் கோரியதால் இக்கட்சியை "பெடரல் கட்சி" என அழைத்தனர்.

"கண் உள்ளவர்களே! பார்த்துக் கொள்ளுங்கள். இன்று இந்திய வம்சாவளித் தமிழனுக்கு இழைக்கப்படும் அநீதி நாளை இலங்கைத் தமிழனுக்கு எதிராகவும் நடக்கும். சிங்களப் பேராதிக்கப் பிரளயத்தை இன்றே தடுத்து நிறுத்த வேண்டும்". என செல்வா தீர்க்கமாக எச்சரித்தார். இந்தியாக்காரன் என நிந்திக்கப்படும் தமிழனும் இலங்கைத்தமிழனும் உறவால் ஒன்று பட்டவனே என்ற புதிய மந்திரத்தை இலங்கைத் தமிழர்களுக்கு உணர்த்தினார்.

தமிழரசுக் கட்சிக்குக் கருவிலேயே கண்டம். 1952-ம் ஆண்டு தேர்தலில் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பெரியவரே காங்கேசன்துறைத் தொகுதியில் தோல்வியுற்றார். அரசாங்க சார்புப் பத்திரிகைகள் "சமஷ்டிக்குச் சாவு மணி" எனக் கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டு கொக்கரித்தன. செல்வாவுக்கு கட்சி சந்தித்த முதல் தேர்தல் ஒரு தத்தவத்தின் பிரசவ வேதனை. தளர்ந்துவிடாது தம் பணியைத் தொடர்ந்தார். அடுத்து நடைபெற்ற 1956-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தமிழர்களின் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றது. 1974-இல் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிணமித்தது.

செல்வா, சட்டத்துறையில் சாதனைகள் புரிந்து கொழும்பிலுள்ள உச்ச நீதிமன்றத்தில் பகழ்பெற்ற வழக்கறிஞர். இதனால் பிரித்தானிய மகாராணியால் வழங்கப்படும் Queen's



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Counsel என்ற தகைமையைப் பெற்றவர். விருது பெற்ற வழக்கறிஞராயினும் தமிழர் உரிமைகளுக்காக சாத்வீக முறையில் சட்ட மறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைவாசம், தடுப்புக்காவல் என விழுப்புண் பட்டவர். இலங்கை அரசியல் களத்தில் காந்திய நெறியில் கிளர்ச்சிகள் அறிமுகப்படுத்தியவர் என்பதால் ஈழத்துக் காந்தி என்ற சிறப்புப் பெயருக்கும் உரித்தானவர். ஒரு தடவை இந்தியப் பிரதமர் நேருவின் இலங்கை வருகையின் போது விமான நிலையத்தில் வரவேற்க வந்த செல்வாவை பிரதமர் பண்டாரநாயக்க, ''அடிக்கடி காந்தியக் கிளர்ச்சிகளை நடத்தி என்னை மிரட்டுகின்றவர் இவர்'' என்று வேடிக்கையாகக் கூறி நேருவுக்கு அறிமுகம் செய்தார்.

இலங்கைத்தமிழர்கள் பிரதேச பேதங்களினால் பிளவுண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தான்- மட்டக்களப்பான்- வன்னியான் என இவர்களுக்குள் பரஸ்பர அவநம்பிக்கைகள். ''மண்ணின் மைந்தர்கள்'' போன்ற பிரதேச கோஷங்களுக்கும் துவேஷத்துக்கும் குறைவில்லை. சிங்கள ஆட்சியாளர் தமிழர்களைக் கூறு போட்டு, துவேஷத் தீயை வளர்த்து குளிர் காய்ந்தனர். பிளவுகளை அகற்றி தமிழரை ஒரு கொடியின் கீழ் ஓரணியில் திரட்டி வலிமையான ஒரு சக்தியாக உருவாக்கியவர் பெரியவர் செல்வா.

அந்த அபூர்வ மனிதரின் தலைமையில் இன்னோர் அற்புதமும் நிகழ்ந்தது. இலங்கைத்தமிழர்களில் 87 சத வீதத்தினர் இந்துக்கள். பெரியவர் செல்வா ஒரு கிறீஸ்தவர். தமிழ்நாட்டை அண்மையில் விகாரப்படுத்தியுள்ள மதவெறி ஈழத் தமிழ்ச் சமதாயத்தில் இல்லை. அங்கு தமிழரின் சகோதரத்தவ உணர்வுகளை மதாச்சாரியங்கள் ஆக்கிரமிக்கவில்லை. அவரை இறுதி வரை தம் தலைவனாக அபிமானத்துடன் ஆராதித்தனர்.

தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக செல்வா போராட்டங்களை நடத்துவதும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உறுதி மொழிகள் தந்து உடன்படிக்கைகள் செய்வதும் பின் அவற்றை மீறுவதும் இலங்கைப் பிரதமர்களுக்கு கைவந்த கலை. 1957-இல் (அதிபர் சந்திரிகாவின் தந்தையான) பிரதமர் பண்டாரநாயக்கவுடனும் 1960-இல் தாய் சிறிமாவுடனும் அடுத்து 1965-இல் பிரதமரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டட்லி சேனநாயக்கவுடனும் பெரியவர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எழுதிய மை உலர்வதற்கு முன்பாகவே மீறப்பட்டன. சிங்களத் தலைவர் களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டதாலும் தமிழரின் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக்கூட சிங்களத் தலைவர்கள் நிராகரித்ததாலும் நிதானவாதியான செல்வா பிரிவினைக்குத் துணிந்தார். தமிழ் ஈழக் கோரிக்கையினை முன்மொழிந்தார்.

1972-ம் ஆண்டு சிறிமா அரசு தமிழர்களின் உரிமைகளை மேலும் கட்டுப்படுத்தும் விதத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கிய போது தமிழரின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக தமது நாடாளுமன்றப் பதவியை இராஜினாமா செய்து காங்கேசன் துறையில் இடைத்தேர்தலைச் சந்தித்தார். மீண்டும் அமோக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஈழத்தமிழர்களின் கோரிக்கைகளுக்கு இந்தியத் தலைவர்களின் தார்மீக ஆதரவைத் திரட்டுவதற்காக 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமிர்தலிங்கத்துடன் இந்தியா வந்தார் செல்வா. பெரியார் ஈ.வெ.ரா., காமராஜர், காயிதே மில்லத், ம.பொசி. கருணாநிதி உட்பட பல தமிழ்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அடுத்து பிரதமர் இந்திரா காந்தியைச் சந்திப்பதாக ஏற்பாடு. மிரண்டு போன இலங்கை, தூதர் மூலம் அச்சந்திப்பைத் தடுத்து நிறுத்தி விட்டது.



**இந்திய ஜனாதிபதியுடன் தந்தை செல்வா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் செல்வா சிறிய விபத்தினால் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு 1977 ஏப்ரல் மாதம் 26ம் திகதி மறைந்தார். அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது அவரைப் பரிசோதிப்பதற்கென நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியை சென்னையிலிருந்து விசேஷமாக அனுப்பி வைத்தவர் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

இலங்கை அரசியலில் நேர்மையும் கண்ணியமும் மிக்க ஒரு தலைவராக சிங்களத் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர் செல்வா. அவர் மறைந்த போது நாடாளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஜே.ஆர். ஜெயவர்த்தன உட்பட அனைத்து சிங்களத் தலைவர்களும் பெரியவரின் தூய் மையான அரசியல் வாழ்வைப் பாராட்டிப் பேசினார்கள்.

" கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்ற வருகுது" என முன்பு இந்திய சுதந்திரப் போருக்கு கட்டியம் கூறினார் நாமக்கல் கவிஞர். தமிழர் உரிமைகளைக் காக்க பெரியவர் செல்வா சத்திய யுத்தத்தைத் தொடங்கினார். திவ்வியமாக ஆரம்பித்த போர் திசை மாறியதற்கு சிங்கள மக்களே பொறுப்பாளிகள். காந்திய நெறியில் தொடங்கி இன்று ஏ.கே.47 துப்பாக்கிகள், ஏவுகணைகள், கனரகபீரங்கிகள் எனப் பரிணமித்துள்ளது. வேலுப்பிள்ளை செல்வநாயகம் முதல் வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை போராட்டப்பாதையில் தமிழரின் நீண்ட பயணம் இன்னும் முடியவில்லை. முடிவதாகவும் இல்லை. ஆயிரக்கணக்கானோர் யுத்த களத்திலே செத்து மடிந்திருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான அப்பாவித்தமிழர் உற்றார் உறவினரையும் வீடு வாசல்களையும் இழந்து அகதியாகியுள்ளனர். யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தைக் காலத்தின் கொடுமை என்பதா? இங்கு அவல வாழ்வை நடாத்தும் தமிழர்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் " தமிழரை இனி கடவுள் தான் காக்க வேண்டும்" என்றார் செல்வா. விரக்தியில் கூறினாரா அல்லது விஷயம் அறிந்து தான் கூறினாரா?

**(நன்றி: சுடரொளி: தனிநாயகம் அடிகள் சிறப்பு மலர், இலண்டன்,** ஆகஸ்ட்-செப்டெம்பர் 1999)

'' ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழத்துக் காந்தி " அரசியல் தீர்க்கதரிசி"

## மூதறிஞர் தந்தை செல்வா இலங்கையின் விடுதலைக்கு தமிழ்த் தலைவர்களின் தலையாய பங்களிப்பு

இலங்கையின் விடுதலை வரலாற்றை எண்ணுகின்ற போது சேர். பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், எப் ஆர் சேனநாயகா, பரண்ட் ஜெயதிலகா போன்றோரின் பெயர்கள் நினைவுக்கு வருவதுண்டு. இலங்கையின் விடுதலை வரலாற்றில் சிங்களத் தலைவர்களுடைய பங்களிப்பு உண்டு. எனினும் அவர்களையும் மிஞ்சுகின்ற முறையில் முன்னே குறிப்பிட்ட சேர். பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகிய இரு உடன்பிறப்புகளுடைய பங்களிப்பு தான் தலையாயது என்பது இலங்கையின் விடுதலை வரலாற்றைச் சமன்செய்து சீர்தூக்கி நடுநிலை வழுவாது எழுதும் வரலாற்று ஆசிரியர்களின் தீர்ப்பாகும்.

### ஏமாற்றப்பட்ட தமிழ்த் தலைவர்கள்

எனினும் மேலே குறிப்பிடப்பட்ட சேர். பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் ஆகிய இரு உடன்பிறப்புகளும் இலங்கை, ஒன்று என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வைத்துப் பணியாற்றித் தியாகம் செய்த நிலையிலும், இறுதிக் காலத்தில் தம்மோடு பணிபுரிந்த சிங்கள தலைவர்களால் ஏமாற்றப்பட்டு, இலங்கையில் தமிழ் இனத்தின் தனித்துவத்தை நிலை நாட்டக் குரல் எழுப்பி, ஏக்க நிலையில் மறைந்த வரலாறே ஈழத் தமிழர் நாம் இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது.

### வெள்ளையனுக்குப் பதில் சிங்களவன் தலைமையேற்பு

வெள்ளையன் வெளியேற அந்த இடத்தில் சிங்களவன் ஆதிக்கம் தலை தூக்கியதே இலங்கை வரலாற்றில் நாம் கண்ட கசப்பான உண்மையாகும். இந்த சிங்கள வல்லாண்மையை உலகம் வியக்கிற முறையில் தன் ஆங்கில சொல்லாட்சி கொண்டு எதிர்த்து ஓங்கிக் குரல் எழுப்பியவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் என்ற தலைவர். ஆனால் இதே தலைவர் காலப்போக்கில் சிங்களத் தலைவர்கள் வழங்கிய பட்டங்கள் பதவிகளுக்கு மயங்கி அவர்கள் விரித்த மாயவலையில் சிக்கித் தமிழினத்தை விற்க முனைந்த போது அதனைத் தடுத்து ஆட்கொள்ளும் பணியில் தன்னை முற்றாக அர்ப்பணித்து, தொலைநோக்குச் சிந்தனையுடன் பெரும் பணியாற்றிய பெருந்தகைதான் நம் தந்தை செல்வநாயகம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை நட்சத்திரம் செல்வநாயகம்

நம்பிய தமிழினம் நடுக்கடலில் தத்தளிக்க விடப்பட்டபோது, தனக் கொரு ஏற்ற தலைவன் இல்லையே என்று தமிழினம் தடுமாறிய போது தவித்து "அய்யோ" என்று அலறியபோது அவர்களின் துன்பம் துடைக்கின்ற முறையில் அவர்களின் நம்பிக்கை நட்சத் திரமாக ஒரு தலைவன் தோன்றினான். அத்தலைவனின் முழுப் பெயர் **சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்** என்பதே ஆகும்.

செல்வநாயகம் அவர்கள் இலங்கைத் தமிழ்மகன். ஆனால் அவர் பிறந்து இளமையில் வளர்ந்தது மலேசிய நாட்டிலுள்ள " ஈபோ" என்ற மாநிலத்தில் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. காரணம் இவரின் தந்தை வேலுப்பிள்ளை மலேசியாவில் வணிகத் துறையில் ஈடுபட்டிருந்தார். எனினும் இவரின் இளமையில் தந்தை யார் மறைந்ததன் காரணமாக மீண்டும் யாழ்ப்பாணத்திலும், கொழும் பிலும் இவருடைய வாழ்வு நிலைகொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

## தூய்மை துலக்கிய வாழ்வு

முன்பு குறிப்பிட்டதற்கமைய இவர் மலேசியாவில் பிறந்த மாநிலத் தின்பெயர் "ஈபோ" என்பதாகும். மலேயாமொழியில் ஈபோ என்ப தற்கு " தூய்மை" என்பது பொருள். தூய்மை என்ற பெயர் தாங்கி யுள்ள ஒரு மாநிலத்தில் இவர் பிறந்ததால் போலும், இவருடைய தனிப்பட்ட வாழ்விலும், அரசியல் வாழ்விலும் தூய்மை துலக்கி யது. அதன் காரணமாக அரசியல் எதிரிகள் கூட அவருக்கு மதிப்பளித்தார்கள்.

## பட்டமும் படிப்பும்

யாழ்ப்பாணத்தில் தூய பரியோவான் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல் லூரியிலும் பயின்றதோடு இளம் அறிவியல்(B. Sc) பட்டத்தைப் பெற்று சில காலம் ஆசிரியராக தூய தோமஸ் கல்லூரியிலும், வெஸ்லி கல்லூரியிலும் பணி புரிந்த பிறகு, சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று ஒரு பெயர் பெற்ற குடியியல் வழக்குரைஞராக (Civil Lawyer) விளங்கினார்.

## பிறப்பும் - மறைவும்

இப்பெருமான் 1898ம் ஆண்டு பங்குனிமாதம் 31ம் திகதி தோன்றி, 1977ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் திகதி தமது 79வது அகவை யில் உயிர் துறந்தார். அவர் இன்று எம்மோடு உயிருடன் இருப்பின், அவரது 100வது நிறைவு விழாவை ஈழத்தமிழ் மக்கள் மட்டுமல்ல, தமிழகம் உட்பட தமிழ் கூறும் நல்லுலகு ஒருங்கிணைந்து கொண்டாடியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுங்கும் மேனியும் நடுங்காக் கொள்கையும்

நடுநடுங்கும் கைகால்கள், நடுங்காக் கொள்கை
நாவெடுத்துப் பேச முடியாவிட்டாலும்
சிடுசிடுப்பு இல்லாது வீராய் நேராய்ச்
செந்தமிழர் வாழ்விற்கே சேர்த்த சொற்கள்
அடுத்தடுத்து வருவதனை அழகு ஈழம்
ஆர்வத்தோடு டெதிர்பார்த்து அதனைக் கேட்கும்!
நடுநிலைமை தவறாத நல்ல நோக்கு
நம் தமிழர் மூதறிஞர் செல்வா நாக்கு
பஞ்சடைந்த இருகண்கள்! ஆனால் அந்தப்
பார்வைதான் தமிழ்மகனைப் பலவானாக்கும்!
வெஞ்சிறையுள் புகுதற்கும் விறலை ஈனும்
வேகத்தைத் தீவிரத்தை மேலும் கூட்டும்
அஞ்சாமை மந்திரத்தை அகத்தில் ஓதும்
ஆயிரமாய்த் தியாகிகள் ஆக்கப் போகும்
நஞ்சுதனை அமுதாக்கி நமக்கு நல்கும்
நாற்பது லட்சம் தமிழர் மீட்கும். ”

என்றும், எளிய, இனிய, ஏற்றமிகு தமிழ்ச்சொற்கள் கொண்டு எம்தந்தை செல்வாவின் சிறப்பினை, சீரினை தமிழீத்தின் “ மீன் பாடும்” மட்டக்களப்புக் கவிஞர் “அக்கரைச் சக்தி” வாழ்த்திய வாழ்த்துரை பொருள்பதித்த பொன்னுரையாகும். கவிஞர் கூறுவது போல், நடுங்கும் கை, கால்களோடு ஒல்லியான குச்சி வடிவம் தாங்கி, விரைந்து நாவெடுத்துப் பேசமுடியாத நிலையிலேயே நம் தந்தை செல்வா வாழ்ந்து , தனது 79ம் அகவையில் முதுமையற்ற நிலையில் அவருயிர் துறந்தது உண்மை. ஆனால் தனது இறுதிமூச்சுவரை தன் கொள்கைப்பிடியில் எதுவித தளர்ச்சியோ, ஈடாட்டத்தையோ காட்டாது உறுதியோடு விளங்கினார்.

உலகில் பெருந்தலைவர்கள் பலர் இறுதிக்காலத்தில் தம்கொள்கையில் தள்ளாடித் தடம்புரள்வதுண்டு. ஆனால் எம் தந்தை செல்வாவோ தன் உடல்தளர்ந்த நிலையிலும் மனஉறுதியோடு செயலாற்றினார். அவருடைய உடல் தளர்ந்த நிலையில் கைகள் நடுங்கின். கால்கள் நடங்கின் மேனி நடுங்கியது. நாவும் நடுங்கியது. ஆனால் அவரிடம் என்றுமே கொள்மை நடுக்கம் ஏற்பட்டதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்குகின்ற வயதிலும் நடுங்காத கொள்கை அவரிடம் இருந்தது. ஆனால் இன்று எம்முடைய தலைவர்கள் பலரிடம் நடுங்காத வயதிற்கூட கொள்கை நடுக்கத்தைக் காண்கின்றோம். எனவேதான் தந்தை செல்வாவுடன் மாறுபட்ட அரசியல்வாதிகள் கூட கொள்கை குன்றாய் விளங்கிய அவரைத் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றனர்.

## எதிர்கால ஏற்றத்திற்குப் பணிபுரிந்த ஏந்தல்

அரசியல் என்பது ஒரு அழுக்குப் படிந்த குட்டை என்று மக்கள் சொல்வார்கள். ஆனால், அந்த அழுக்குப்படிந்த குட்டையின் அழுக்கை நீங்கி தூய்மை துலங்கச் செய்த பெருமை இவரையே சாரும்.

அரசியல்வாதிகள் பலர் வருகின்ற தேர்தலையே நினைவிற்கொண்டு கொள்கை வகுப்பது வழக்கம். ஆனால் தந்தை செல்வா அவர்கள் வருகின்ற தேர்தலில் ஏற்படுகின்ற வெற்றி, தோல்வி பற்றிப் பொருட்படுத்தாது, எம் எதிர்கால வழித்தோன்றல் களின் வாழ்வு வளம் பெறும் முறையில் தன் பணிகளை அமைத் துக் கொண்டார். ஆகவேதான் அவரை சாதாரண அரசியல்வாதி யாக எவரும் கொண்டதில்லை. மாறாக ஒரு அரசியல் ஞானியாக அனைவராலும் மதித்து, வாழ்த்திப் போற்றப்பட்டார்.

## பொருள் பொதிந்த பேச்சாளர்

செல்வா ஒரு தலைசிறந்த சொற்பொழிவாளராகவோ, சொல்லேர் உழவராகவோ விளங்கியதில்லை. அவர் பேசியதும் குறைவு, எழுதியதும் குறைவு, ஆனால் அவருடைய எண்ணங்கள் அனைத் தும் ஆழம் உடையதாகவும், ஆக்கம் தருபவையாகவும் எம் வாழ் வின் ஏற்றத்திற்கு ஏணியாகவும் விளங்கின. சொல்லின் அழகை விட, சொல்லிற் பொதிந்துகிடக்கும் பொருளைப் பற்றித்தான் அவ ருடைய சிந்தனை அமைந்திருந்தது. இறுதிக் காலத்தில் அவர் உடல் நலிவுற்றதன் காரணமாக அவரின் வாயிலிருந்து சொற்கள் வருவது கடினமாக இருந்தது. எனினும் அவர் என்ன சொல்லவிரும்புகிறார் என்பதை அறிவதற்குப் பொதுக்கூட்டங் களில் மக்கள் காட்டிய ஆர்வம், அவர் வாயிலிருந்துவரும் ஒவ்வொரு சொல்லையும் தமிழ்மக்கள் செவிமடுத்த பாங்கு அவர் எவ்வளவு தூரம் மக்களின் நம்பிக்கைக் குரிய தலைவராக விளங்கினார் என்பதை உலகிற்குப் பறைசாற்றுகின்ற நிகழ்ச்சியாக விளங்கியது.

## வாழ்வளித்த வழிகாட்டி

ஒரு உண்மைத் தலைவனின் பண்புக்கேற்ப மக்களால் வழிநடத் தப்படாமல், மக்களை வழிநடத்துகின்ற ஒரு வழிகாட்டியாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் எத்தகைய முக்கிய முடிவுகளை எடுத்த போதும், மக்களுடைய நாடிப்பிடிப்பை உணர்ந்துபார்க்க அவர் என்றும் மறந்ததில்லை.

## சாதிவெறியைச் சாகடித்த சான்றோன்

தனது நாற்பது வயதைத் தாண்டிய நிலையில்தான் அவர் அரசியலில் காலடி எடுத்துவைத்தார். குறிப்பாகச் சொல்லின் 1947ல் தான் அவர் அரசியலுக்கு வந்தார். ஏற்ற ஒரு தலைவன் தமக்கில்லையே என்று தமிழினம் ஏங்கிக்கிடந்த வேளை " இதோ நான் இருகிறேன், என்னை நம்புங்கள்" என்று கூறித் தமிழ் மக்க ளை வழிநடத்திய போது தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட தென்பினை யும், முகமலர்ச்சியினையும் எளிதிற் சொற்களால் விளக்க முடியாது. அதனைப் பட்டுணர்ந்தோர்தான் அதன் பாங்கினையும் அறிவர்.

அவருடைய தொடக்ககால அரசியல் வாழ்வு சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்பதற்கு முன்பு, தமிழ்மக்களின் படிந்திருந்த மாசினை அகற்றவேண்டிய பொறுப்பு அவர்மீது சுமத்தப்பட்டது. **"உத்தியோகம் புருஷ லட்சணம்" கோழி மேய்த்தாலும் கோர்ணமெந்தில் மேய்க்க வேணும்"** என்று பேசுகின்ற அளவிற்கு அனைத்திற்கும் அரசுத் தொழிலையே நம்பியிருந்த காலமது. அத்துடன் நானுண்டு, என் மனைவியுண்டு, என் பிள்ளைகளுண்டு என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்த தமிழ் மக்களைத் தன்னையும் தன் குடும்பத்தையும் விஞ்சுகின்ற அளவிற்குத், தமது மொழி, தமது பண்பாடு, தமது நாகரீகம், தமது வாழ்வியல் முறை, தமது நாடு ஆகியவை பற்றியும் சிந்திக்கவேண்டும் என்ற உணர்வினைத் தூண்டியவர் நமது செல்வா அவர்கள்.

இன்று தமிழினத்திடம் இவை இயல்பாய் அமைந்துள்ள பண்புகள், ஆனால் அன்று இத்தகைய சூழ்நிலை இருக்கவில்லை என்பதை நாம் நன்கு உணருதல் வேண்டும். அக்காலத்தில் தமிழினத்தைச் சாகடிக்கும் சாதிவெறிக்கும் தமிழ்மக்கள் ஆட்பட்டிருந்தனர். தமிழினத்தின் சாபக்கேடாய் விளங்கிய சாதிவெறியை முற்றாகச் சாகடித்த பெருமை இச்சான்றோனையே சாரும்.

## ஒற்றுமையை உருவாக்கிய ஒப்பற்ற தலைவன்

தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவர். தமிழ்மக்களில் பெரும்பான்மையோர் சிவநெறி சார்ந்தோர். எனினும் உணர்வுக்கு அப்பாற் பட்ட நிலையில் இன உணர்வால் உந்தப் பட்டு அவரைத் தம் தலை-வராகத் தமிழினம் ஏற்றுக் கொண்டது. இது அவருடைய பெருந்தன்மைக்கும், தமிழினத்தின் பரந்த நோக்கிற்கும் சான்றாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தான். வன்னியன், மட்டக்களப்பான் திருகோணமலையான், மலையகத் தமிழன் என்று மாநிலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் வேறுபட்டு, மாறுபட்டு கூறுபட்டுக் கிடந்த தமிழனை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்த பெருமையும் நம் தந்தை செல்வாவையே சாரும். ஓர் இனத்தின் விடுதலைக்கு அவ்வினத்திடம் காணப்படுகின்ற ஒற்றுமை உணர்வுதான் உயிர்நாடி என்பதை உணர்ந்து அனைத்து வழிகளிலும் முயற்சித்துத் தமிழனை ஒன்றுபடுத்திய பெருமையும் அவரையே சாரும். காரணம் அத்தகைய ஆளுமை அவரிடம் குடிகொண்டிருந்தது.

## இணைப்பாட்சியில் இனியவாழ்வு காண சிங்களவர் மறுத்தனர்

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற நாட்டில் - ஒன்றுக்கு மேற்பட்ட மொழி, பண்பாடு, நாகரீகம், வாழ்வியல் முறை நிலவு கின்ற நாட்டில் ஒற்றையாட்சி உதவாது. அது எண்ணிக்கை ஏற்றமுள்ள ஒரு இனத்தின் பேரினவாதத்துக்குத்தான் வழி வகுக்கும் என்பதனை நன்கு உணர்ந்து இலங்கையில் சிங்களவர் களும், செந்தமிழர்களும் தமக்குள் முட்டிமோதாது ஒவ்வொரு இனத்தின் தனித்துவத்தையும், பேணி, அதேவேளையில் அந் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்ட உகந்த ஒரே வழி இணைப்பாட்சிதான் என்பதை உணர்ந்து,........

" **இணைப்பாட்சியில் இனியவாழ்வு காண்போம்**!
தமிழரின் தனித்துவத்தை நிலைநாட்டுவோம்
இலங்கைத்தீவில் ஒற்றுமையைப் பேணுவோம்"
------- என்று ஓங்கிக் குரல் எழுப்பினார்.

ஆனால் இணைப்பாட்சிமுறை ஒரு நாட்டில் வெற்றிபெறவேண்டு மென்றால் அங்கு வாழும் இனங்களிற்கிடையே மற்றைய இனங்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைக்கின்ற இயல்பும் இருக்கவேண்டும். இது இல்லாத நிலையில் இணைப்பாட்சித் தத்துவம் என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒரு கோட்பாடாக விளங்க முடியாது. இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என்று குரல் எழுப்பிய போதும், மாநிலத் தன்னாட்சி, பிரதேச சபை, மாவட்ட சபை, அதிகாரங்களைப் பன்முகப்படுத்தல் என்ற கோட் பாட்டின் அடிப் படையில் சிங்களத் தலைவர்களிடத்திலும், சிங்கள மக்களிடையிலும் மனமாற்றத்தைக் கொண்டுவர தந்தை செல்வா பலமுறை முயன்றார்.
இந்த முயற்சிகளின் விளைவாகவே 1957ல் பண்டா - செல்வா ஒப்பந்தம் தோன்றியது. 1965ல் டட்லி - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1970ல் ஸ்ரீமாவோ செல்வா உடன்பாடு உருவாகியது.
ஆனால் மேற்கூறிய ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் எல்லாம் மைகாய்வதற்கு முன்பே சிங்களத் தலைவர்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழித்தெறியப்பட்டதனால்தான், இனிமேல் சிங்கள மக்களோடு கூடிவாழமுடியாது என்ற முடிவிற்குத் தந்தை செல்வா வந்தார்.

19.11. 1976ல் பாராளுமன்றத்தில் உறையாற்றிய தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களின் ஆட்சி பற்றி மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும், வெளிப்படுத்தினார். " இன்று எமதுகட்சி தனிநாடு ஒன்றை அமைப்பதற்குச் செயல்படத் தொடங்குகிறது. "தனிநாடு" காண்பது ஒரு இலேசான விடயமன்று . அது ஒரு வில்லங்கமான விடயம். அது வில்லங்கமானது என்பதை நாம் அறிவோம். ஆனால் சிங்கள மக்களின் அதிகாரத்தில் நின்றும் நம்மை விடுவித்துக் கொள்வதா? அல்லது முற்றாக அழிந்து ஒழிவதா? என்பதுதான் எமக்கு முன்னாலுள்ள ஒரே கேள்வியாகும். என்று மிகவும் உணர்ச்சியாக, தமிழினத்தின் தெளிவான, முடிவான இலச்சியத்தை எடுத்தியம்பினார். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தமது இழந்த உரிமைகளை ஒரு போதும் மீட்டுக்கொள்ள முடியாது. எமது முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் உண்டு.

எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும் படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமையான அரசை மீள அமைக்கவேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

**இந்திய வம்சாவழித் தமிழருக்காகப் போரிட்டவர்.**

எதிர்காலத்தை எண்ணிப்பார்ப்பது (Concept of Futurology) என்ற கோட்பாட்டிற்கு அமையவும், அறிவுடையார் ஆவது அறிவர் என்ற வள்ளுவன் வழியிலும் சிந்தித்துச் செயலாற்றிய நம் செல்வநாயகம் அவர்கள் 1948ம் ஆண்டு, இந்திய வம்சாவழித் தமிழ்மக்களின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறிக்கின்ற வஞ்சகச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் அன்றைய பிரதமர் திரு டீ எஸ் சேனநாயகாவினால் கொண்டுவந்து நிறைவேற்றியபோது இன்று இந்தியவம்சாவழித் தமிழ்மக்களின் கழுத்தில் கத்தி வைக்கப்படுகிறது. நாளை இலங்கைத் தமிழ்மக்களுக்கும் இந்நிலைதான் ஏற்படும். எனவேதான் இலங்கையின் பொருளியல் வளத்துக்கு 65% க்குமேல் வருவாயைப் பெற்றுத்தரும் உழைத்துழைத்து உருக்குலையும், இந்தியவம்சாவழித் தமிழ்மக்களை அரசியல் அநாதைகளாக ஆக்குவதற்கு நான் என்றும் உடந்தையாக இருக்கப்போவதில்லை என்று ஓங்கிக் குரல் எழுப்பியதோடு 1949ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கியபோது இந்தியவம்சாவழித் தமிழ்மக்கள் தாம் இழந்த குடியுரிமையையும் வாக்குரிமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பெற்றுத்தர என் வாழ்நாள் முழுவதும் போராடுவேன் என அறிவித்ததோடல்லாமல் வாழ்வின் இறுதிமூச்சுவரை இந்திய வம்சாவழித் தமிழ்மக்களின் அடிமை வாழ்வை ஒழித்திட எழுப்பிய குரலையோ, நடத்திய போராட்டங்க ளையோ நாம் எளிதில் மறப்பதற்கில்லை, இலங்கையின் தொன்மைக் குடிமக்களுக்கும், பின்வந்த இந்தியவம்சாவழி மக்களுக்கும் இடையே பிரிவையும், பிளவையும் ஏற்படுத்தி ஈழத்து மக்களைப் பூண்டோடு அழிக்கின்ற முறையில், அரசியல்த் தலைவர்கள் சிலர் காலத்திற்குக் காலம் குரல் எழுப்புவது உண்டு.

அவர்கள் எல்லாம் தந்தை செல்வாவின் வாழ்வையும் பணியையும் முழுமையாகப் பயில்வார்களாயின் இத்தகைய தப்புக்கணக்குப் போட்டுத் தமிழ்மக்களை வேறுபடுத்திக் கூறு போட முயலமாட்டார்கள்.

## தாயகத்தை வலியுறுத்திய தலைவன்

ஒரு இனம், மொழி, உரிமை, உட்பட அனைத்து உரிமைகளையும் இழந்தாலும் மீண்டும் வாழ்வு பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், ஒரு இனம் தன் தாயகத்தை தன் வாழ்வகத்தை, தன் பாரம்பரிய பிரதேசத்தைப் பறிகொடுக்குமாயின் அந்த இனத்திற்கு எதிர் காலமே இல்லை. (Land is necessary for the self expression of an ethnic group) ஒரு இனம் தன்னைத்தானே உணர்த்துவதற்கு அதற்கு ஒரு தாயகம் வேண்டும்.

இந்த உண்மையை ஈழத்து மக்களை வழிநடத்திய எந்தத் தலைவரையும் விட ஆணித்தரமாக வலியுறுத்தித் தூங்கிக் கிடந்த ஈழத்தமிழினத்தை விழிப்போடிருக்கச் செய்தபெருமை தந்தை செல்வாவையேசாரும். இலங்கையில் ஒவ்வொருமுறையும் இனப்படுகொலை ஏற்படுகின்றபோது ஈழத்தமிழ் மக்கள் ஓடி ஒதுங்கி வாழ்வுபெறும் நிலப்பரப்பு இலங்கையின் வடக்கு, கிழக்குமாநிலங்களாகும். இந்த நிலப்பரப்பைத்தான் “ தமிழீழம்” என்று அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றுபட்டு ஓங்கிக் குரல் கொடுக்கின்றனர்.
துறைகள் அனைத்திலும் ஈழத்தமிழ்மக்களுக்கு வழிகாட்டிய தந்தை செல்வா 1977ம் ஆண்டு சித்திரை மதம் 26ம் திகதி மறைந்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து 21ஆண்டுகள் உருண்டோடிய பிறகும் ஈழத்தமிழ்மக்களுடைய எதிர்காலம் ஏக்கம் நிறைந்து காணப்படுகிறது. எனினும் அவர் தம் இறுதிக்காலத்தில் கூறி வந்துள்ள அறிவுரைகளை நினைவிற்கொண்டு செயற்படுவதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். இதோ அவர் செப்பிய உறுதி படைத்த மணிமொழிகள்.

1 போர்க்கோலம் வேண்டும்.

தமிழினத்தின் உரிமைப்போராட்டத்தில் இரத்தம் சிந்தியும், சிறையேற்றும், பொருள் நட்டமடைந்தும், உயிர் துறந்தும் இதுவரை வெற்றி கிடைக்கவில்லை, ஆனாலும் வெற்றி கிடைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றே நான் கூற விரும்புகின்றேன்........

கடந்த காலங்களில் பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதி வெற்றி தமிழினத்திற்கே என்பது சந்தேகமறத் தெளிவாகிவிட்டது. இருந்தாலும் பூரணவெற்றி கிடைக்கும்வரை போர்க்கோலமிருந்தேயாக வேண்டும். தோல்வி மனப்பான்மை அறவேகூடாது."

**2. தமிழீழம் பேரம்பேசும் கோரிக்கையல்ல**

" தனிநாட்டுக் கோரிக்கை மாற்றமுடியாத முடிவாகும். இது வெறும் பேரம் பேசுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையல்ல. தனிநாட்டுக் கோரிக்கை என்பது ஒரு புதிய கோரிக்கையல்ல , ஈழத்தில் ஒரு காலத்தில் தமிழர் தனியரசு செலுத்தியிருந்தோம். இழந்த அவ்வரசை மீண்டும் நிலைநாட்ட உறுதி பூண்டு விட்டோம்."

## தமிழீழம் எங்கள் உயிர்மூச்சு

தூய உள்ளத்தில் துணிவோடு எழுந்தருளி இம்மேற்கோளை நாமும் நினைவிற் கொண்டு தமிழீழம் எங்கள் உயிர் மூச்சு " எங்கள் தாயகம் எங்கள் உயிர் மூச்சு" " எங்கள் தாயகம் தமிழீழம் என்று ஓங்கி ஒலித்துத் " தமிழன் வாழவேண்டின்" தமிழன் தன்னை ஆளவேண்டும்" என்ற தாரக மந்திரத்தை எமது உறுதிமொழியாக ஏற்றுச் செயற்படுவோமாக.

(நன்றி: பேர்ளின் ஈழத்தமிழர் நலன்புரிக்கழகம் 1998 இல் அவளியிட்ட யதார்த்தம் தநதை செல்வா நூற்றாண்டு மலரில் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரத் தமிழீழத்தை மீள நிறுவுவதே ஒரே தீர்வு!

-தந்தை செல்வா,1975இல் தமிழீழமக்களுக்கும் சர்வதேச உலகுக்கும் விடுத்த பிரகடனம்-

எஸ்.யே.பற்றிமாகரன் பி.ஏ Special Diploma( University of Oxford)

தமிழீழ மக்கள் 31-03-1997ல் அமரர் தந்தை செல்வாவின் நூறாவது பிறந்தநாளைத் தேசநேசத்துடன் நினைவு கூர்கின்றனர். இந்நேரத்தில் தந்தை செல்வநாயகம் 1975 தை மாதத்தில் காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவையடுத்து தமிழீழத் தேச மக்களுக்கும் சர்வதேச உலகுக்கும் விடுத்த உத்தியோக பூர்வ மான பிரகடனத்தை அதன் முக்கியத்துவம் கருதி முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் அப்படியே கீழே தருகின் றேன். 1972ஆம் ஆண்டு சிங்கள பௌத்த குடியரசு அரசியல மைப்பைத் தமிழர்களின் ஜனநாயக ரீதியான ஒற்றையாட்சிப் பங்களிப்புக்குப் பிரித்தானிய அரசு வழங்கிய நிபந்தனை-களை உள்ளடக்கிய சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்தி, இலங்கைப் பாராளுமன்றத்தின் தொடர்ச்சியையும் அறுத்து நவரங்கலாவ-ில் சர்வாதிகார முறையில் தன்னிச்சையாக அன்றைய (இன்றைய) சிறி-லங்காப்பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரகடனப்படுத்தியதை எதிர்த்துத் தமிழ் மக்களின் தலைவரான தந்தை செல்வநாயகம் தனது காங்கேசன்துறை பாராளுமன்ற பிரதிநிதித்துவதை இராஜினாமா செய்தார். இதன் மூலம் தமிழ் மக்கள் அனைவரும் சிங்கள பௌத்த பேரினவாதச் சர்வாதிகார குடியரசு அமைப்பை நிராகரிக்கின்றார்கள் என்பதற் கான நேரடி வாக்கு விருப்பைத் தெரிவிக்கும் தீர்மானத் தேர்த லாக காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடாத்தும்படி தந்தை செல்வா சிங்கள அரசிற்குப் பகிரங்க சவால் விடுத்தார்.

ஆனால், தேர்தலை நடத்தாது ஜனநாயக விரோதமான தனது சர்வாதிகாரப்போக்கை ஆயுத படைபலத்தால் தமிழர்கள் மீதான குறிப்பாக தமிழ் இளைஞர் மீதான ஆக்கிரமிப்பு முயற்சியாக சிறிமாவோ மாற்றினார். இதனால் தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் தமது உயிருக்கும் உடமைக்கும் தமிழீழத் தேசமக்களின் பாதுகாப்புக்காகவும் ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த நிலையில் 1975ஆம் ஆண்டு தை மாதத்தில் காங்கேசன் துறை இடைத்தேர்தல் நடாத்தப்பட்டது. அதில் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதன் பின்னர், தந்தை செல்வநாயகம் முதன்முறையாகத் தமிழீழத் தேசமக்களுக்கு என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்த உத்தியோகபூர்வ பிரகடனமே கீழே தரப்படுகிறது.

"அந்நிய ஆதிக்கத்துக்கு உள்ளாகும் மட்டும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வேறுபட்ட இறைமையுடன் இத்தீவில் வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்ட போது தமது சுதந்திரத்தையும் தாம் மீளப்பெறுவார்கள் என்ற முழு நம்பிக்கையுடனேயே ஈடுபட்டனர் · என்பது ஈண்டு நினைவு கூறப்படவேண்டியதொன்று.

கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக (இந்தக்கூற்று 1975ல் கூறப்பட்டது). எமது அரசியல் உரிமைகளைச் சிங்களவர் களுக்கு சமத்துவமான வகையில் ஐக்கிய இலங்கைக்குக் கீழ் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான ஒவ்வொரு முயற்சியையும் நாம் எடுத்தோம். ஆயினும் துக்ககரமான உண்மை என்னவெனில், தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசுகள் அனைத்தும் சுதந்திரத்தினால் வந்த சக்திகளை எமது அடிப்படை உரிமைகளை மறுத்து எம்மை 'மக்கள்' என்ற நிலையில் இருந்து கீழே தள்ளுவதற்காகவே பயன்படுத்தி வந்தன என்பதே ஆகும். இந்த அரசுகள் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு இயலுமாக இருந்தமைக்கு இறைமை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவாக்கப்பட்டமையே காரணமாக உள்ளது.

நான் எனவே (தமிழீழ) தேசமக்களுக்கும், தேசம் முழுவதற்கும் இத்தேர்தலின் தீர்ப்பானது தமிழர்கள் தம்மிடையே ஏற்கனவே உள்ள சட்டபூர்வமான இறைமையைப் பயன்படுத்தி தமிழீழத் தேச மக்களாக சுதந்திரம் பெற தீர்மானித்து விட்டார்கள் என்ற மக்கள் ஆணையாக அமைகிறது என்பதைப் பிரகடனப்படுத்த விரும்புகிறேன். தமிழர் ஐக்கிய முன்னணி சார்பாக நாம் இந்த மக்கள் ஆணையை முழுமையாக முன்னெடுத்துச் செல்வோம் என்னும் உறுதிமொழியை நான் வழங்குகிறேன்'.

On winning the 1975 Kankesanthurai by-election, token plebiscite, S.J.V Chelvanayakam, Leader of the Tamil Eelam nation declared:

Through out the ages the Sinhalese and Tamils in the country lives as distinct sovereign people till they were brought under foreign domination. It should be remembered that the Tamils were in the vanguard of the struggle for independence in the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

full confidence that they also will regain their freedom. We have for the last 25 years made very effort to secure our political rights on the basis of equality with the Sinhalese in a united Ceylon. It is regrettable fact that successive Sinhalese governments have use the power that flows from independence to deny us our fundamental rights and reduced us to the position of a subject people. These governments have been able to do so only by using against the Tamils the sovereignty common to the Sinhalese and the Tamils. I wish to announce to my people and to the country that I consider the verdict at this election as a mandate that the Tamil Eelam nation should exercise the sovereignty already vested in the Tamil people and become free. On behalf of the Tamil United Front, I give you my solemn assurance we will carry out this mandate.

தந்தை செல்வநாயகம் சிறீலங்கா பாராளுமன்றத்திலும் இதே கருத்தை வலியுறுத்தி சிறீலங்கா பாராளுமன்றத்திற்கு தமிழீழ மக்களை ஆளும் உரிமை இல்லை என்பதை உலகுக்கு தெளிவுபடுத்தி தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை சட்டபூர்வமாக மாற்றினார். இந்தச் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தின் அடிப்படையில் 1976 வைகாசி 14ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வநாயகம் தலைமையில் கூடிய தமிழர் ஐக்கிய முன்னணி மாநாடு 'தமிழீழத் தேசப்பிரகடனத்தை' பிரகடனப்படுத்தி தமிழர் ஐக்கிய முன்னணியி னை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக மாற்றியமைத்தக் கொண்டது இந்த தமிழீழத் தேசப்பிரகடனத்திற் கான மக்கள் குடியொப்பமாகப் பொதுத் தேர்தலை எதிர் கொள்வது என தந்தை செல்வா முடிவெடுத்து இருந்தார். ஆயினும், 1977 சித்திரை 26இல் தந்தை செல்வாநாயகம் அமரரானார். இருந்த போதிலும் 1977 வைகாசி 22 பொதுத் தேர்தல் தமிழீழத் தேசப்பிரகடனத்துக்கான குடியொப்பமாக அறிவிக்கப் பட்டு தமிழீழ மக்கள் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் 'தமிழீழத் தேசமே' தமது முடிந்த முடிவு என உறுதிபாகத் தீர்மானித்தனர்.

இந்த மக்கள் ஆணையை சிறீலங்கா அரசு ஏற்க மறுத்து, படைபல ஆக்கிரமிப்பு மூலம் தமிழீழ மக்களை இனஅழிப்புச்செய்தாவது தனது அரசியல் தீர்வுகளைத் திணிக்க முற்படுவதே இன்றைய இலங்கைத் தீவின் வரலாறாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக 1974ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சாசனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 'சுதந்திரப் போராட்ட வீரர்கள்' எனும் சகல தகுதியுடனும் தமிழ் மக்களின் நியாயமானதும் தவிர்க்க முடியாததுமான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை தந்தை செல்வாவின் கனவை நனவாக்கும் உரிமையுடன் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் ஒரே இயக்கமாக, தமிழீழ மக்களின் உண்மை அமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கடமையைச் செய்து வருகின்றனர்.

கடைமை நிறைவேறி தமிழீழத் தேசம் மலரும் பொன் நாளில் தான் தந்தை செல்வாவின் தேசிய ஆன்மா உண்மையான அமைதியைப் பெறும். எனவே தந்தை செல்வாவின் கனவு நனவாக உழைக்க வேண்டிய கடைமை எம் அனைவருக்கும் உண்டு என்பதையே தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழா எமக்கு நினைவூட்டி நிற்கிறது.

தந்தை செல்வா தமிழீழ வரவாற்றின் ஒரு காலத்தின் சின்னம். அவரைப்பற்றியோ அவரது பணிகளைப் பற்றியோ ஆராய்வது என்பது மகத்தான ஒன்று. அதற்கான காலம் வசதி என்பன சுதந்திரத் தமிழீழத்திலேயே முழுமை பெற முடியும். எனவே இந்த நூற்றாண்டு நினைவுக்கட்டுரையில் தந்தை செல்வா எனும் பெருந்தலைவனின் பங்களிப்பினை ஆராய்வது தந்தை செல்வா தனது அனுபவத்தினாலும் யதார்த்தத்தினாலும் வெளிப்படுத்திய ஒரே தீர்வான தமிழீழத் தேசத்தை உருவாக்குதல் எனும் மிக உன்னதமான பணிக்கு ஒவ்வொருவரும் நம்மைத் தயார் படுத்துவதும் பங்களிப்பதுவுமே தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவுக்கு நாம் அளிக்கக்கூடிய மிக உகந்த சாத்தியமான பரிசாகும் என்பதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

வாழ்க! வளர்க! தந்தை செல்வாவின் சிந்தனைகள்: மலரட்டும் சுதந்திரத்தமிழீழத் தேசமென வாழ்த்துகிறேன்.

(நன்றி-
தாயத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள்-26-03-97ல் வெளியானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு சா, ஜே. வே. செல்வநாயகம் கே. ஸி. எம். பி. ஆற்றிய பேருரை

(1வது மகாநாடு 14-4-1951- திருகோணமலை)

வரவேற்புக்கழகத்தலைவருக்கும், அக்கழக அங்கத்தினருக்கும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அங்கத்தவர் களுக்கும், இங்கு கூடியிருக்கும் மற்றெல்லோருக்கும் என் தாழ்மையான வணக்கம்.

இன்னும் ஓர் ஆண்டிற்கு இக்கட்சியின் தலைமைப் பாரத்தைப் பொறுப்பேற்கும்படி எமது நிர்வாக சபை என்னை நியமித்திருக்கின்றது. தலைவரை மாற்றி வைக்கும்படி நான் வேண்டியிருந்தேன். ஏனெனில், திரும்பவும் ஒருவரையே தலைமைப்பதவியில் வைப்பது எங்கள் இயக்கத்துக்கு இணங்காதது. இன்னும், எங்கள் ஊழியர்களுக்குள் தலைமைப்பொறுப்பை எடுத்து நடத்துவதற்குத் தகுதியுள்ள பெரியார்கள் உளர் எனினும் கட்சியின் பராயம் இளமைப்பராயமானதாலும், இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் நிலை மிக மோசமாக இருப்பதனாலும் இன்னுமோர் பொறுப்பை எடுத்து நடத்தும் கட்சித் தீர்மானத்திற்கு மறுப்புச் சொல்ல முடியாதவனாக உங்கள் முன் நிற்கின்றேன். பொருளா தாரத்தையோ அல்லது பலத்தையோ நம்பி நான் நிற்கவில்லை. எங்கள் நீதியையும், எம்மக்களின் பலத்தையும் உண்மையான கொள்கைப் பதிலையும் எம் இனம் தன் உரிமையைப் பெறாது உழைக்கும் என்ற நம்பிக்கையுங் கொண்டே இப்பணியை ஆற்ற தனிக்கிறேன். என்மேல் வைத்த நம்பிக்கைக்காக நன்றி கூறுகின்றேன். இதன்படி தவறாமல் நடக்க இறைவன் அருள்புரிவானாக!

சரித்திரச் சிறப்பு மிகுந்த திரிகோணமலையில் இம்மாநாடு நடப்பது, தமிழ் பேசும் இனம் மகிழ்வதற்கு ஒரு காரணமாகும். நீர்வளம், நிலவளம் எல்லாம் நிறைந்த இப்பூமியில், தமிழ் பேசும் இனம் பல நூற்றாண்டுகளாகச் செழிப்பாக வாழ்ந்து வந்திருக்கிறது. அப்படிப்பட்ட பிரதேசத்தில் தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளை மீட்கும் இயக்கம் நடைபெறுவது மிகத்தகும். எல்லா வளங்களும் இருந்தும், மக்கள் தமக்குரிய மனுசீகப் பெருமையுடன் மக்களாய் வாழாவிடின், என்ன நலம்? திரிகோணமலையிலிருக்கும் தமிழ் பேசும் மக்களே, எங்கள் முன்னோரின் மகிமையைக் காப்பாற்றுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதைப் பெருமையுடன் கூறுகின்றேன். தமிழ் இனத்தைக் காப்பதற்கு, இங்கிருக் கும் ஆர்வத்தை நான் மெச்சுகின்றேன். திரிகோணமலை வாலிபரின் வீரத்திற்கும் தியாகத்திற்கும் நான் வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துகின்றேன். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள், அரசியலில் பூரண உரிமை பெற்று வாழ்வதற்கு இருக்கும் ஒரேயொரு வழியாகிய தமிழரசு கோரும் இயக்கம் இலங்கையில் எப்பகுதியிலும் வேரூன்றி இருப்பதிலும் பார்க்க, ஆழமாகவும் ஸ்திரமாகவும் மூலவேரும் பக்கவேரும் விட்டெறிந்து, நிலையாக இத்திரிகோணமலையிற்றான் நிலைத்திருக்கிறது. ஆகவே, இம்மாநாடு இங்கே நடப்பது தகும்.

இன்னும், இம்மகாநாடு இங்கே நடப்பதற்குப் பல காரணங்கள் உள. தமிழ் பேசும் இலங்கையினர் வாழும் இலங்கைப் படத்தைப் பார்க்கும் போது, அப்பிரதேசத்தின் சரிமத்தியான இடம் இத்திரிகோணமலையாக இருப்பதைக் காணலாம். மேலும் இப்பட்டணம் அமைந்திருக்கும் கிழக்கு மாகாணம் ஆபத்தான நிலையில் இருக்கிறது. தமிழ்பேசும் மக்களின் சொந்த நாடாக இருந்து வந்த இம்மாகாணத்தை, இப்போது நடக்கும் அரசாங்கம் தமிழ் மாகாணம் அல்லாமல் ஆக்கிவிட நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகின்றது. நம்மை எதிர்நோக்கும் இம் மோசத்திலிருந்து மீளுவதற்கு, கிழக்கு மாகாணத் தமிழ்பேசும் மக்கள் எழுச்சியுற வேண்டும். அவர்களுடன், இலங்கையின் ஏனைய தமிழ் மக்கள் ஒன்று சேர வேண்டும். ஆம்முயற்சியில் ஒன்றே - இன்று நடக்கும் வைபவமாகும்.

சுயாட்சித் தமிழ் மாகாணம் இலங்கையில் நிறுவுவதே, தமிழினத்தின் விமோசனத்திற்கான ஒரே வழி என்ற காட்சியைக் கண்டவர்கள் பலர். இறந்த காலத்தில், இத் தீர்க்கதரிசிகள் தோன்றி மறைந்தனர். இதனால், அரசியலில் நாம் இன்று இந்த நிலபரத்தில் இருக்கின்றோம். இன்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் இக்கேள்வி எழும்பியிருந்தால், ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டுப் போகின்ற காலத்திலேயே 'சுயாட்சியுள்ள தமிழ்நாடு' இலங்கையிலே உண்டாகியிருக்கும் என்பதை, மக்களிற்பலர் இன்று ஒப்புக்கொள்கிறார்கள். சுயாட்சித்தமிழ்நாட்டை உண்டாக்கும் கோரிக்கை ஒரு இயக்கமாகத் தொடங்கி இப்போது இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இதைத் தன் கொள்கையும் இலக்குமாக எமது கட்சி தொடங்கி மாதங்கள் பதினாறு இச்சிறிய காலத்தில், மக்களின் மனதில் அதிசயமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இனிமேல் எம் இனத்திற்கு வழி ஒன்றுமே இல்லையென்ற தோல்வி மனமும் தூங்கு முகமுமாயும் இருந்தோர் - விடுதலை வழியொன்றைக் கண்டோமென்று விழித்துப் பார்க்கிறார்கள். எம் கோரிக்கைதானோ உண்மையான வழியென்று ஐயுற்றவர்கள் பலரின் சந்தேகம் மாறி வருகின்றது. சுயநலம் கருதி எங்கள் கட்சியையும் இயக்கத்தையும் அழிக்கவென்று தோன்றியவர்கள், தோல்வி கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்து நிற்கிறார்கள். நாடெங்கும் எங்களுக்கு ஆதரவு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றது.

இதுநிற்க, கொழும்பிலே இருக்கும் சிங்கள அரசாங்கத்தின் நாளாந்த நடவடிக்கைகள், தமிழ்பேசும் இனத்தை இலங்கையிலிருந்து முற்றாக அழிக்கும் முகமாகவே நடைபெற்று வருகின்றன.

பூர்வீக காலம் தொடங்கி, இந்நாட்டில் தமிழ் இனமும் சிங்கள இனமும் வாழ்ந்து வருகின்றன. ஆகவே, இலங்கையின் உரிமைக்காரர்கள் - இரண்டு இனத்தவர் களுமாவார். பல தருணங்களில், வெளியே இருந்து வந்து இலங்கையில் குடியேறிய வேறு குழுவினர் சிங்கள இனத்தோடு சேர்ந்து சிங்களவராயினர். அம்பலாங் கொடை பலப்பிட்டியாப்பகுதியில் வசிக்கும் சலாகம வகுப்பினர் - ஒல்லாந்தர் காலத்தில் தென் இந்தியாவ-ில் இருந்து வந்து குடியேறிய மக்கள் இவர்கள் நிரந்தர சிங்கள மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தனர். இதிற் பிழை-யொன்றுமில்லை. ஒரு தேசத்தின் நிரந்தர வகுப்பினரோடு வந்தேறுகுடிகள் சேர்ந்து நிரந்தர மக்களின் தொகையைப் பெருக்குவது சகஜம். அதுபோல, இலங்கையில் வந்து குடியேறும் மறு குழுவினர்கள், இங்கே நிரந்தரமாய் வாழும் தமிழ்-முஸ்லீம் மக்களோடு சேர்ந்து அவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதும் நியாயமானதே. ஆதற்குத் தடையாக விருப்பது, இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குப் பாதகமானது. இலங்கைக்கு வந்து குடியேறும் குழுவினர், இங்கிருக்கும் தமிழ் பேசும் மக்களோடு ஒன்றாவதற்கு, அரசாங்கம் எதிராயிருக்கும் பட்சத்தில். இலங்கைவாழ் நிரந்தரத் தமிழ்பேசும் இனத்திற்கு இலங்கை உரிமையற்றது என்பது கருத்து.

இவ்விடயத்தில் நடப்பது என்னவென்று ஆராய்வோம். கடந்த ஒரு நூற்றாண்டில் இலங்கையில் சுமார் 7, 8 லட்சம் தமிழ் மக்கள் வந்து குடியேறினார்கள். சர்வ தேச அரசியல் நீதியின்படி இந்த 7, 8 லட்சம் தமிழ் மக்கள் இங்கு நிரந்தரமாய் இருக்கும் தமிழ் மக்களோடு ஒன்று கூடி வாழ்வதற்கு உரிமையுண்டு. சிங்கள அரசாங்கம் இதற்கு முழு விரோதமான சட்டங்களையும் நடைமுறைகளையும் நடாத்தி வருகிறது. சிங்கள ஆட்சி உற்பத்தியான 1947ஆம் ஆண்டின்பின், இந்த 7, 8 லட்சம் மலைநாட்டுத் தமிழ்மக்களின் பிரஜா உரிமை பறிபோகச் சட்டங்கள் ஏற்பட்டன. இச்சட்டங்களில் முதலாவதை, ஜனப்பிரதிநிதிகள் சபையில் வாதிக்கும் நேரத்தில் நான் கூறினேன். குடியேறிய இந்தியத்தமிழ் மக்களுக்கல்ல நிரந்தரமாய் வாழும் இலங்கைத் தமிழ்மக்களாகிய எங்களுக்கே இந்த அடி. இன்று அவர்க ளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை எங்களுக்கு.
இப்படிப்பட்ட எத்தனையோ எச்சரிக்கைகளைக் கவனியாது. பல தமிழ்ப்பிரதிநிதிகளும் முஸ்லிம் பிரதிநிதிகளும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்த சிங்கள அரசாங்கத்தின் கொடிய சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்கள். நாம் கூறிய தீர்க்கதரிசன வாக்குப்போல இன்று கல்லோயாவின் கீழ் கல்முனைப்பகுதியில் முஸ்லிம் தமிழ் மக்களுக்கு அடி விழுகின்றது. இது நிற்க இந்த ஏழு எட்டு லட்சம் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிபோனதுடன் நிற்கவில்லை. இன்று அவர்களின் வாக்குரிமையும் பறிபோய் விட்டது. மத்திய, ஊவா மாகாணங்களில் தற்போது தயாரித்த வாக்குரிமை இடாப்புகளில், மலைநாட்டுத் தமிழ் முஸ்லிம் மக்களின் பெயர்களை-யெல்லாம் அகற்றப்பட்டுள்ளன. வரப்போகும் தேர்தலில் தற்போது மத்திய ஊவா மாகாணங்களிலிருந்து ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு வந்திருக்கும் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் எட்டுப்பேரில் ஒருவரும் தெரிந்தெடுக்கப்பட மாட்டார்கள். இதுவா ஜனநாயகம்? இதுவா அரசாங்க நீதி?

ஏழு எட்டு லட்சம் தமிழ் பேசும் மக்கள் அரசியிலில் பங்கு பற்றுவதற்கு வழியில்லை. இதுவுமின்றி. இப்பிரிவினருக்குக் கல்வி வசதியில்லை. தம்மைச் சற்றிலுமிருக்கும் கிராமத்திற் குடியேறுவதற்கு உரிமையில்லை. இன்னும் பல இடையூறுகளுக்குட்பட்டு வாழும் இம்மக்கள் உண்மையாய் அரசியல் அனா
தைகள். அவர்களில் ஒருவர் சிங்களப்பெயர் பூண்டு சிங்களம் படித்து, அவ்வினத்தோடு சேரக்கூடுமானால், அவருக்குப்பிரஜா உரிமை, வாக்குரிமை, குடியேறம் உரிமையோடு சேர்ந்த – பூரண உரிமைகளெ-ளல்லாம் கிடைக்கும். இதன் கருத்தை ஆராய்ந்து பாருங்கள்! நம்மை ஆளும் சிங்கள அரசாங்கத்தில் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு உரிமையில்லை. அவ்வுரிமை இருந்தால், வந்தேறு குடிகள் அவர்களோடு ஒன்றுகூட முடியும். எதற்காக இப்படியெல்லாம் அரசாங்கம் செய்கிறது? தமிழ் இனத்தின் அரசியற் பலத்தைக் குறைப்பதற்காகவல்லவா? அவர்களின் எண்ணிக்கையை அருகச் செய்வதற்காகவல்லவா? எம்மினம் இப்படி அழிந்து போவதற்கு மாற்று மருந்து உண்டா? இல்லையா? இதுதான் இப்படி அழிந்து போவதற்கு அது தான் கேள்வி, மருந்து இருந்தால் அதை எடுத்துக் கையாளாமல் விடுவோமா?

அரசியற்றுறையில் ஓர் இனம் அழியாமலிருப்பதற்குப் பல ஏதுக்கள் தேவை. இவற்றுள் ஒன்று அந்த இனத்தின் எண்ணத்தொகை குன்றாமலிருப்பது, இன்னுமொன்று அந்த இனம் வசிக்கும் பிரதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிபோகாமலிருப்பது, தமிழினத்தின் எண்ணிக்கையை அரசாங்கம் எவ்விதம் தாக்குகிறதென்று பார்த்தீர்கள். அத்துடன் நிற்காது, இவ்வரசாங்கம் தமிழ் பேசும் இனத்தின் உரிமைப்பிரதேசத்திலும் கைவைக்கின்றது. கல்லோயாவின் கீழ் நீர்ப்பாய்ச்சும் நிலம், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்த பிரதேசம்.

இப்பிரதேசத்தில் அரசாங்கம் தன் பணத்தையும், பலத்தையும் ஆதிக்கத்தையும் உபயோகித்துச் சிங்கள மக்களைக் குடியேற்றுகின்றது. தற்சமயம் முஸ்லீம் தொகுதியாயிருக்கும் கல்முனைத்தொகுதி சீக்கிரத்தில் முஸ்லீம் தொகுதியில்லாது சிங்களத்தொகுதியாக மாறிப்போகுமோ என்று முஸ்லீம் பிரதிநிதிகளே பயப்படுகிறார்கள். மத்திய பகுதித் தமிழர்களைத் தாக்கும்போது அரசாங்கத்துக்கு உதவியாய் நின்ற கிழக்கு மாகாணத்துப் பிரதிநிதிகள், அதே அரசாங்கத்துக்குத் தம் மக்கள் இரையாவதைப் பார்த்து நிற்கும் நாள் - இவ்வளவு சீக்கிரத்தில் வந்து விட்டது.

இனத்தைக் காப்பதற்காகச் சமஷ்டி அரசாங்கம் வகுக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டில் தமிழ் - முஸ்லீம் மக்கள் சுயாதீனமாய் வாழவேண்டுமானால், இப்போது நடக்கும் ஒற்றை ஆட்சி ஒழியவேண்டும். சமஷ்டி ஏற்பட வேண்டும்.

அடுத்தது, கனடாவை எடுத்துப் பார்ப்போம். அங்கு இரண்டு மொழிவாரி இனங்கள் வசிக்கின்றன. ஆங்கிலேயரும் பிரெஞ்சு பேசுபவர்களும் 1840ம் ஆண்டில் கனடா தேசத்துக்குச் சுயாதீனம் கொடுத்த போது, முழுத்தேசத்தையும் ஒரு ஒற்றை ஆட்சியின் கீழ் அமைத்தார்கள். சிறுபான்மையானோராய் அங்கிருந்த பிரெஞ்சு மக்களின் சுயாதீனத்தை இவ்வாட்சி பாதித்தது. அவர்கள் கிளர்ச்சி பண்ணினார்கள். 1867ம் ஆண்டு ஒற்றை ஆட்சி சமஷ்டியாக மாறியது. அதன் பேறாக, பிரெஞ்சு மக்கள் தாம் வாழும் மாகாணத்தில் உள்நாட்டுச் சுயாதீனமடைந்தார்கள்.

ஒன்றிற்கு மேற்பட்ட பல இனங்கள் வாழும் நாடுகளுக்கு சமஷ்டியே முறையான அரசாங்கமென்று அநேக உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். நம் அயல்நாடாகிய இந்தியாவில் சமஷ்டியே நிறுவியிருக்கின்றார்கள். அதிருக்க, சமஷ்டியில்லாத சில நாடுகளில் சிறுபான்மைக்குழுவினர்கள் தம் இனத்தின் சுயாதீனத்துக்காக கிளர்ச்சி பண்ணுகிறார்கள். பெரிய பிரித்தானியாவில் ஆங்கிலேயரும் ஸ்கொச் மக்களும் ஒற்றை ஆட்சியின் கீழ் மூன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஸ்கொச் மக்கள் தம் மொழியை இழந்த பின்னும், தம் மாகாண சுயாட்சியைக் கோரி நிற்கிறார்கள். நாமாவது - எங்கள் மொழி அழியுமுன் நம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாக!

ஒற்றையாட்சியால் நம் இனத்திற்கு வரும் அழிவைப் பார்த்தீர்கள். இன்னும் ஒன்றின் மேற் பல இனங்கள் வசிக்கும் நாடுகளில் நடக்கும் அரசாங்க முறையைப் பற்றிக் கேட்டீர்கள். இனி, எம் இனம் தப்பிப் பிழைப்பதற்கு வழி காட்டவா வேண்டும்?

வழி இரண்டு உண்டு. ஒன்று தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் பிரதேசம் முற்றாய்ப் பிரிந்து.தனி அரசாங்கம் நடைபெறுவது. இதனால், இந்தியா பாகிஸ்தான் பிரிந்தது போல, இலங்கை இரண்டாகப் பிளக்கப்படும். இது சுடும் மருந்து: இதை நாம் கேட்கவில்லை.

அடுத்தது, சமஷ்டி அமைப்பில் - தமிழ் பேசும் பிரதேசம் - மாகாண சுயாட்சி கொண்டு வாழுவது, இதையே நாம் நாடி நிற்கிறோம். நம் கேள்வி அரசியல் நீதிக்குச் சம்பூரணமாய் இயைந்தது. இதுவே நிறைவான ஜனநாயக முறை ஜனநாயகமென்றால் - பொது மக்களின் ஆளுகை. மக்களின் ஒவ்வொரு குழுவினருக்கும் ஆளுகையிற் சரிபங்கு இருக்க வேண்டும். இரு மொழிவாரி இனங்கள் வசிக்கும் இந்நாட்டில், இரு இனங்களுக்கும் சம உரிமை உண்டாக வேண்டுமானால், ஒவ்வொரு இனத்திற்கும் மாகாண சுயாட்சி கிடைக்க வேண்டும். அப்போது பெரிய இனம் சிறிய இனத்தைத் தீண்ட முடியாது.

சமஷ்டி அரசியல் நடக்கும் முறைகளைப் பற்றி அரசியல் நூல்கள் துலாம்பரமாய்க் காட்டுகின்றன. தமிழ் மாகாண அரசாங்கத்திற்கு தன் உள்நாட்டு விசயங்களில் முழு ஆதிக்கம் இருக்கும். சுய ஆட்சி மாகாணங்களை இணைப்பதற்கு ஒரு மத்திய அரசாங்கமிருக்கும். பொதுவாய் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் அமைக்கப்படும் விசயங்களால் பாதுகாப்பு, போக்குவரத்து, அன்னிய தேச விவகாரங்கள், நாணயம் உண்டாக்குதல் முதலியவை. சுய ஆட்சி மாகாணங் களுக்குரியவை கிருஷிகம், நீர்ப்பாய்ச்சல், குளங்கள், சுகாதாரம், கல்வி ஆகியன இவ்வமைப்பின்படி வட கிழக்கு மாகாணங்களில் கட்டும் குளங்கள், கல்லோ யாத்திட்டம் அங்கு நடக்கும் குடியேற்றத்தினுடைய உழைப்பை குடும்பம் உழைப்பாளிக்கே மட்டும் செலவி டுவதாயின், அதைக்குடும்பமென்று சொல்ல முடியாது.

சரி, இதுபோலவே சமஷ்டியில் மத்திய அரசாங்கமும் மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கங்களும் நடந்து கொள்கின்றன. மிகுதியான சமஷ்டியில் வருமானம் குறைந்த மாகாணங்கள் உண்டு. அதாவது தங்கள் செலவ-ிற்குப் போதுமான வருமானமில்லாத மாகாணங்கள் இவ்விதப் பற்றாக்குறை மாகாணங்கள் ஆஸ்திரேலிய சமஷ்டி கனடாவின் சமஷ்டி முதலிய வேறு சமஷ்டிகளிலும் இருந்து வந்தன. 1947ம் ஆண்டிற்கு முன் நடந்த இந்திய அரசாங்கத்தில் இந்த மாகாணமும் வடமேற்கு எல்லைப்புற மாகாணமும் பற்றாக்குறை மாகாணங்களாக இருந்தன. அம்மாகாணங்களுக்கு மத்திய அரசு பண உதவி புரிந்து வந்தது. இப்படிப் பண உதவி மத்திய அரசாங்கம் புரியாவிடில் தன் செலவைக் கொண்டு நடத்த முடியாத மாகாணத்தை நாட்டிற்கு வெளியே போடுவது போலாகும். அப்படிப் போட ஒரு தேசமும் விரும்பாது.
இலங்கையில் உதிக்கவிருக்கும் தமிழ் மாகாணம் தன் செலவைக்கொண்டு நடத்தப் போதிய வருவாய் இருக்குமென்பது எனது அபிப்பிராயம். அப்படிப் பெரிய வருவாய் இல்லாவிடினும். சமஷ்டி முறையில் மத்திய அரசாங்கம் பண உதவி கொடுத்து இயங்க வேண்டும். இல்லாவிடில் நாடு இரண்டாகப் பிளவு படும். இப்படிப் பிளவுபடுவதைச் சிங்கள மக்கள் ஒரு போதும் விரும்பார்கள். ஓர் உள்நாட்டுச் சுயாட்சி மாகாணமாகப் பிரிதற்கே இவ்வளவு வெறுப்புக் காட்டுபவர்கள் இலங்கை இரண்டாகப் பிளவுபட்டு எம் நாடு சுதந்திரத் தனியரசாவதற்கு ஏற்ற மாதிரி நடந்து கொள்வார்களா?
பொருளாதாரத்தைப் பற்றியோ, தமிழ் மாகாணத்தின வருவாயைப் பற்றியோ நாம் பயப்படத் தேவையில்லை. பயத்துக்கிடமிருந்தாலும், இனமழிவதிலும் பார்க்கச் சுருங்கச் சீவிப்பதே மிக நலம்.

சுயாட்சி மாகாணத்தை நல்லதென்று வைத்துக் கொண்டாலும், அதைப்பெறுவதெப்படி என்று கேட்கிறார்கள் சிலர். நாம் பலமற்ற இனமென்றும் மூன்றாம் பெயரான ஆங்கிலேயரும் போய்விட்டார்கள் என்றும், சிங்களவர்கள் ஒருக்காலும் இணங்கி வரமாட்டார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஒருகாலம் வீரனுக்கு வேசம் போட்டவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்ன வீரம் ! என்ன ஞானம்! என்ன துரதிருஷ்டி!

சுதந்திரம் வேறோருவர் கொடுக்க நாம் பெற்றுக்கொள்ளும் பொருளல்ல. அது சுக்குமல்ல: மிளகுமல்ல: மக்களின் வீரத்தாலும் தியாகத்தாலும் விடாமுயற்சியாலும் மக்கள் அடையும் ஓர் உன்னத நிலைதான் சுதந்திரம். உலக சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால் சுதந்திரப் போராட்டம் நடத்திய எவ்வினமும் பலவீனமான இனமாகவே இருந்தது என்பது புலப்படும். பலங்குறைந்த நேரத்திற்றானே ஓர் இனம் தன் சுதந்திரத்தை இழப்பது? அவ்விதம் இழந்த இனம் தன் பலவீன நிலைமை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப் பாராட்டிக்கொண்டு சுயாதீனப்போரில் இறங்காமல் நிற்குமானால், விடுதலை எப்போ அடையும்? விடுதலையடைந்த ஒவ்வொரு இனத்தின் சரித்திரத்தையும் ஆராய்ந்தால் அவ்வவ்வினம் தம் மனோதிடத்தினாலேயே வெற்றியடைந்தது.

ஐரீஸ் மக்கள் தம்மிலும் பன்மடங்கு பலம் மிகுந்த ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து தம் சுதந்திரத்தைப் பிடுங்கிக்கொண்டார்கள். அம்பும் வில்லுங்கூட ஆயுதமாக இல்லாத இந்தியர் அதே ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து தம் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இந்த இரு தேசங்களின் தலைவர்களும், திரு. பொன்னம்பலம் போலப் பேசியிருந்தால், இவ்வினங்கள் தம் சுதந்திரத் தைப் பெற்றிருக்க முடியுமா?

இவ்விதம் நடப்பது சரித்திற் புதிதல்ல. 1938ல் ஹிட்லர் செக்கோவாக்கியா மேற் படையெடுத்த போது ஹாலந்து தேசம் பக்கத்தில் நின்றுதவியது. அடுத்தாண்டில் அதே ஹிட்லருக்குப் போலந்து இரையானது- கல்லோயாவில் நடக்கும் இவ்வநீதியை எதிர்ப்பவர் யார்? தமிழ் அரசுக்கட்சி ஒன்றே, இவ்வாபத்தை மக்களுக்கு விளக்கிக் காட்டி அரசாங்கத்தின் தப்பான செயலை எதிர்த்து நிற்கின்றது. தமிழ் அரசுக்கட்சியின் கூக்குரலைக் கேட்டு கிருஷீக மந்திரி காரியாலயத்தின் உத்தியோகத்தர் ஒருவர் கொடுத்த மறுமொழி விசித்திரமானது. முதற் குடியேற்றிய முந்நூறு குடி களும், சிங்களக்குடிகள் என்று ஒத்துக்கொண்டார். இக்குடிகள், களங்கட்டியதால் முதற்குடி எழும்பி யவர்களாம். இன்னும் அங்கு குடியேற்ற இருக்கும் 25,000 மக்களுள், 7,500 குடிகளே கிழக்கு மாகாணத்து மக்கள் ஆவார்கள் என்று கூறினார். கல்லோயாப் பிரதேசத்தில், சுமார் 30 வீதம் மாத்திரந்தான் கிழக்கு மாகாணங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. அந்த 30வீதமும் கிழக்கு மாகாணத்தவர் உபயோகப்படுத்து வார்களோ என்பது ஐமிச்சமாகும். இப்படி நடந்தால், கல்முனைப்பகுதி சிங்களப் பிரதேசமாய் மாறுமென்பது என்ன ஐயறவு? இந்த அரசாங்கத்தோடு கிழக்கு மாகாணத்து பிரதிநிதிகள் எல்லோரும் ஒத்துழைக்கின் றார்களாம். எதற்காக? இப்படிப்பட்ட குடியேற்றறத் திற்காகவே நிற்பாட்டுவதற்கு வழிபாடா? இல்லையா, இருந்தால் அதைத் தொடாமல் விடுவோமா?

இது நிற்க கொடிப்பிரச்னை - மொழிப்பிரச்னையில் என்ன நடந்ததென்று சிந்தியுங்கள். 'தேசியக்கொடி' என்று ஒன்று உண்டாக்கியிருக்கிறார்கள். அதில் முஸ்லிம் - தமிழராகிய 20 லட்சம் தமிழ் பேசும் இனத்தவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வெளியே கோடியிலே இடங்கொடுத்தி ருக்கிறார்கள்.

கொடி தான் ஒருபுறமிருக்கட்டும். எமது மொழியின் நிலை ஆபத்தானது. பேச்சளவில் தமிழும் சிங்களமும் அரசாங்க பாசைகள் என்று சொல்லிக்கொள்ளுவார்கள். நடைமுறையிலோ. வரவரச் சிங்களமே அரசாங்க பாசையாகின்றது.

மேற்கூறியபடியும், இன்னும் வேறு பலவிதங்களிலும் எமது உரிமைகள் அழிந்து போவதற்கு அடிப்படையான காரணம் யாது? நம் நாட்டிற்கு வகுத்திருக்கும் அரசியற்றிட்டந்தான்.

ஒரு நாட்டில் வசிக்கும் மக்கள் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களாயின் அந்நாட்டை ஆளுவதற்கு வகுப்பது ஒற்றை ஆட்சி அரசாங்கம். பிரான்ஸ், இத்தாலி, போர்த்துக்கல், இஸ்பானியா முதலிய தேசங்களுக்கு ஒற்றை ஆட்சி அரசியல் ஒத்தது. அங்கங்கிருக்கும் மக்கள் ஒவ்வோர் தனியினத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் எல்லாத் தேசங்களும் தனி ஓரின மக்கள் மாத்திரம் அடங்கியதாய் இருப்பதில்லை. எத்தனையோ தேசங்களில் ஒன்றின் மேல் பல இனங்கள் வசிக்கின்றன. இப்படிப்பட்ட நாடுகளுக்கு ஒற்றை ஆட்சி அரசாங்கம் ஏற்றதன்று . இவற்றிற்கு அரசியல் அனுபவத்தில் கண்ட சிறந்த முறை .இணைப்பு அல்லது சமஷ்டி அரசாங்கம். உலக சரித்திரத்திற் கைகண்ட முறையிது.

சுவிற்சலாந்து தேசத்தில் மூன்று மொழிவாரியினங்கள் இருக்கின்றன. ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியம், சுவிற்சலாந்து இலங்கையிலும் சிறிய நாடு. இலங்கை 25,000 சதுர மைல். சுவிற்சலாந்து 16,000 சதுர மைல். அங்கே நிலவுவது சமஷ்டி அரசாங்கம். அதனால் ஒவ்வொரு இனமும் தான் வாழும் பிரதேசத்தை உள்நாட்டுச் சுயாட்சியில் நடத்துகின்றது. அங்கே நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்டோர் ஜெர்மன் பேசும் மக்கள். அவ்விடத்து. இலங்கையைப் போல் ஒற்றை ஆட்சி நிலவுமாயின் அது அங்கிருக்கும் பெரும்பான்மை யினராகிய ஜெர்மனியரின் ஆட்சியாகிவிடும். இப்படிப்பட்ட ஜெர்மன் ஆதிக்கத்துக்கு அங்கு வசிக்கும் பிரெஞ்சு, இத்தாலிய மக்கள் ஒத்துக்கொடுக்கா ததாலேயே. பின்கூறிய இனத்தின் சுயாதீனச்சட்டம் முதலியவை தமிழரச-னால் நடத்தப்படும். ஆப்போது யாரை அங்கே குடியேற்றவேண்டுமென்று சொல்லிக் காட்டத் தேவையில்லை. அல்லது தமிழ் மாகாணத்தில் அரசாங்க பாசை என்னவாகவிருக்குமென்பதெற்கு யார் மனதிலும் பயத்திற் கிடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜா உரிமையைப் பற்றிப் பலர் கேட்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் நடப்பது சமஷ்டி அரசு அங்கே ஒருவனைப் பிரஜையோ அல்லவோ என்று நியமிப்பது மாகாண அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் அடங்கியது. ஆனதினால் பிரஜா உரிமைச் சட்டங்கள் மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசமாகயிருக்கின்றன. சில மாகாணங்களில் காப்பிரிகளுக்குப் பிரஜா உரிமை இல்லாமலும் அவர்க ளுக்குப் பிரஜா உரிமை இல்லாமலும் வேறு சில மாகாணங்களில் அவ்வினத்தினர்களுக்குப் பிரஜா உரிமை உள்ளதாயும் மாகாண சட்டங்கள் பிறந்திருக் கின்றன. சிங்கள மாகாணத்தில் என்னவாயிருந்த போதிலும் நம் தமிழ் மாகாணத்திலோ இங்கு வந்து குடியேறி எங்களோடு ஒன்றாகியிருக்கும் முஸ்லீம் - தமிழ் மக்களெல்லோர்க்கும் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் இருந்தே தீரும்.

எம் மாகாணத்தின் பொருளாதார நிலைபரம் எப்படியிருக்கும் என்ற கேள்வி கிளம்பியிருக்கின்றது! தனி மாகாணமாக நாம் சீவிக்க முடியாதென்று தலைவர்கள் சிலர் பயமுறுத்துகிறார்கள். தேயிலை இரப்பர் தென்னை எங்கள் நாட்டில் இல்லையாம். இலங்கையிலே தமிழ் அரசாங்கமொன்று பல நூற்றாண்டாக நிலவியிருந்ததென்பதை அவர்கள் மறந்து போனார்கள். அக்காலத்தில் பிரஜைகள் நிறைவாக வாழ்ந்ததுமன்றி தமிழரசர்கள் பிற நாட்டின்மேற் படையெடுத்தும் சென்றார்கள். இவையெல்லாம் நாட்டில் போதிய பொருளாதாரம் பலமின்றேல் நடந்திருக்குமா? ஐரோப்பியராட்சியின் கீழ் அவர்களின் பாராமுகத்தால் தமிழ் மாகாணங்களின் பொருளாதார நிலை குன்றிய தென்பது ஓர் அளவிற்கு உண்மை. எதிர்காலத்தில் அதிகமான விருத்திக்கு வசதியானது நிலவளம் நீர்வளம் நிறைந்ததுமான பூமி இம்மாகாணங்களிற்றான் உண்டு. பெரும்பாலான நிலம் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. தற்கால கிருஷிகத்துக்குத் தேவையானது நீர்வளம் உள்ள சமதரை. இதிற்றான் இயந்திரங்கள் உபயோகிக்க முடியும். இந்த இரகசியத்தை அறிந்த சிங்கள அரசாங்கம் கல்லோயா முதலிய திட்டங்களைத் தொடங்கியிருக்கிறது. கல்லோயாவின் பின் கந்தளாய், அதன்பின் மன்னார்ப்பகுதியில் அருவியாற்றுத்திட்டம். இப்படி இன்னும் அநேக திட்டங்களுக்கு இடமுண்டு. இவை நிறைவேறுங்காலத்தில் எம் தமிழ் மாகாணங்களே தம் தேவைக்கு மேலதிகமான பொருளாதாரமுடையனவாகவிருக்கும். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அபிவிருத்திக்காக வகுத்திருக்கும் கொழும்புத்திட்டத்தின் 59ஆம் பக்கத்தில் எழுதியிருப்பதைப் பாருங்கள். இலங்கையின் குடிசனத்தின் மூன்றில் இரண்டு பகுதியினர் இத்தீவின் மூன்றில் ஒருபகுதியிலும் குறைந்த விஸ்தாரமுள்ள மேற்குப்பாகத்திலேயே வசிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக்குடிசன நெருக்கத்தைக் குறைப்பதற்கு வழி இலங்கையின் கிழக்கு வடமத்திய மாகாணங்களுக்கு அவர்களைக் கொண்டு போய்க் குடியேற்றுவது. மேற்கூறிய இடங்களிலேயே அரசாங்கத் தின் பிரதான-மான நில அபிவிருத்தித் திட்டங்கள் கையாளப்படுகின்றன.

இன்னும், சமஷ்டி அரசாங்கங்களின் வரவு செலவுகளை நடத்தும் ஒழுங்குகளைக் கவனிக்க வேண்டும். உலகமெங்கும் நடக்கும் சமஷ்டிகள் ஒரு குடும்பத்துக்கொப்பானவை. ஒரு குடும்பத்தில் ஒரு சகோதரன் உழைப்பாளியாகவிருப்பான். இன்னொருவன் நோயாளியாகவிருப்பான். இன்னுமோர் பிள்ளை படித்துக் கொண்டிருப்பான். ஐக்கியமான குடும்பமாயிருக்குங்கால் எல்லா வருமானத்தையும் ஒன்று சேர்த்துக் கூடிய செலவு தேவையான பிள்ளைக்கு கூடியதாய்ச் செலவு செய்வது நோயாளிக்கு வருவாய் ஒன்றும் இல்லாதிருந்தபோதும் அவன் சிகிச்சைக்குக் குடும்பப்பணம் அதிகமாகச் செலவழியும். உழைப்பாளியின் அடிமைத்தனத்திலிருக்கும் மக்கள் சுதந்திரத்தை அடைவதற்கு, இரு அம்சங்கள் ஒன்றாக அமைய வேண்டும். ஒன்று, அம்மக்கள் சுயாதீன வேட்கைப் பெருக்கமும் அதற்காகச் செய்யும் முயற்சியும். மற்றது உலக நடவடிக்கைகளால் வந்தேற்படும் சந்தர்ப்பம் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாகச் சுதந்திரப்போர் புரிந்து கொண்டிருந்த இந்தியாவிற்கு இரண்டாவது மகாயுத்தம் முடிவடையுங்காலமே சுதந்திரத்தைதப் பெறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமானது. எமக்கும் சுயாதீனமடைவதற்குச் சந்தர்ப்பம் வந்து சேரும். அச்சமயத்தை வெற்றித்தின மாக்குவதற்கு நாம் முழு ஆயத்தமாயிருக்க வேண்டும். சுதந்திரம் மற்றொருவர் கொடுப்பார் அல்லது வானத்திலிருந்து விழும் என்று காத்திருப்பது தவறு. நாம் அதற்காக உழைப்பவர்களாகவிருக்க வேண்டும்.

முன்னேற்றமும் ஜனநாயகமுமான நடவடிக்கை என்ன? மக்கள் தங்கள் அரசியல் விருப்பங்களை எடுத்துக் காட்டும் தருணம் பொதுத்தேர்தல் காலம். அது உடனடியில் வரும். திரும்பவும் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கோர் முறை வரும். இதில் உங்கள் சுயாட்சிக்காகத் தளராது நின்று போர்புரிபவர்களைத் தெரியுங்கள். உங்கள் கட்சி, வடக்கு கிழக்கு மாகாணங்களின் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் இக்கொள்கைக்காகச் சேவிக்க ஆயத்தமான ஆபேட்சகர்களை நிறுத்திப் போட்டியிடும். அந்நேரம் இவ்விரு மாகாணங்களின் தேர்தல் வட்டாரங்கள் எல்லாம் எம் கட்சி ஆபேட்சகர்களையே தெரிந்து அனுப்பினால், அதுவே இக்கொள்ளகைக்கு முதல் வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதிரித் தெரிந்து அனுப்பப்படும் இக்கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் சட்டம் பாராளுமன்றத்திலும் சர்வதேசமன்றங்களிலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்குச் சுயாட்சி மாகாணம் உண்டாக வேண்டுமென்று கிளர்ச்சி செய்து கொண்டேயிருக்கும். இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் எல்லோரும் சுயாட்சி கேட்பதை ஜனநாயகம் ஜனநாயகமென்று சொல்லும் அரசாங்கம் மறுக்கமுடியாது.

வரப்போகும் ஆண்டில் எங்கள் கட்சியின் கிளைகள் கிராமங்கள் தோறும் பரவவேண்டும். நமது கொள்கைக்குப் பணி செய்ய தியாகிகள் பலர் எழும்ப வேண்டும். கட்சியின் அங்கத்தினர் பெருகவேண்டும். எமது கொள்கையைப் பரப்ப வேண்டும். ஒவ்வொரு தமிழ் பேசுபவனும் தன் இனத்தின் விடுதலைக்காகச் சேவை செய்ய வேண்டும். அப்போது வெற்றி எங்கள் முன் வந்து நிற்கும்.. இவ்வியக்கத்திற் பணிசெய்யும் ஊழியர்களாகிய் நாம் நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கிறோம். எம் தலைமுறையில் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததிய-ினரின் கையிற் கொடுப்பது எமது கடன். எம்பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்தபட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாகவாகிலும் இருப்போமாக.

இன்று இங்கே கூடியிருக்கும் இப்பெருந்திரள், எம்மினம் புத்துயிர் கொண்டு எழும்புகின்றதென்பதற்கு அறிகுறி. சிங்கள அரசாங்கம் கிழக்குமாகாணத்தைக் கவருவதற்கு இத்திரள் எம்மினத்தின் எதிர்ப்பைக் காட்டுகிறது.

உங்களெல்லோர்க்கும் என் நன்றி. விசேசமாக வெளியூரிலிருந்து திருகோணமலைக்கு வந்தவர்களுக்கு என் நன்றி. அவ்விதம் வந்தவர்களை எங்கள் மரபின் கௌரவத்திற்கேற்ப அன்புடன் அனுசரித்த திருகோணமலை வாசிகளுக்கு என் விசேச நன்றி.

‘வாழ்க தமிழரசு’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை செல்வா நமக்காக விட்டுச்சென்ற உயில்!

தமிழீழம் தனிநாடாக உருவெடுக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது!

தந்தை செல்வாவின் தொண்ணூற்றேழாவது பிறந்ததினம் 31. 03. 1995ல் கொண்டாடப்பட்டது. அவரின் 18வது நினைவுதினம் 26. 04. 95ஆகும். இவ்வேளையில் அவர் ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் மிகமுக்கிய இடத்தைப்பெற்றவர் என்பதும் அவர் தமிழ், சிங்கள இனங்கள் உரிமையுடனும், அமைதியுடனும் வாழ சமஷ்டி அரசியல் முறையே உதவுமென கால்நூற்றாண்டுகாலமாக, 1949ம் ஆண்டு முதல் வற்புறுத்தியும் வாதாடியும் அகிம்சை வழியில் போராடியும் வந்து ஈற்றில் மனமுடைந்து தனித்தமிழ் நாடு தவிர வேறுவழியில்லையெனவும் சிங்களவர்களால் அழிந்து போவதைவிட அதற்காகப்போராடி மடிந்தாலும் மடிவோமே தவிர அடிமையாக வாழ முடியாது ஈழத்தமிழரினம் எனக்கூறி மறைந்தார். இதுவே தந்தை செல்வா ஈழத்தமிழர்களுக்கு விட்டுச் சென்ற உயில் (Last Will) எனக்கொள்ளலாம். அழிவுகளுக்கும், இடர்பாடுகளுக்கும் மத்தியில் யாழ் முற்றவெளியில் இன்றும் கம்பீரமாக நிமிர்ந்துநிற்கும் அவரது நினைவுத்தூபி போன்று அவர் கூறிய சமஷ்டிக்கோட்பாடு எத்தகைய விஞ்ஞுபனபூர்வமானதொன்று என்பதை பேரினவாதிகளும் ஏனைய அரசியல்வாதிகளும் எண்ணிப்பார்க்கவும், ஏன் ஏற்றுக்கொள்ளவும் மடியக்கூடியதொன்று என விளக்கப் பெறுவதற்கு கடந்த தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தங்களும் பாரிய உயிரிழப்புக்களும் அதனைத் தொடர்ந்து பல்வேறு அனர்த்தங்களும் மற்றும் ஈழத்தமிழினம் போராடி மடியினும், மடியுமேயன்றி ஒருபோதும், அடிமைகளாக வாழமாட்டார்கள். என்பதை நிரூபித்துக்காட்டும் வீரமறவர்களாகிய தமிழீழ விடுதலைப் புலிகள், அவர்களின் ஒப்பற்ற தலைவரும், தமிழீழத் தேசியத்தலைவருமாகிய திரு வே. பிரபாகரன் தலைமையில் ஆண். பெண்வீரர்களும், வீராங்கனைகளும் படைத்துவரும் வீரகாவியங்களும் உலக வரலாற்றில் வேறு எங்குமே இன்று காணமுடியாத தொன்றெனத் துணிந்து கூறிவிடலாம்.

தந்தை செல்வா எடுத்துக் காட்டிய பாதையில் உரிமையோடு வாழ்வு அல்லது மரணம் என்ற மாற்றமுடியாத உணர்வோடு மக்கள், மண், மொழி, உரிமைகளை நிலைநாட்ட நடைபெறும் போராட்டம் ஓர் உயர்ந்த நியாயமான தியாக வழிப் போராட்டமாகும். அன்று நடைபெற்ற அறவழிப்போராட்டங்கள் பலவீனப் பாதையெனத் தப்பர்த்தம் செய்யப்பட்டதாலும் தலைவர்களின் தடுமாற்றங்களாலும் தடம்புரண்டு விட்டது. அவ் அறவழிப்போராட்டம் தோற்ற இடத்தில் இருந்து இளைஞர்களால் முன்னெடுப்பதே மறவழிப்போராட்டம். இதனை வீரத்துடனும் தியாகத்துடனும். திடத்துடனும் திறமையாகவும் தலைமையேற்று வழிநடத்துபவர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் திரு வே. பிரபாகரனாவார். தந்தை செல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழர்களின் அரசியல் நிலையை வெளிப்படுத்தினார்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் அன்று நிலவிய பிரதேச வேற்றுமைகளை நீக்கி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி, மலைநாடு, என் வேற்றுமைகாட்டாது தமிழர்களையும் ஏன் இஸ்லாமியர்களையும் அமைப்பு மூலமாக ஒருங்கிணைத்து அவரின் அன்பையும் பெற்று விளங்கினார். இலங்கையின் இருபெரும் இனங்களுக்கிடையல் நிரந்தரமான அமைதியும், ஒற்றுமையும் நிலவவேண்டுமாயின் வடகிழக்கு மாகாணங்கள் அடங்கிய பிரதேசங்கள் தமிழீழ நாடு என்பது பூரணமாக அங்கீகரிக்கப்படுவது இன்றியமையாததொன்று. அதன் பின்னர் அங்கு எவ்விதமான ஆட்சிமுறை அமைதல் வேண்டுமென்பது அவ்விரு பெருஇனங்களின் தலைவர்களால் முடிவுசெய்யப்படவேண்டும். இதனைத் தந்தை செல்வா நன்குணர்ந்ததுமட்டுமன்றி, அதனை வற்புறுத்தியும் அதற்காக அறவழிப்போராட்டங்களை இடைவிடாது தொடர்ந்து 50களிலும், 60 களின் முற்பகுதிகளிலும் தாமே தலைமைதாங்கி நடாத்தினார். ஈற்றில் நோய்வாய்ப்பட்டு வயோதிப நிலையிலும் இறுதி வரை தமிழீழ மக்களின் எதிர்காலத்தைப்பற்றி எண்ணத்தவறிய தேயில்லை.

இன்றைய தமிழீழ தனிநாடாக (De Facto state) தன்னை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றதென்பது எவராலும் மறைக்கமுடியாத உண்மையாகும். இதனை இன்று உலகமே ஏற்றுக்கொண்டிருக்கிறதென்பதும், நிரூபணமாகிறது. தமிழீழம் என அழைக்கப்படும் வட - கிழக்கு மாகாணங்கள் அடங்கிய பிரதேசங்களில் குறிப்பிட்ட ஒரு திட்டவட்டமான பகுதியை தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கடற்பிரதேசங்கள் உட்பட வைத்திருக்கிறார்கள் என்பதை ஸ்ரீ லங்கா உட்பட உலகநாடுகள் நன்கு அறிந்தும், கண்டும், வருகின்றன. எனவே எதிர்காலத்தில் தனிநாடாகத் தன்னைப்பிரகடனம் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படக் காலதாமதம் ஏற்படினும், அசாத்தியமானதொன்றல்ல. இது தமிழீழ தேசிய இனத்தின் இறுதியான உறுதிநிலையையும் முடிவையும் பொறுத்ததொன்றாகும்.

தமிழ் மக்களின் சொந்த மண் காப்பாற்றப்படல் வேண்டும். அவர்களின் மொழி, பண்பாடு, சுதந்திரபாதுகாப்பு, உரிமைகள் என்பன சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படல் அவசியமாகும். இவற்றை மனதிற் கொண்டே தந்தை செல்வா தலைமையில் அன்று திட்டமிட்ட அரசகுடியேற்றங்கள் வடகிழக்கில் எதிர்ப்பைப் பெற்றதன்விளைவாகவே கிளிநொச்சி, வவுனிக்குளம் காப்பாற்றப்பட்டதுடன் அல்லை, கந்தளாய், பதவியா, மகாதிவிலு, கல்லோயா, மணலாறு போன்ற தமிழ், பிரதேசங்களில் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்தபோதும், கலவரங்களின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசபடைகளினால் அடித்துத் துரத்தப்பட்டடள்ளனர். திருமலையில் இன்றும் இந்நிலை நீடிக்கிறது. எனவேதான் இன்றைய மறவழிப்போராட்டம் தந்தை செல்வா கண்ட கனவாகிய தமிழரசு நனவாகும் பாதையில் இட்டுச்செல்லப்படுகிறது.

தந்தை செல்வா அன்று, பண்டா செல்வா ஒப்பந்தத்தையும், பின்னர் டட்லி- செல்வா ஒப்பந்தத்தையும் பூரண ஒப்பந்தங்களாகவோ, முடிந்த தீர்வுகளாகவோ கொண்டிருக்க மாட்டாரென்பது ஓர் தமிழ்ப்பிரதேசம் (A Tamil State) உருவாவதற்கு இவை இட்டுச்செல்லும் என உணர்ந்திருத்தல் வேண்டும். இவ்வாறு ஓர் திட்டவட்டமான எல்லைகளைக்கொண்ட பாரம்பரியப்பிரதேசம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே அங்கு நடைபெறுவது கூட்டாட்சியா∴ பிரதேசசுயாட்சியா? அல்லது அனைத்தும் ஏற்படாதவிடத்து பிரகடனப்படுத்தக்கூடியது தனிநாடா என்பது தெளிவாகும்.

ஓர் தேசிய இனம் தன்னை நிலைநாட்டிக்கொள்வதாயின் முதற்கண் அதற்கு ஒருபாரம்பரியப்பிரதேசம் (Traditional Homeland) சொந்தமாக இருத்தல் வேண்டும். அடுத்து சொந்தமொழியிலும், தனியான பண்பாடு என்பனவும், இருத்தல்வேண்டும். மண்ணும்மொழியும் இழந்தபின்னர் ஒரு இனம் தன்னை தேசியஇனமாக நிலைநாட்டமுடியாததாகும். எனவேதான் முதன்முதல் தந்தைசெல்வா ஈழத்தமிழர்களின் எதிர்காலம் நிரந்தர ஆளுமையை நிலைநாட்ட குடியேற்றல், மொழி ஆகியவற்றுக்கான உரிமைப்போராட்டங்களை மிகவும் தீவிரமாகவும் வெகுசன ஆதரவுடனும் தொடர்ந்து நடாத்தினார். ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் கிராமம் கிராமமாக மக்களை அணிதிரட்டி பல்வேறு அரசியற்போராட்டங்களையும் சட்ட மறுப்புக்களையும் அறவழியில் நடாத்தியது மட்டுமன்றி தனது முயற்சிகள் தோல்விகண்டதாயினும், எதிர்காலச் சந்ததியினர் போராடியேனும் அழிந்தாலும் அழிவார்களேயன்றி சிங்களவர்களுக்கு அடிமைப்பட்டு வாழமாட்டார்கள். போராட்டமென்பது, எந்தகையது என்பதை நாம் அறிவோம். அதுவில்லங்கமானதாயினும், அடிமைத்தனத்திலிருந்து மீளாது போயின், மிஞ்சுவது இன அழிவாகும். அது உண்மையென தந்தை செல்வா கூறியவை. எத்தகைய தீர்க்கதரிசனமுடையதென்பது இன்று காணக் கூடியதாக உள்ளது.

இலங்கை இந்திய அரசுகளின் கொடுமைகளையும், இனப்படு கொலைகளையும், துணிந்து எதிர்த்து நின்று போராடிவரும் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம்.
எத்தகைய தியாகங்களை ஆற்றி, திடமுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவர். தந்தை செல்வாவின் ஆத்மாவும் அவர்களை நிச்சயம் வாழ்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் மலையகம் தந்த மூத்த பத்திரிகையாளரான எஸ். எம். கார்மேகம் கால் நூற்றாண்டு காலம் வீரகேசரியில் பணியாற்றவர்.**

திரு. கார்மேகம் 1969ம் ஆண்டு இலங்கைத்தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தை விட்டு விலகுவது என்று ஏப்ரல் 13 திகதியன்று உடுவிலில் நடைபெற்ற தேசிய மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவின்படி தந்தை செல்வாவை கொழும்பு இல்லத்தில் சந்தித்து எடுத்த பேட்டி வீரகேசரியில் வெளியாகியது. அதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

எம் மக்களின் உரிமைகள் சிலவற்றை சட்டபூர்வமாக நிலைநாட்டவும் குடியேற்றம் முதலியவற்றால் ஏற்பட்ட ஆபத்தைக் குறைக்கவும், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமலில் ஆட்சேபத்திற்குரிய அம்சங்களை நீக்கவும், தமிழ் அரசாங்க ஊழியர்கள் பிரச்னை ஓரளவு தீர்க்கவும் நாம் அரசில் அங்கம் வகித்தது ஓரளவு உதவியது எனினும், சிங்கள அரசியல்வாதிகளும், கட்சி ஒப்பிச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது கடந்த நான்காண்டு கால அனுபவத்தில் உறுதியானது. தவிர, தமிழ் மக்களின் கண்ணோட்டமும் கூட இக்கால கட்டத்தில் உரிமைப் போரைப்பற்றிச் சிந்தியாது தனிப்பட்ட சலுகைகளை பெறுவதிலேயே நாட்டம் கொண்டது. இதனால் மீண்டும் போராட்டப்பாதையில் மக்களைத் திசைதிருப்ப சிரமப்பட வேண்டி வரும்.

உடுவில் தீர்மானத்தைத் தொடர்ந்து உங்கள் கட்சியின் எதிர்காலத்திட்டங்கள் பற்றி தமிழ்ப்பேசும் மக்களுக்கு குறிப்பாக ஏதும் சொல்ல விரும்புகிறீர்களா எனக் கேட்டதற்கு தமிழ்மக்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, நம் பாதை கரடு முரடானது. அதை நாம் சந்தோசத்தோடும் விசுவாசத்தோடும் கடந்து செல்ல வேண்டும் எனச் செல்வா பதிலளித்தார். நம் மக்களின் சுயாதீனம் மிக அருமையானது. அதைப் பெற்றுக்கொள்வது சுலபம் அல்ல என்றார். கடந்த நான்கு வருடச் சீவியம் தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சி முறையில் சுயாதீனம் இல்லை என்று துலாம்பரமாக உணர்த்தி விட்டது. எமது இலக்காகிய சமஸ்டி அரசியல் தான் நமக்கு சுயாதீனம் கொடுக்கும். அதை ஈற்றில் அடைந்தே தீருவோம். அதற்காக என்ன துன்பங்களை அடைய நேரிடும் என்பதை இப்போது விவரமாகச் சொல்ல முடியாது என்றார்.

**கேள்வியும் - பதிலும்:**

**இந்த அரசாங்கம் மாறி வேறு அரசாங்கம் பதவிக்கு வந்தால் தமிழ் மக்களுக்குச் சுயாதீனம் கிடைத்து விடுமா?**

இலங்கை இப்போதிருக்கும் கோலத்தில் சிங்கள மக்கள் யாரும் எமக்குச் சுயாதீனம் கொடுக்க ஆயத்தமாக இல்லை.

**தமிழர் சுயாதீனம் எப்படி ஏற்பட முடியும் என்று நினைக்கிறீர்கள்?**

1947க்கு முன் தன்னிடம் அடிமையாக இருந்த நாடுகளுக்கு பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் சுயாதீனம் கொடுத்து விலகிக்கொள்ளும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் பிரித்தானிய தேசம் தன் சுய விருப்ப அடிப்படையில் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயாதீனம் கொடுத்து விலகிக் கொண்டது. இன்னொரு உதாரணம் கூடக் கூற முடியும். அயர்லாந்து தேசத்தை பிரித்தானிய தேசம் பல நூற்றாண்டுகளாய் அடிமைப்படுத்தி ஆண்டு வந்தது. அயர்லாந்து மக்கள் தங்கள் சுய ஆளுகையைக் கோரி நின்றார்கள். கடைசியில் முதலாம் உலக மகாயுத்தம் முடிந்ததும் பிரித்தானிய தேசம் அயரல-ாந்துக்கு சுயாட்சி கொடுத்தது. அயர்லாந்து மக்கள் தங்கள் கோரிக்கையை விட்டு அணுகளவும் விலக மறுத்து விட்டனர். அதுபோலவே தமிழ்மக்கள் விடாப்பிடியாக சுயாதீனம் கோரி நிற்க வேண்டும்.

**தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் விட்டுக் கொடுக்க நேரிடும் என்று திடமாக நம்புகிறீர்களா?**

உலகில் என்னென்ன மாற்றங்கள் வரக்கூடும் என்று கூற முடியாது. இறுதியில் இலங்கை அரசாங்கமே தமிழ்ப்பிரதேசத்துக்கு சுயாதீனம் அளிப்பதே அப்பிரதேச மக்களுக்கும் ஏனையோருக்கும் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே வழி என்பதை உணரக்கூடும். அந்த நாள் வரும் வரைக்கும் நாம் பொறுமை இழக்காமலும், இலக்கைக் கைவிடாமலும் இருக்க வேண்டும்.

எமது நிலைமையை முடிவு பண்ணும் பொறுப்பை மக்களிடம் விட்டு விடுவோம். விரைவில் பொதுத்தேர்தல் வரும். அப்போது எம்மை நாடாளுமன்றத்தில் சுயேச்சையாக இயங்கும் ஒரு கட்சியாக செயல்பட அனுமதிக்கும்படி தமிழ் மக்களிடம் கேட்போம். அவர்களின் தீர்ப்பின்படியே இயங்குவோம்.

**மாவட்ட சபை இலட்சியத்தைக் கைவிட்டு விட்டீர்களா?**

இலங்கையில் உள்ளாட்சி ஜனநாயம் நிலைக்க வேண்டும் என்றால் மாவட்ட சபைகள் மசோதாவைப் போல ஒரு சட்டம் வகுக்கப்பட வேண்டும். இல்லையேல் வெள்ளையராட்சியில் நடந்த மாதிரி கச்சேரிகள் நடைபெற வேண்டும். கச்சேரி முறைகள் ஜனநாயக முறைக்கு ஏற்றதில்லை என்று டாக்டர் என். எம். பெரேரா போன்றவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே கச்சரிமுறை ஒழிந்து, உள்ளாட்சி மாவட்ட சபைகள் கச்சேரிகள் செய்த வேலைகளைச் செய்ய வேண்டும். உள்ளாட்சி மாவட்ட சபைகள் என்று நான் கூறுவது இப்போது இருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களை அல்ல. ஸ்தல ஸ்தாபனங்கள் பொதுவாக சுகாதாரம், போக்குவரத்து முதலிவைகளை மட்டுமே கவனிக்கும். ஆகவே உள்ளாட்சிச் சபைகள் மத்திய அரசின் கடமைகளை அந்தந்த பிரதேசங்களிலேயே பொறுப்பேற்றுச் செய்யும்.மலைநாட்டு மக்கள் நிலை இப்போதிருப்பது போல் இருக்க மாட்டாது. மாற்றம் அடையவே செய்யும். அம் மக்களை வடக்கு கிழக்கில் வந்து குடியேறும்படி அழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாசிரியர்கள் பற்றி.....





## திரு. ஐ. தி. சம்பந்தன்

யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஐ. தி. சம்பந்தன் (மூர்த்தி) ஒரு தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, அரசியல்ஆய்வாளர், எழுத்தாளன், சமூக சேவையாளன், கலை ரசிகன், சமயவாதி, ஆராச்சியாளர். இளமையிலிருந்தே எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் யாழ் எழுத்தாளர் சங்கத்தில் இணைந்தார். 1964ல் திரு. சரவணபவன் M.A. (சிற்பி) அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த கலைச் செல்வி என்னும் கலை இலக்கிய சஞ்சிகையில் 1964லிருந்து இரு ஆண்டுகள் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணத்தில் சுடரோளி அச்சகத்தை நிறுவி சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் மூலம் பல நூல்களைவெளியிட்டார். பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் ஐயா அவர்களின் தமிழ் தந்த தாதாக்கள்', 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' என்னும் நூல்களை வெளியிட்டுப் பாராட்டைப்பெற்றவர். 'குமிதினி கொலைகள்', 'போராடுவோம்' போன்ற வெளியீடுகளை வெளிக் கொணர்ந்தார். இலண்டனில் சுடரொளி வெளியீடுக் கழகத்தை நிறுவி ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் 12 நூல்களுக்கு வெளியீட்டு விழாநடாத்தி எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். இலண்டன் சுடரொளி இதழின் ஆசிரியருமாவார். வெளிவரவுள்ள நூல்கள்: 'இலங்கைத்தமிழ் ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்', 'வருக தமிழர் பொற்காலம்' (கவிதைத் தொகுப்பு), 'டீ. எஸ். தொடக்கம் சந்திரிகா வரை'.

## திரு. வே. ச. குணரத்தினம்

யாழ்ப்பாணம் கோப்பாய் இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது ஜேர்மனியிலிருந்து தமிழப் பணியாற்றிவருகின்றார். தந்தை செல்வாவின் அரசியல் கொள்கையை ஆய்வு செய்துவருகின்றார். ஈழத் தமிழர்களின் ஒளிவிளக்காக தோன்றிய தந்தை செல்வாவின் - தாயகக் கோட்பாட்டின் வழிநடை பயின்ற ஆயிரம் தொண்டர்களில் ஒருவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனும் அதன் தலைவர்களாகிய தந்தை செல்வா, கோப்பாய்கோமகன் வன்னியசிங்கம் ஆகியோருடன் நெருக்கமாகப் பழகியவர். அறவழிப் போராட்டங்களில் பங்குபற்றியவர். அரசியல் விவாதங்களில், கருத்தரங்குகளில் அதிக ஈடுபாடுகொண்ட இவர் ஓர் இலக்கியவாதியும் ஆவார். வீரகேசரி, தினகரன், சுதந்திரன் ஆகியவற்றில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். பேர்லின் நலன்புரி கழகத்தின் ஆரம்ப கால தலைவர். 1993ல் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் 3வது உலகளாவிய மாநாட்டை சிறப்புடன் நடத்தியவர். தமிழ்நாடு மூதறிஞர் குழுவனால் உலகத்தமிழர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். தமிழும் உலகமும் என்ற நூலின் ஆசிரியர். 'தாயக நிகழ்வுகள்', 'கடல்கடந்து கால்நூற்றாண்டு' ஆகிய இவரது இருநூல்கள் வெளிவரவுள்ளன.

125/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org